# அத்தியாயம் 1


## பொருளாதாரம், விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

### 1.1 பொதுநோக்கு

**இலங்கைப் பொருளாதாரம் பலத்த சவால்மிக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிலைமைகளுக்கெதிராக 2009இல் 3.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து அதன் மீளெழுச்சி நிரூபிக்கப்பட்டது. இக் கவர்ச்சிகரமான செயலாற்றம் இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டிலிருந்து பொருளாதாரத்தால் காட்டப்பட்ட உறுதியான மீட்சியால் இயலச் செய்யப்பட்டு இறுதிக் காலாண்டில் 6.2 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியை ஏற்படுத்தியது.** வெளிநாட்டுத்துறைப் பக்கத்தில், இலங்கை உலகளாவிய நிதியியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் கசிந்த தாக்கங்களால் தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகிய வேளையில் உள்நாட்டுத் துறையில், அநேகமாக மூன்று தசாப்தங்களுக்கும் கூடுதலாக நாட்டைப் பாழாக்கிய உள்நாட்டுப் போர் இவ்வாண்டின் முற்பகுதியில் தீர்க்கமான நிலையை அடைந்தது. பாதகமான உலகளாவிய நிலைமைகளிலிருந்து ஏற்பட்ட குறுகியகால மூலதனம் மீளப் பெறப்பட்டமை நாட்டின் வெளிநாட்டு ஒதுக்குகள் மற்றும் திரவத்தன்மை முகாமைத்துவத்தின் மீது பாரிய தளர்வை ஏற்படுத்தியது. உலகக் கேள்வியிலான மந்தநிலை மற்றும் இதனால் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட சுருக்கம் அதுபோல் உள்நாட்டுப் பொருளாதாரச் செயற்பாட்டிலான மெதுவடைவு அரசின் அரசிறையில் எதிர்க்கணியத் தாக்கத்தைக் கொண்டிருந்தது. இத்துடன், பாதுகாப்பு, வட்டிக் கொடுப்பனவுகள், சம்பளங்கள் மற்றும் கூலிகள், அது போல் அவசர மீள்குடியேற்றம், புனருத்தாபனம் மற்றும் புத்தாக்கச் செயற்பாடுகள் மீதான உயர் அரச செலவினம் அரச நிதிகள் மீது பாரிய சுமையை ஏற்படுத்தியது. நீடித்த போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டமை மற்றும் ப.நா.நிதியத்தால் துணைநில் ஒழுங்குமுறை ஒப்புதலளிக்கப்பட்டமை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் உள்ளிட்ட மத்திய வங்கி மற்றும் அரசால் மேற்கொள்ளப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் உரிய நேரத்திலான கொள்கை நடவடிக்கைகள் உள்நாட்டுப் பொருளாதாரத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்கு காரணமாக இருந்தன. பொருளாதாரத்திலான அதிகரித்த முதலீட்டாளர் நம்பகத்தன்மை வெளிநாட்டு நிதியியல் உட்பாய்ச்சல்களில் கூர்மையான திருப்பு முனையைக் கண்டதுடன் 2009 இறுதியில் சென்மதி நிலுவையில் ஐ.அ.டொலர் 2.7 பில்லியன் கொண்ட முன்னெப்போதும் எதிர்பார்க்கப்படாத மிகையைப் பதிவு செய்து வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள் 2009 மாச்சில் தாழ்ந்த மட்டமான ஐ.அ.டொலர் 1.1 பில்லியனிலிருந்து 2009 இறுதியில் ஐ.அ.டொலர் 5.1 பில்லியன் கொண்ட உயர் சாதனை மட்டத்திற்கு உயர்த்தியது.

**2009இல் குறிப்பிடத்தக்க சாதனையாக கடந்த சில ஆண்டுகளில் இலங்கை மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை மற்றும் உலக பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி காரணமாக பணவீக்கத்தில் ஏற்பட்ட கூர்மையான மெதுவடைவு விளங்கியது.** 2008 யூனில் 28.2 சதவீதத்தை அடைந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தால் அளவிடப்படும் பணவீக்கம் 2009 இறுதியில் 4.8 சதவீதத்திற்கு பெருமளவில் வீழ்ச்சியடைந்து 2009இல் 1985 இற்குப் பின்பு பதிவு செய்யப்பட்ட 3.4 சதவீதம் கொண்ட சராசரி வீதத்தைப் பதிவு செய்தது. இது உலகப் பொருளாதார வீழ்ச்சியால் பாதிப்படைந்த உள்நாட்டு பொருளாதாரத்திற்கு உதவுவதற்கு இலங்கை மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை நிலையைத் தளர்த்துவதற்கு இயலச் செய்தது. பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் மாதாந்த அனுமதிப்

வரைபடம் 1.1 காலாண்டு வளர்ச்சி மற்றும் தொழிலின்மை





பங்கை விஞ்சி வங்கிகளுக்கிடையேயான வீதத்திற்கான உயர் உச்ச அளவாக பயனுறும் விதத்தில் பணிபுரியும் போது இலங்கை மத்திய வங்கியுடனான நேர்மாற்று மீள்கொள்வனவு மீது பிரயோகிக்கத்தக்க தண்ட வீதம் 2009 சனவரியின் 19 சதவீதத்திலிருந்து படிப்படியாகக் குறைக்கப்பட்டதுடன் இது 2009 மேயில் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்துடன் இணங்கியிருந்தது. மேலும், மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்கள் முறையே 7.5 சதவீதத்திற்கும், 9.75 சதவீதத்திற்கும் பல வழிமுறைகளில் குறைக்கப்பட்டன. கொள்கை வட்டி வீதங்களில் கணிசமான குறைப்பிற்கு பதிலிறுத்தும் வகையில் காலந்தாழ்த்தி நிகழ்ந்த போதிலும் சந்தை வட்டி வீதங்கள் பதிலிறுத்தன. வட்டி வீதங்களின் உறுப்பு அமைப்பில் குறிப்பிடத்தக்க கீழ் நோக்கிய சீராக்கம் காணப்பட்டது. எனினும், தனியார் துறையிலிருந்து கொடுகடனுக்கான கேள்வி, உள்நாட்டு மற்றும் உலகப் பொருளாதாரங்களின் மந்தமான மீட்சி அது போல் வங்கிகளால் மேற்கொள்ளப்பட்ட கடன் வழங்கலிலான எச்சரிக்கையான அணுகுமுறை காரணமாக எதிர்பார்த்தவாறு வளர்ச்சியடையவில்லை. இதன் விளைவாக, தனியார் துறைக்கான கொடுகடன் உட்பாய்ச்சல்கள் தொடர்ந்து குறைவாகவே காணப்பட்டன. எனினும், இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் குறைவாக தொடர்ந்து காணப்பட்ட நாணய வளர்ச்சி தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் முன்னெப்போதும் நிகழாத விரிவாக்கத்துடன் அதிகரிக்கத் தொடங்கியதுடன் இதைக் கட்டுப்படுத்துவது நாணய முகாமைத்துவத்திற்கு சவால்மிக்கதாக வந்துள்ளது.

**அரசால் உதவப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் கொள்கை நடவடிக்கை உலகளாவிய நிதியியல் மற்றும் பொருளாதார நெருக்கடியின் தீமைகள் மற்றும் இலங்கை நிதியியல் முறைமையில் வைப்புக்களை ஏற்கும் அதிகாரமளிக்கப்படாத சில உள்நாட்டு நிறுவனங்கள் செயலிழந்தமையால் ஏற்படும் தீமைகளைத் தணிப்பதில் வெற்றியடைந்தது.** பலமான ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பு மற்றும் காலத்திற்குக் காலம் முன்வைக்கப்பட்ட அதிகரித்த இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகள் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் பக்கங்களிலிருந்து வரும் அதிர்வுகளைத் தாங்கிக் கொள்வதற்கு நிதியியல் முறைமையை இயலச் செய்ததுடன் நிதியியல் முறைமையில் நம்பத்தன்மையைப் பேணுவதையும் இயலச் செய்தது. எனினும், உள்நாட்டுப் பொருளாதாரம் மீது உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியின் தாக்கங்கள் கசிந்தமை வங்கிகளுக்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்கும் சவாலை ஏற்படுத்தியது. இச் சவால்மிக்க சூழலில் சந்தை நிலைமைகள் காரணமாக கொடுகடன் இடர்நேர்வு அதிகரித்த போதிலும் நிதியியல் நிறுவனங்கள் தொடர்ந்து இலாபகரமானதாகவும் ஓரளவிற்கு சிறந்த மூலதனத்தைக் கொண்டதாகவும் காணப்பட்டன.

**சவால்மிக்க உள்நாட்டு மற்றும் உலகளாவிய சூழல் 2009இல் இறைத் தொழிற்பாடுகளில் ஒட்டுமொத்தப் பின்னடைவை விளைவித்தது.** இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு அரசிறை வழிமுறைகளுக்கு மத்தியிலும் பொருளாதாரச் செயற்பாடுகளிலான மெதுவடைவு மற்றும் இறக்குமதிகளிலான சுருக்கம் காரணமாக அரசிறையில் குறிப்பிடத்தக்க பற்றாக்குறை காணப்பட்டது. இத்துடன், போரின் தீர்க்கமான கட்டத்தில் பாதுகாப்பு தொடர்பான இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அவசர புனருத்தாபனம் மற்றும் மீள்நிர்மாண செயற்பாடுகள் அது போல் அதிகரித்த சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள், தொடர்ந்து இடம்பெறும் அரச முதலீட்டுச் செயற்றிட்டங்கள் மீதான செலவினம் என்பன காரணமாக அரச செலவினம் அதிகரித்தது. இதன்படி, வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை திருத்தியமைக்கப்பட்ட இலக்கான மொ.உ.உற்பத்தியின் 7.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2009இல் மொ.உ.உற்பத்தியின் 9.8 சதவீதத்திற்கு விரிவடைந்து கடன்பாட்டுத் தேவைப்பாட்டில் அதிகரிப்பிற்கு இட்டுச் சென்றது. பற்றாக்குறையை நிதியிடுவதில், 2009இன் முற்பகுதியில் உள்நாட்டு மூலங்கள் மீது கூடியளவிற்குத் தங்கியிருந்தமை காணப்பட்டது. எனினும், இவ்வாண்டின் பிற்பகுதியில் வெளிநாட்டு நிதியிடலின் கிடைப்பனவு முன்பு உயர் வீதங்களில் திரட்டப்பட்ட உள்நாட்டுப் படுகடன் சிலவற்றைத் தீர்ப்பனவு செய்வதை இயலச் செய்தது. பெயரளவு மொ.உ.உற்பத்தியிலான வளர்ச்சியுடன் சேர்ந்த உயர் நிதியிடல் தேவைப்பாடு மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதத்தில் அதிகரிப்புக்கு இட்டுச் சென்றதுடன் அண்மைக் காலத்தில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கை நேர்மாறாக்கியது.

**நீண்டகாலம் நீடித்திருந்து போர் முடிவுக்கு வந்தமை மற்றும் சமாதானம் மீள ஏற்படுத்தப்பட்டமை பொருளாதாரச் சுபீட்சத்தில் பாரிய வெற்றித் திட நம்பிக்கையை வழங்கியதுடன் பொருத்தமான கொள்கைகளால் உதவப்பட்ட நீண்டகாலம் நிலைத்து நீடித்திருக்கக் கூடிய அபிவிருத்திக்கான பலமான அடிப்படையை வழங்குகிறது.** சமாதானம் மீள ஏற்படுத்தப்பட்டமை மூலம்

வரைபடம் 1.2 பணவீக்க அசைவுகள்



உருவாக்கப்பட்ட வாய்ப்புக்கள் தற்போதைய உலகளாவிய பொருளாதார மீட்சி மூலம் பூர்த்தி செய்யப்படும். தற்போதைய குறைந்த பணவீக்கம் மற்றும் வட்டிவீத அமைப்பும் பொருளாதாரச் செயற்பாடுகளை அதிகரிப்பதற்குப் பொருத்தமான சூழலை வழங்குகிறது. இவ் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்வதற்கு விரைந்த வளர்ச்சியைத் தடுக்கும் தற்போதைய குறைபாடுகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும். பொருளாதாரத்தின் உற்பத்தி இயலளவை விரிவாக்குவதற்கும் பொருளாதாரச் செயற்பாடுகளின் வினைத்திறனையும் உற்பத்தித் திறனையும் மேம்படுத்துவதற்கும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு திட்டமிடப்பட்ட உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களை விரைவுபடுத்த வேண்டும். அதேவேளை ஒட்டுமொத்த பொருளாதார வினைத்திறனை அதிகரிப்பதற்கு அரச நிதியங்கள் மீது பாரிய சுமையை ஏற்படுத்தும் அரச தொழில் முயற்சிகளின் சீர்திருத்தம் உள்ளிட்ட நீண்ட காலமாகத் தேவைப்பட்ட அமைப்பு ரீதியிலானதும் நிறுவன ரீதியிலான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். இறைத் திரட்சிச் செயல்முறையையும் பலப்படுத்த வேண்டும். ஒட்டுமொத்த பொருளாதார அபிவிருத்தியில் தனியார் துறையின் பங்கு மற்றும் பங்களிப்பு ஆற்றல்மிக்க ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புடன் முன்னேற்றமடைந்த முதலீடு மற்றும் வியாபாரச் சூழ்நிலையூடாக பலப்படுத்தப்பட வேண்டும். பலமான அபிவிருத்தித் திட்டமில் மற்றும் கண்காணிப்புச் செயல்முறையை நிறுவுதல் செயற்றிட்டங்களுக்கு முன்னுரிமையளிப்பதற்கு உதவுவதுடன், தாமதங்களைத் தவிர்த்து வளங்களின் மிகவும் அனுகூலமான பகிர்ந்தளிப்பை உறுதிப்படுத்தும். குறுகியதிலிருந்து நடுத்தர காலம் வரை விலை உறுதிப்பாட்டைப் பேணும் அதேவேளை உயர் வளர்ச்சி வளையியின் பாதைக்கு நகர்வது முக்கிய கொள்கைச் சவாலாக தொடர்ந்து விளங்குகிறது. இது தொடர்பாக, மீட்சி உத்வேகமடையத் தொடங்கி பொருளாதாரத்தில் ஏற்படும் பணவீக்க அழுத்தங்களைத் தவிர்ப்பதால் இறை மற்றும் நாணயக் கொள்கைகளுக்கு இடமளிக்கப்படுவதை படிப்படியாகவும் எச்சரிக்கையுடனும் பிரித்தெடுப்பதற்கான தேவையை இனங்காண்பது மிக முக்கியமானதாகும்.

## 1.2 2009இல் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகள், உறுதிப்பாடு மற்றும் கொள்கை பதிலிறுப்புக்கள்

### உண்மைத்துறை அபிவிருத்திகள்

**பல எண்ணிக்கையான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அதிர்வுகளுக்கு மத்தியிலும் இலங்கைப் பொருளாதாரம் 2009இல் உண்மை நியதிகளில் 3.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தமை பாராட்டத்தக்க சாதனையாகும்.** பொருளாதாரம் முதலாம் காலாண்டில் 1.6 சதவீதம் மட்டும் கொண்ட வளர்ச்சியிலிருந்து நான்காம் காலாண்டில் 6.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்யுமளவிற்கு பலமாக மீட்சியடைந்தது. மாறுபட்ட மட்டங்களில் அநேகமாக பொருளாதாரத்தின் அனைத்து துறைகளையும் பாதித்த பாதகமான உலகளாவிய அபிவிருத்திகளின் தாக்கம் மற்றும் வேளாண்மை உற்பத்தியைக் குறைத்த சாதகமற்ற உள்நாட்டு வானிலை நிலைமைகள் முதலாம் காலாண்டில் குறைந்த வளர்ச்சி வீதங்களை ஏற்படுத்தியது. எனினும், இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டிலிருந்து பொருளாதாரம் போர் முடிவுற்றமை மற்றும் உலகப் பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்மை என்பவற்றால் உந்தப்பட்டு விரைந்த மீட்சியை எடுத்துக்காட்டியது.

**2009இல் பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளும் பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களிப்புச் செய்தன.** வேளாண்மைத்துறை 2008இன் 7.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் முக்கியமாக தேயிலை மற்றும் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட சுருக்கம் காரணமாக 3.2 சதவீதம் கொண்ட தாழ்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்தது. எனினும், வேளாண்மைத் துறையினுள், மீன்பிடி துணைத்துறை மீன்பிடி மீதான பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதுடன் அதிகரித்த கரையோர மீன்பிடியால் உந்தப்பட்டு 6.9 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. கைத்தொழில்துறை மெதுவடைந்து 2008இன் 5.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 4.2 சதவீதமான வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தது. மின்வலு, வாயு மற்றும் நீர் தவிர்ந்த கைத்தொழிலின் அனைத்துத் துணைத்துறைகளும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பன்னாட்டு மற்றும் உள்நாட்டுச் சந்தைகள் இரண்டிலுமான கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் முக்கிய காரணமாக தாழ்ந்த வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தன. பணிகள்துறை 2009இல் 3.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து மொத்தப் பொருளாதார வளர்ச்சிக்கு 55 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்கிறது. பணிகள் துறையில் ஆகக் கூடிய பங்களிப்பாளரான மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத் துணைத்துறை பெரும்பாலும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வர்த்தகத்தில் ஏற்பட்ட வளர்ச்சியின் சுருக்கம் காரணமாக மந்தமான செயலாற்றத்தைப் பதிவு செய்தது. போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் துணைத் துறையும் தொலைத் தொடர்பூட்டல் பணிகள் மற்றும் சரக்குக் கையாளலிலான குறைந்த வளர்ச்சி காரணமாக குறிப்பிடத்தக்களவில் மெதுவடைந்தது. உள்நாட்டுப் பொருளாதாரச் செயற்பாடுகளிலான மெதுவடைவு 2008இன் 5.4 சதவீதத்திலிருந்து 2009இல் 5.8 சதவீதம் கொண்ட தொழிலின்மை வீதத்தில் (வட மாகாணம் தவிர்ந்த) சிறிய அதிகரிப்பை ஏற்படுத்தியது.

**2009இல் வேளாண்மைத் துறையிலான குறைந்த வளர்ச்சி பல காரணங்களால் ஏற்பட்டது.** இவ்வாண்டின் முற்பகுதியில் தேயிலை பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களில் தேயிலைத்துறை வரட்சியால் பாதிக்கப்பட்டிருக்கையில் காலம் தாழ்த்திய பருவக்காற்று காரணமாக நெற்துறை சிறுபோகத்தில் பாரியளவில் பாதிப்புக்குள்ளானது. 2009இல் தெங்கு உற்பத்தி முன்னைய ஆண்டில் நிலவிய வானிலை நிலைமைகளின் காலம் தாழ்த்திய விளைவின் முக்கிய காரணமாக வீழ்ச்சியடைந்தது. மோசமான வானிலை நிலைமைகள் காரணமாக கரும்பு வழங்கலிலான வீழ்ச்சியால் சீனி உற்பத்தியும் இவ்வாண்டு வீழ்ச்சியடைந்தது. இருந்த போதிலும், இறப்பர், மீன் மற்றும் கால்நடை, பெரும்பாலும் சோளம் மற்றும் பெரிய வெங்காயம் போன்ற ஏனைய களப்பயிர்களின் துணைத்துறைகளின் செழிப்பான செயலாற்றங்கள் 2009இல் வேளாண்மைத் துறையில் மிதமான வளர்ச்சியை அடைவதற்கு உதவின.

**வேளாண்மைத்துறை சிறந்த விலைகளிலிருந்து நன்மையடைந்தது.** 2009இல் தேயிலை விலைகளிலான செழிப்பான தன்மை உற்பத்தியாளர்கள் தாழ்ந்த உற்பத்தியின் தாக்கத்தைத் தணிப்பதற்கு உதவியது. சிறுபோக அறுவடை வீழ்ச்சியடைந்தமையால் நெல்லின் பற்றாக்குறை காரணமாக நெல்லின் விலைகள் தொடர்ந்து உயர்ந்தளவில் காணப்பட்டன.

அட்டவணை 1.1

**நிலையான விலைகளில் (2002) கைத்தொழில் மூலங்களின்படி மொத்தத் தேசிய உற்பத்தி**

| துறை | பெறுமதி (ரூ. மில்லியன்) | | மொ.உ.உ இன் பங்காக (%) | | வீத மாற்றம் (%) | | மாற்றத்திற்கான பங்களிப்பு (%) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2008(அ) | 2009(ஆ) | 2008(அ) | 2009(ஆ) | 2008(அ) | 2009(ஆ) | 2008(அ) | 2009(ஆ) |
| **வேளாண்மை** | **285,897** | **294,921** | **12.1** | **12.0** | **7.5** | **3.2** | **15.1** | **10.8** |
| வேளாண்மை, விலங்கு வளர்ப்பு, காடாக்கல் | 258,881 | 266,033 | 10.9 | 10.9 | 7.3 | 2.8 | 13.2 | 8.5 |
| மீன்பிடித் தொழில் | 27,016 | 28,888 | 1.1 | 1.2 | 9.9 | 6.9 | 1.8 | 2.2 |
| **கைத்தொழில்** | **672,791** | **701,129** | **28.4** | **28.6** | **5.9** | **4.2** | **28.3** | **33.8** |
| சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 48,090 | 52,030 | 2.0 | 2.1 | 12.8 | 8.2 | 4.1 | 4.7 |
| தயாரிப்பு | 413,681 | 427,334 | 17.5 | 17.4 | 4.9 | 3.3 | 14.6 | 16.3 |
| மின்வலு, எரிவாயு, நீர் | 56,847 | 58,974 | 2.4 | 2.4 | 2.7 | 3.7 | 1.1 | 2.5 |
| கட்டடவாக்கம் | 154,173 | 162,790 | 6.5 | 6.6 | 7.8 | 5.6 | 8.4 | 10.3 |
| **பணிகள்** | **1,406,813** | **1,453,254** | **59.5** | **59.3** | **5.6** | **3.3** | **56.6** | **55.4** |
| மொத்த மற்றும் சில்லறை வியாபாரம் | 571,911 | 570,152 | 24.2 | 23.3 | 4.7 | -0.3 | 19.4 | -2.1 |
| சுற்றுலா விடுதிகளும் உணவகங்களும் | 8,741 | 9,901 | 0.4 | 0.4 | -5.0 | 13.3 | -0.3 | 1.4 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் | 310,029 | 330,390 | 13.1 | 13.5 | 8.1 | 6.6 | 17.5 | 24.3 |
| வங்கியியல், காப்புறுதி மற்றும் உண்மைச்சொத்து | 206,048 | 217,819 | 8.7 | 8.9 | 6.6 | 5.7 | 9.5 | 14.0 |
| வதிவிட உரிமை | 73,137 | 74,051 | 3.1 | 3.0 | 1.1 | 1.3 | 0.6 | 1.1 |
| அரசபணிகள் | 181,051 | 191,778 | 7.7 | 7.8 | 5.7 | 5.9 | 7.4 | 12.8 |
| தனியார் பணிகள் | 55,896 | 59,164 | 2.4 | 2.4 | 6.5 | 5.8 | 2.6 | 3.9 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **2,365,501** | **2,449,304** | **100.0** | **100.0** | **6.0** | **3.5** | **100.0** | **100.0** |
| வெளிநாட்டிலிருந்தான தேறியகாரணி வருமானம் | -56,330 | -28,332 | | | -131.2 | 49.7 | | |
| **மொத்த தேசிய உற்பத்தி** | **2,309,172** | **2,420,972** | | | **4.6** | **4.8** | | |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை

(ஆ) தற்காலிகமானவை

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

சோளம் மற்றும் தேங்காய் எண்ணெய்யின் விலைகள் சுங்கத் தீர்வைக;டாக வழங்கப்பட்ட பாதுகாப்பால் இறக்குமதிகள் மட்டுப்படுத்தப்பட்டமையால் உயர் விலைகளை பெற்றுக் கொண்டன. திரவப் பால் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு அரசால் மேற்கொள்ளப்பட்ட விலை ஆதரவுப் பொறிமுறை தொடர்ந்தமை காரணமாக திரவப்பாலின் விலைகள் தொடர்ந்தும் உயர்வாகவே காணப்பட்டன. இறைச்சிக் கோழி மற்றும் முட்டைகளின் பண்ணை மட்ட விலை இவ்வாண்டின் இறுதியில் கேள்வி தொடர்ந்து பலமாக இருந்தமையாலும் விலங்குத் தீனின் அதிகரித்த விலைகளாலும் இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் மிக உயர்ந்த விலைகளைப் பதிவு செய்தன.

**அரசு வேளாண்மைத் துறைக்கு உதவுவதற்கான பல நடவடிக்கைகளை இவ்வாண்டில் மேற்கொண்டது.** தேயிலைத் தொழிற்சாலைச் சொந்தக்காரர்களால் பெறப்பட்ட கடன்களுக்கு வட்டி உதவுதொகை வழங்கப்பட்டதுடன் உலகளாவிய நிதியியல் நெருக்கடி காரணமாக ஏற்பட்ட தாழ்ந்த விலைகளால் பாதிப்படைந்த இறப்பர் பயிரிடுவோருக்கு உத்தரவாத விலைத் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. உள்;ர் தேங்காய் எண்ணெய்க் கைத்தொழிலுக்கு உதவுவதற்காக தாவர எண்ணெய் மீதான இறக்குமதித் தீர்வைகள் அதிகரிக்கப்பட்டன. நெல்துறை மற்றும் தேயிலை சிறு உடமையாளர் துறைக்கான வளமாக்கி உதவுதொகை தொடர்ந்து இடம்பெற்றது. முன்பு போரால் பாதிப்படைந்த பிரதேசங்களில் மீன்பிடி மற்றும் பாற்பண்ணைத் துறைகளைத் தூண்டுவதற்கு அரசு விசேட கவனம் செலுத்தியது. இதேவேளை, உள்நாட்டு சீனி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் ஹிங்குரான மற்றும் கந்தளாயிலுள்ள செயலிழந்த சீனித் தொழிற்சாலைகளை மீள ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**கைத்தொழில் துறையின் வெளியீடு 2008இன் 5.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2009இல் 4.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** வளர்ச்சியின் மெதுவடைவு பெரும்பாலும் 2009இல் கைத்தொழில்துறை வெளியீட்டில் 55 சதவீதத்திற்கும் கூடுதலான அளவுக்குப் பங்களிப்புச்செய்த தொழிற்சாலைக் கைத்தொழிலின் மெதுவடைவு காரணமாக ஏற்பட்டது. புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள் மற்றும் ஏற்றுமதிச் சந்தையை அடிப்படையாகக் கொண்ட ஏனைய உற்பத்திகள் 2009இல் குறைந்த வளர்ச்சியைப் பதிவு செய்தன. எனினும், புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள் வகையிலான பிரதான பங்கேற்பாளர்கள் உயர் தரமுடைய மற்றும் உயர் பெறுமதி கூட்டப்பட்ட பொருட்களை வழங்குவதன் மூலம் அவர்களின் போட்டித்தன்மையைத் தொடர்ந்து பேணினர். சிறிய மற்றும் நடுத்தர அளவு தயாரிப்பாளர்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் சந்தைகள் இரண்டிலுமான குறைந்த கேள்வியாலும் அதிகரித்த உற்பத்திச் செயலாலும் பாதிப்படைந்தனர். செலவழிக்கத்தக்க வருமானத்திலான குறைந்த வளர்ச்சி மற்றும் கட்டடவாக்கத் துணைத் துறையிலான குறைந்த செயலாற்றம் உள்நாட்டுச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களுக்கான குறைந்த கேள்விக்குப் பங்களிப்புச் செய்தது. எனினும், உணவு, பானம் மற்றும் புகையிலை

**அட்டவணை 1.2**

**கூட்டுக் கேள்வியும் சேமிப்பு முதலீட்டு இடைவெளியும்**

| விடயம் | ரூ. பில்லியன் | | வளர்ச்சி % | | மொ.உ.உ இன் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2008(அ) | 2009(ஆ) | 2008(அ) | 2009(ஆ) | 2008(அ) | 2009(ஆ) |
| 1. உள்நாட்டுக் கேள்வி | 5,014.3 | 5,139.0 | 26.9 | 2.5 | 113.7 | 106.5 |
| 1.1 நுகர்வு | 3,799.1 | 3,955.4 | 28.8 | 4.1 | 86.1 | 82.0 |
| தனியார் | 3,085.3 | 3,103.8 | 28.4 | 0.6 | 70.0 | 64.3 |
| அரசு | 713.8 | 851.5 | 30.6 | 19.3 | 16.2 | 17.6 |
| 1.2 முதலீடு (மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம்) | 1,215.2 | 1,183.7 | 21.5 | -2.6 | 27.6 | 24.5 |
| தனியார் | 929.1 | 865.1 | 15.1 | -6.9 | 21.1 | 17.9 |
| அரசு | 286.1 | 318.6 | 48.3 | 11.3 | 6.5 | 6.6 |
| 2. தேறிய வெளிநாட்டுக் கேள்வி | -603.6 | -313.9 | -62.6 | 48.0 | -13.7 | -6.5 |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 1,095.7 | 1,030.9 | 5.2 | -5.9 | 24.8 | 21.4 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 1,699.3 | 1,344.8 | 20.2 | -20.9 | 38.5 | 27.9 |
| 3. மொத்தக் கேள்வி (மொ.உ.உ) (1) + (2) | 4,410.7 | 4,825.1 | 23.2 | 9.4 | 100.0 | 100.0 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் (3) - (1.1) | 611.6 | 869.7 | -2.8 | 42.2 | 13.9 | 18.0 |
| தனியார் | 700.0 | 1,046.7 | 1.9 | 49.5 | 15.9 | 21.7 |
| அரசு | -88.5 | -176.9 | -53.3 | -100.0 | -2.0 | -3.7 |
| 5. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -105.0 | -55.8 | -168.9 | 46.9 | -2.4 | -1.2 |
| 6. தேறிய தனியார் நடைமுறை மாற்றல்கள் | 277.7 | 336.6 | 13.3 | 21.2 | 6.3 | 7.0 |
| 7. தேசிய சேமிப்புகள் (4) + (5) + (6) | 784.3 | 1,150.5 | -6.1 | 46.7 | 17.8 | 23.9 |
| 8. சேமிப்பு முதலீட்டு இடைவெளி | | | | | | |
| உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீடு (4) - (1.2) | -603.6 | -313.9 | | | -13.7 | -6.5 |
| தேசிய சேமிப்புக்கள் - முதலீடு (7) - (1.2) | -431.0 | -33.2 | | | -9.8 | -0.7 |
| 9. அலுவல்சார் கொடைகளற்ற வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை (2) + (5) + (6) | -431.0 | -33.2 | | | -9.8 | -0.7 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை


மூலங்கள் : தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

உற்பத்திகள் வகை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய சந்தைகளுக்கான கட்டுப்பாடற்ற நுழைவு மற்றும் இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் உள்நாட்டுச் சுற்றுலா உள்ளிட்ட சுற்றுலாவின் மீளெழுச்சி என்பவற்றின் காரணமாக 2009இல் அதன் வளர்ச்சி உத்வேகத்தைக் கையாளக் கூடியதாக இருந்தது.

**ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தைகள் இரண்டிலுமான கேள்வியில் ஏற்பட்ட மீட்சி மற்றும் நிறுவன ரீதியிலான உதவியுடன் தொழிற்சாலைக் கைத்தொழிலின் வெளியீடு படிப்படியாக மீட்சியடைந்தது.** உலக பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்தமை, குறைந்த பணவீக்கம் மற்றும் வட்டி வீதங்கள், உறுதியான செலாவணி வீதங்கள், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தற்போது நடைபெற்று வரும் உட்கட்டமைப்பு மற்றும் வீடமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள், வர்த்தக மற்றும் வீடமைப்பு கட்டடவாக்கச் செயற்பாடுகள் என்பன 2009இன் பிற்பகுதியில் தொழிற்சாலைக் கைத்தொழிலின் வளர்ச்சிக்கு உதவின. இதேவேளை, அரசு ஏனைய தொடர்பான அதிகாரிகளின் உதவியுடன் இறைத் தூண்டலை வழங்கல், கைத்தொழில் தளத்தை ஒழுங்குமுறைப்படுத்தல், உற்பத்தி மேம்பாடு நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், அரச தனியார் பங்குடமைகளை ஊக்குவித்தல், தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை அதிகரித்தல், நிதியியல் உதவி மற்றும் மதியுரைப் பணிகளை வழங்குவதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளைப் பாதுகாத்தல் என்பவற்றினூடாக கைத்தொழில்கள் முகம் கொடுக்கும் சவால்களைத் தீர்ப்பதற்கு பல முன்னெடுப்புகளையும் எடுத்தது.

**மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத் துணைத் துறையிலான மோசமான செயலாற்றத்தின் முக்கிய காரணமாக பணிகள் துறையிலான வளர்ச்சி 2008இன் 5.6 சதவீத வளர்ச்சியிலிருந்து 2009இல் 3.3 சதவீதத்திற்கு மெதுவடைந்தது.** சுற்றுலா விடுதி மற்றும் உணவகங்கள், அரச பணிகள் மற்றும் வீடமைப்பின் சொத்துடமைகள் தவிர்ந்த ஏனைய துறைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மெதுவான வளர்ச்சியைப் பதிவு செய்தன. உலகளாவிய பொருளாதார வீழ்ச்சியிலிருந்து ஏற்பட்ட ஏற்றுமதி மற்றும் இறக்குமதித் துணைத் துறைகள் இரண்டிலுமான பின்னடைவு மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகச் செயற்பாடுகளில் சுருக்கத்தை ஏற்படுத்தியது. எனினும், உள்நாட்டு வர்த்தகத் துணைத்துறை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலான பொருளாதாரச் செயற்பாடுகளிலான அதிகரிப்புடன் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கான செழிப்பான கேள்வி

**வரைபடம் 1.3** **சேமிப்பும் முதலீடும்**



காரணமாக சிறப்பாகச் செயலாற்றியது. சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் துணைத்துறை 2008இன் பின்னடைவுடன் ஒப்பிடுகையில் போர் முடிவுற்றமை மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாச் செயற்பாடுகளிலான விரிவாக்கம் காரணமாக பலமான மீட்சியைக் காட்டியது. போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் பணிகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் குறைந்த வீதத்தில் வளர்ச்சியடைந்திருக்கையில் போக்குவரத்து, சரக்குக் கையாளல் மற்றும் அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல்களின் மூன்று துணைத் துறைகளும் இவ் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தன. இதேவேளை, வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்து துணைத்துறை பொருளாதார மந்த நிலையால் விளைவிக்கப்பட்ட உள்நாட்டு பொருளாதார மெதுவடைவுக்கு மத்தியில் மிதமானளவில் வளர்ச்சியடைந்தது.


**2009இல் நாட்டின் மொத்த முதலீடுகள் வீழ்ச்சியடைந்திருக்கையில் சேமிப்பு மற்றும் முதலீட்டு இடைவெளி ஒடுங்கியது.** தனியார் முதலீடு முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 21.1 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 17.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருக்கையில் அரச முதலீடு 6.1 சதவீதத்திற்கு சிறிதளவில் அதிகரித்தது. இதன் விளைவாக, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த முதலீடு 2008இன் 27.6 இலிருந்து 24.5இற்கு வீழ்ச்சியடைந்தது. இதேவேளை, தனியார் முதலீட்டிலான வீழ்ச்சி முன்னைய ஆண்டின் 17.8 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 23.9 சதவீதத்திற்கு தேசிய சேமிப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பில் பிரதிபலிக்கப்பட்டது. உள்நாட்டுச் சேமிப்புக்களிலான குறிப்பிடத்தக்க அதிகரிப்புடன் இணைந்து முதலீடுகளிலான வீழ்ச்சி சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையிலான கணிசமான சுருக்கத்தில் பிரதிபலிக்கப்பட்டவாறு சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி 2008இன் 13.7 சதவீதத்திலிருந்து 2009இல் மொ.உ.உற்பத்தியின் 6.5 சதவீதத்திற்கு ஒடுங்கியது.

## வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்

**சவால்மிக்க பொருளாதாரச் சூழலுக்கு மத்தியில் 2009இல் வெளிநாட்டுத்துறை பலமாக மீட்சியடைந்தது.** 2008 இலிருந்து 2009ஆம் ஆண்டின் முதல் காலாண்டு இறுதி வரை வெளிநாட்டுத்துறை அனுபவித்த வீழ்ச்சி குறிப்பாக வெளிநாட்டு முதலீடுகளின் கூர்மையான வெளிப்பாய்ச்சல், குறுகிய தவணைப் படுகடன் மீண்டும் மீண்டும் பயன்படுத்த முடியாமை, புதிய வர்த்தக நிதியிடல் குறைவடைந்து செல்லல், உயர் பெற்றோலியச் செலவுகளின் பணிக் கொடுப்பனவு என்பவற்றால் ஏற்பட்டது. சவால்மிக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சவால்களுக்கு மத்தியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2009 மாச்சு இறுதியில் குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தன. எனினும், சமாதானம் ஏற்பட்டமை மற்றும் முதலீட்டாளர் நம்பகத்தன்மையில் ஏற்பட்ட செழிப்புடன் வெளிநாட்டுத்துறை பலமாக மீளெழுச்சியடைந்து ஆண்டிறுதியில் முன்னெப்போதும் பதிவு செய்யப்படாத ஒதுக்குகளின் உச்ச மட்டத்தைப் பதிவு செய்தது.

**உலகளாவிய பொருளாதார நெருக்கடிகளின் தாக்கம் காரணமாக வெளிநாட்டு வர்த்தகம் 2009இல் சுருக்கமடைந்த போதிலும் இவ்வாண்டின் இறுதிப் பகுதியளவில் மீட்சியின் அறிகுறிகள் தென்பட்டன.** குறிப்பாக கைத்தொழில்

வரைபடம் 1.4 பெற்றோலிய இறக்குமதிகளின் பெறுமதியும் மசகெண்ணெய் இறக்குமதியின் சராசரி விலையும்




ஏற்றுமதிகளுக்கான உலகளாவிய கேள்வியில் ஏற்பட்ட சுருக்கம் காரணமாக ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 12.7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில் இறக்குமதிகள் மீதான செலவினம் 27.6 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து குறிப்பாக எண்ணெய் மற்றும் வளமாக்கி அளவுகளிலும் விலைகளிலும் குறைப்பைப் பிரதிபலித்தன. இதன்படி, வர்த்தகப் பற்றாக்குறை 2008இன் ஐ.அ.டொலர் 5,981 மில்லியனுக்கான 63.6 சதவீத விரிவாக்கத்துடன் ஒப்பிடுகையில் 2009இல் ஐ.அ.டொலர் 3,122 மில்லியனுக்கு 47.8 சதவீதத்தால் சுருக்கமடைந்து ஏற்றுமதி வருவாய்களிலான வீழ்ச்சி சார்பாக இறக்குமதிச் செலவினத்தில் குறிப்பிடத்தக்க பாரிய குறைப்பைப் பிரதிபலிக்கிறது. எனினும், உலகப் பொருளாதாரம் மீட்சியின் அறிகுறிகளைக் காட்டியதால் வெளிநாட்டு வர்த்தகம் இவ்வாண்டின் பிற்பகுதியில் முன்னேற்றமடைந்தது. ஏற்றுமதி வருவாய்கள் நாலாம் காலாண்டில் வேளாண்மை மற்றும் கைத்தொழில் ஏற்றுமதிகளிலான கூர்மையான மேம்பாட்டுடன் அதிகரித்தன. இது போலவே, நான்காம் காலாண்டில் நுகர்வு மற்றும் இடைநிலைப் பொருட்களின் அதிகரித்த இறக்குமதிகளுடன் இறக்குமதிகள் மீதான செலவினத்திலான அதிகரிப்பு காணப்பட்டது.


**சென்மதி நிலுவைகளின் பணிகள் கணக்கு இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் ஏற்பட்ட பின்னடைவிற்குப் பின்பு 2009இன் இரண்டாம் அரைப்பகுதியில் திருப்திகரமான முன்னேற்றத்தைக் காட்டியது.** இம் முன்னேற்றம் உலக பொருளாதாரத்திலான படிப்படியான மீட்சி மற்றும் போர் முடிவடைந்தமையால் கொண்டு வரப்பட்ட உள்நாட்டு வியாபாரச் சூழ்நிலையிலான முன்னேற்றத்தின் முக்கிய காரணத்தால் ஏற்பட்டது. குறைந்த மட்டங்களில் காணப்பட்ட போதிலும், போக்குவரத்து, தொலைத் தொடர்பூட்டல்கள், கணனி மற்றும் தகவல், கட்டடவாக்கம் மற்றும் காப்புறுதிப் பணிகள் இவ்வாண்டில் மிகைகளைப் பதிவு செய்தன. இவ்வாண்டின் முதல் சில மாதங்களில் சுற்றுலா வருகைகளிலான கூர்மையான வீழ்ச்சிக்கு மத்தியிலும் போர் முடிவடைந்தமை சுற்றுலாப் பயணிகளைக் கொண்டு வரும் சில முக்கிய நாடுகள் பிரயாண ஆலோசனைகளை நீக்கியமை காரணமாக வருகைகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டதுடன் சுற்றுலாவிலிருந்த வருவாய்களில் 2.2 சதவீத அதிகரிப்புக்கு இட்டுச் சென்றது. இதன்படி, பணிகள் கணக்கு 2009இல் ஐ.அ.டொலர் 391 மில்லியன் கொண்ட மிகையைப் பதிவு செய்தது.

**வருமானக் கணக்கிலான பற்றாக்குறை 2008இல் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 972 மில்லியனிலிருந்து 2009இல் ஐ.அ.டொலர் 488 மில்லியனுக்கு கணிசமானளவிற்குச் சுருங்கியது.** இது உலக வட்டி வீதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக திரண்ட வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளிலான குறைப்புடன் இணைந்து இவ்வாண்டில், முன்னெப்போதும் இல்லாத திரண்ட வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகள் மீதான வட்டி வருமானத்தில் ஏற்பட்ட அதிகரிப்பால் பெரும்பாலும் ஏற்பட்டது.

**சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு குறைந்த வர்த்தகப் பற்றாக்குறை மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்களில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றமடைந்தது.** இவ்வாண்டின் முதற் காலாண்டிலான மந்தமான வளர்ச்சிக்கு மத்தியிலும் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2009இல் ஐ.அ.டொலர் 3,330 மில்லியனுக்கு 14.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. இவ்வாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் ஐ.அ.டொலர் 339 மில்லியனை மிகையாகப் பதிவு செய்த நடைமுறைக்கணக்கு 2009இன் இறுதிக் காலாண்டில் வர்த்தகப் பற்றாக்குறையிலான அதிகரிப்பு காரணமாக ஐ.அ.டொலர் 214 மில்லியன் கொண்ட பற்றாக்குறையைப் பதிவு செய்து நேர்மாறாகியது. 2008இல் நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறை ஐ.அ.டொலர் 3,886 மில்லியனாகவிருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்திகளின் நியதிகளில் நடைமுறைக்கணக்கு பற்றாக்குறை 2008இல் 9.5 சதவீதத்திலிருந்து 2009இல் 0.5 சதவீதம் கொண்ட சிறு அளவிற்கு கணிசமானளவிற்கு ஒடுங்கியது.

**மூலதன மற்றும் நிதியியற் கணக்குகளுக்கான உட்பாய்ச்சல்கள் இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் கணிசமானளவில் அதிகரித்தன.** இவ்வாண்டின் முதலரைப் பகுதியில் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்த வெளிநாட்டு நிதியியல் உட்பாய்ச்சல்கள் போர் முடிவடைந்தமை மற்றும் ப.நா. நிதியத்தின் துணைநில் ஒழுங்குமுறை வசதி ஒப்புதலளிக்கப்பட்டமை காரணமாக அதிகரித்த நேர்மாறாகியது. இலங்கை ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட நாட்டுக்கான இரண்டாவது பன்னாட்டு முறியை 2009 ஒத்தோபரில் வெற்றிகரமாக முன் வைத்ததுடன் இதற்கு பதின்மூன்று தடவைகளுக்கும் கூடுதலாக உதவுதொகை அளிக்கப்பட்டது. இதன்படி, இவ்வாண்டில், நாட்டுக்கான பன்னாட்டு முறியிலிருந்தான பெறுகைகள் நீங்கலாக அரசுக்கான நீண்ட மற்றும் நடுத்தரகால மொத்த கடன் உட்பாய்ச்சல்கள் 2008இன் ஐ.அ.டொலர் 1,059 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,280 மில்லியனுக்கு அதிகரித்தன. இக் கடன் பெறுகைகளில், ஐ.அ.டொலர் 673 மில்லியன் (53 சதவீதம்) சலுகை ரீதியிலான நியதிகளில் பெறப்பட்டிருக்கையில் ஐ.அ.டொலர் 607 மில்லியன் (47 சதவீதம்) சலுகையற்ற நியதிகளில் பெறப்பட்டது. 2009இல் கடன்கள் உள்ளிட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2008இல் ஐ.அ.டொலர் 889 மில்லியன் கொண்ட உயர் அளவைப் பதிவு செய்த பின்பு ஐ.அ.டொலர் 601 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன.

வரைபடம் 1.5 சென்மதி நிலுவை




**இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் அரச பிணையங்கள் சந்தைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் அதிகரித்து 2009இன் முற்பகுதியில் பதிவு செய்யப்பட்ட முதலீடுகளின் மீள்பெறுகையை நேர்மாறாக்கியது.** புதுப்பிக்கப்பட்ட முதலீட்டாளர் நம்பகத்தன்மை, உறுதியான செலாவணி வீதம் மற்றும் ஒப்பீட்டளவில் குறைவான பன்னாட்டு வட்டி வீதங்கள் இவ் உட்பாய்ச்சல்களுக்கு உதவின. அரச பிணையங்கள் 2008இன் ஐ.அ.டொலர் 213 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல்களுடன் ஒப்பிடுகையில் 2009இல் ஐ.அ.டொலர் 1,369 மில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டு உட்பாய்ச்சல்களை ஈர்த்தன. உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தை மீது எந்தவொரு தேவையற்ற அழுத்தத்தையும் ஏற்படுத்தாது வெளிநாட்டு முதலீட்டாளர்களால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திடீர் மீள்பெறுகைகளின் தாக்கத்தை வசதிப்படுத்துவதற்கும் தணிப்பதற்கும் அனைத்து உட்பாய்ச்சல்களும் இலங்கை மத்திய வங்கியால் ஈர்க்கப்பட்டன.

**தனியார் துறைக்கான வெளிநாட்டுக் கடன் உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 390 மில்லியனுக்கு 47 சதவீதத்தால் அதிகரித்தன.** தொலைத்தொடர்பூட்டல், மின்வலு மற்றும் வலு மற்றும் வான் போக்குவரத்து கைத்தொழில்களே வெளிநாட்டுக் கடன்களால் நிதியிடப்பட்ட தனியார்துறை முதலீடுகளின் முக்கிய துறைகளாகும். இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் கொழும்பு பங்குச் சந்தைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்களின் உயர் மட்டத்திற்கு மத்தியிலும் மொத்தச் சொத்துப்பட்டியல் முதலீடுகள் 2008 உடன் ஒப்பிடுகையில் 2009இல் கணிசமான வீழ்ச்சியைப் பதிவு செய்தன.

**ஒட்டுமொத்த சென்மதி நிலுவைகள் 2008இன் ஐ.அ.டொலர் 1,385 மில்லியன் கொண்ட பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2009இல் முன்னெப்பொழுதுமில்லாத ஐ.அ.டொலர் 2.725 மில்லியன் தொகையைப் பதிவு செய்தது.** 2009இன் முதலாம் காலாண்டிறுதியில் சென்மதி நிலுவை ஐ.அ.டொலர் 688 மில்லியன் கொண்ட பற்றாக்குறையைப் பதிவு செய்தது. எனினும், இது ஐ.அ.டொலர் 200 மில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய பரிமாற்றல் வசதியின் ஏற்பாடு, புலம்பெயர்ந்த இலங்கையர் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடையே திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளிலான முதலீடு பற்றி ஊக்குவிப்புப் பிரசாரம், வதியாதோர் வெளிநாட்டுக் கணக்கு மற்றும் வதிவோர் வெளிநாட்டுக் கணக்கு வைப்புக்கள் மீது உழைக்கப்பட்ட வட்டி மீது ரூபா நியதிகளில் 20 சதவீத போனஸ் வட்டியின் கொடுப்பனவு என்பன உள்ளடங்கலாக இலங்கை மத்திய வங்கியால் எடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு பதிலிறுத்தும் வகையில் இவ்வாண்டின் இரண்டாம் காலாண்டிலிருந்து மிகையைப் பதிவு செய்வதற்கு மேம்பட்டதுடன் இவை நீடித்து நிலையிலிருந்த

**அட்டவணை 1.3** **வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகள்**

| விடயம் | ஐ.அ.டொ மில் 2008(அ) | ஐ.அ.டொ மில் 2009(ஆ) | % மாற்றம் |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | **8,111** | **7,085** | **-12.6** |
| வேளாண்மை உற்பத்திகள் | 1,855 | 1,690 | -8.9 |
| கைத்தொழில் உற்பத்திகள் | 6,158 | 5,305 | -13.8 |
| கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 98 | 88 | -9.3 |
| ஏனைய ஏற்றுமதிகள் | - | - | - |
| **இறக்குமதிகள்** | **14,091** | **10,207** | **-27.6** |
| நுகர்வுப் பொருட்கள் | 2,560 | 1,972 | -23.0 |
| இடைநிலைப் பொருட்கள் | 8,344 | 5,669 | -32.1 |
| முதலீட்டுப் பொருட்கள் | 3,048 | 2,451 | -20.0 |
| ஏனையவை | 139 | 115 | -17.6 |
| ***வர்த்தக நிலுவை*** | ***-5,981*** | ***-3,122*** | ***47.8*** |
| **பணிகள் (தேறிய)** | **401** | **391** | **-2.5** |
| பெறுகைகள் | 2,004 | 1,892 | -5.6 |
| கொடுப்பனவுகள் | 1,603 | 1,501 | -6.4 |
| **வருமானம் (தேறிய)** | **-972** | **-488** | **-49.8** |
| பெறுகைகள் | -32 | 116 | -462.5 |
| கொடுப்பனவுகள் | 940 | 603 | -35.9 |
| **நடைமுறை மாற்றல்கள் (தேறிய)** | **2,666** | **3,005** | **12.7** |
| தனியார் மாற்றல்கள் (தேறிய) | 2,565 | 2,927 | 14.1 |
| பெறுகைகள் | 2,918 | 3,330 | 14.1 |
| கொடுப்பனவுகள் | 353 | 403 | 14.2 |
| உத்தியோகபூர்வ மாற்றல்கள் (தேறிய) | 101 | 77 | -23.8 |
| ***நடைமுறைக் கணக்கு நிலுவை*** | ***3,886*** | ***-214*** | ***-94.5*** |
| ***மூலதனக் கணக்கு*** | ***291*** | ***233*** | ***-19.9*** |
| ***நிதியியல் கணக்கு*** | ***1,483*** | ***2,361*** | ***59.2*** |
| நேரடி முதலீடு (தேறிய) | 691 | 384 | -44.4 |
| உட்பாய்ச்சல்கள் | 752 | 404 | -46.3 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 62 | 20 | -67.6 |
| தனியார் நீண்டகாலம் (தேறிய) | 74 | 79 | 6.8 |
| உட்பாய்ச்சல்கள் | 265 | 390 | 47.2 |
| வெளிப்பாய்ச்சல்கள் | 191 | 311 | 62.8 |
| அரசு, நீண்டகாலம் (தேறிய) | 252 | 840 | 233.3 |
| உட்பாய்ச்சல்கள் | 1,059 | 1,780 | 68.1 |
| வெளிப்பாய்ச்ல்கள் | 807 | 940 | 16.5 |
| அரசு, குறுங்காலம் (தேறிய) | -213 | 1,369 | -742.7 |
| தனியார் குறுங்காலம் (தேறிய) | 679 | -311 | -145.8 |
| இதில் பட்டியலிடப்பட்ட முதலீடு (தேறிய) | 60 | -6 | -110.0 |
| தவறுகளும் விடுபாடுகளும் | 728 | 346 | |
| ***மொத்த நிலுவை*** | ***-1,385*** | ***2,725*** | |
| மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் (ஆ.தீ.ஒ தவிர்ந்த) | 1,594 | 5,097 | |
| மாதத்துக்கான இறக்குமதிகள் | 1.4 | 6.0 | |
| மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் (ஆ.தீ.ஒ தவிர்ந்த) | 2,832 | 6,770 | |
| மாதத்திற்கான இறக்குமதிகள் | 2.4 | 8.0 | |
| ஏற்றுமதி விலைச் சுட்டெண் | 113.0 | 112.5 | |
| இறக்குமதி விலைச் சுட்டெண் | 136.3 | 109.5 | |
| **வர்த்தகத்தின் போக்கு** | 82.9 | 102.8 | |
| **செலாவணி வீதங்கள் (சராசரி)** | | | உயர்வு(+) /தேய்வு(-) |
| ரூ./ஐ.அ.டொ | 108.33 | 114.94 | -5.8 |
| ரூ./யென் | 1.05 | 1.23 | -14.6 |
| ரூ./யூரோ | 159.32 | 160.21 | -0.6 |
| ரூ./ஸ்டேர்லிங் பவுண் | 200.73 | 179.87 | 11.6 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ)தற்காலிகமானவை
ஆ.தி.ஒ - ஆசிய தீர்ப்பனவு ஒன்றியம்

மூலம்: இலங்கை மத்திய வங்கி

போர் முடிவடைந்தமை மற்றும் சென்மதி நிலுவை உதவியாக ப.நா.நிதியத்தால் ஐ.அ.டொலர் 2.6 பில்லியன் சிறப்பு எடுப்பனவு உரிமைகள் (சிஎஉ) 1.65 பில்லியன் கொண்ட ப.நா.நிதிய - துணைநில் ஒழுங்குமுறை வசதி ஒப்புதலளிக்கப்பட்டமை என்பவற்றுடன் முதலீட்டாளர் நம்பகத்தன்மையில் ஏற்பட்ட செழிப்பால் மேலும் வலுவூட்டப்பட்டது. துணைநில் ஒழுங்குமுறை வசதியின் முதல் இரு தொகுதிகளான ஐ.அ.டொலர் 652 மில்லியன், ஐ.அ.டொலர் 508 மில்லியன் கொண்ட ப.நா. நிதியத்தால் மேற்கொள்ளப்பட்ட சிஎஉ ஒதுக்கீடு இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் பெறப்பட்டது. இதன்படி, ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியப் பெறுகைகள் நீங்கலாக மொத்த வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் 2008 இறுதியிலான ஐ.அ.டொலர் 1,594 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2009 இறுதியில் ஐ.அ.டொலர் 5,097 மில்லியன் கொண்ட முன்னெப்பொழுதும் இல்லாத உச்சமட்டத்திற்கு அதிகரித்தன. இது 2008இல் பதிவு செய்யப்பட்ட 1.4 இறக்குமதி மாதங்களுடன் ஒப்பிடுகையில் 6.0 மாத இறக்குமதிகளை நிதியிடப் போதுமானதாகும்.

**நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2008இன் மொ.உ.உற்பத்தியின் 37.1 சதவீதத்திலிருந்து 2009இல் 44.5 சதவீதத்திற்கு அதிகரித்தது.** இவ் அதிகரிப்பு திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள், நாட்டுக்கான முறி மற்றும் பன்னாட்டு நாணய நிதியின் துணைநில் ஒழுங்குமுறை வசதியின் கீழான பகிர்ந்தளிப்புக்கள் என்பவற்றுக்கான அதிகரித்த வெளிநாட்டு உட்பாய்ச்சல்களாலும் பெயரளவு மொ.உ.உற்பத்தியிலான குறைந்த வளர்ச்சியாலும் ஏற்பட்டது. வெளிநின்ற நடுத்தர மற்றும் நீண்டகால மொத்த வெளிநாட்டுப் படுகடனில் அரச படுகடன் 88.5 சதவீதத்திற்கு வகைகூறுகையில் எஞ்சியவை தனியார்துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான கடன்பாடுகளையும் ப.நா.நிதியத்திற்கான படுகடன் கடப்பாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தின. கடன் தீர்ப்பனவு மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளின் சதவீதமாக 2008இன் 15.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2009இல் 19.0 சதவீதத்திற்கு அதிகரித்தன. படுகடன் பணிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு பெரும்பாலும் ஐ.அ.டொலர் 225 மில்லியன் கொண்ட கூட்டுக்கடனின் மீள்கொடுப்பனவால் ஏற்பட்டிருக்கையில் இவ்வாண்டில் வர்த்தகப் பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட குறைப்பின் தாக்கம் படுகடன் பணி விகிதங்கள் கணிசமானளவில் அதிகரிப்பதற்குக் காரணமாக இருந்தது.


**20009இல் செலாவணி வீதக் கொள்கை முக்கியமாக உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையில் உறுதிப்பாட்டைப் பேணுவதில் கவனம் செலுத்தியது.** இவ்வாண்டின் முதல் நான்கு மாதங்களில் அதிகரித்த வெளிநாட்டுச் செலாவணி வெளிப்பாய்ச்சல்கள் செலாவணி வீதம் மீது தேய்வடைந்து செல்லும் அழுத்தத்தை ஏற்படுத்தியதுடன் இலங்கை மத்திய வங்கி அளவுக்கதிகமான தளம்பலைக் குறைப்பதற்கு தேறிய அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணியை வழங்கியது. எனினும், 2009 மேயிலிருந்து நாட்டுக்குள் வெளிநாட்டுச் செலாவணியின் அதிகரித்த உட்பாய்ச்சல்கள் செலாவணி வீதம் பெறுமதியில் உயர்வடைவதன் மீது அழுத்தத்தை ஏற்படுத்தியது. எனவே, வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய ஈர்த்தல் மூலம் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் இலங்கை மத்திய வங்கியின் தலையீடு ரூபா ஐ.அ.டொலருக்கெதிரான மேலும் பெறுமதி உயர்வடைவதைத் தவிர்த்த வேளையில் அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்பியது. இலங்கை மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட தலையிடும் உபாயம் 2009இல் உறுதியான செலாவணி வீதத்தை கூடியளவிற்குப் பேண உதவியது.

## இறைத்துறை அபிவிருத்திகள்


**ஏனைய பல நாடுகளைப் போன்றே 2009இல் இறைச் செயலாற்றம் ஆரம்ப வரவு செலவுத்திட்ட இலக்குகளிலிருந்து குறிப்பிடத்தக்க விலகலைப் பிரதிபலித்தது.** வரவு செலவுத்திட்டம் 2009, கொடைகளுக்குப் பின்பு மொ.உ.உற்பத்தியின் 5.9 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கு குறைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், உள்நாட்டு அது போல் பன்னாட்டுப் பக்கங்களிலான அபிவிருத்திகளைத் தொடர்ந்து மொ.உ.உற்பத்தியின் 7.0 சதவீதம் கொண்ட பொதுவான பற்றாக்குறை இலக்குடன் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் திருத்தியமைக்கப்பட்டது. 2009இன் முதலரைப்பகுதியில், உள்நாட்டுப் பொருளாதாரச் செயற்பாட்டிலான மெதுவடைவு மற்றும் குறிப்பாக உலகளாவிய பொருளாதார நெருக்கடியின் பாதகமான தாக்கத்தைப் பிரதிபலிக்கும் வீழ்ச்சியடைந்து செல்லும் இறக்குமதிகளின் விளைவாக அரசின் அரசிறையிலான குறைந்த வளர்ச்சியின் முக்கிய காரணத்தால் இறைத் தொழிற்பாடுகள் மீது கடுமையான அழுத்தம் காணப்பட்டது. இதேவேளை, தீவிரப்படுத்தப்பட்ட பாதுகாப்பு நிலைமை, அவசர மீள்குடியேற்றம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலான புனருத்தாபன மற்றும் மீள்நிர்மாணச் செயற்பாடுகள் மற்றும் அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகள் அரச முதலீட்டை தொடர்ந்து மேற்கொள்ளும் அதேவேளையில் அரச செலவினத்தை அதிகரித்தன. இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில், 2009 மேயில் உள்நாட்டுப் போர் முடிவடைந்தமையால் ஏற்பட்ட சாதகமான விளைவு மற்றும் உலகப் பொருளாதாரத்திலான படிப்படியான மீட்சியுடன் இணைந்து செல்லும் வகையில் உள்நாட்டுப் பொருளாதாரச் செயற்பாட்டில் 2009இன் மொ.உ.உற்பத்தியின் 9.8 சதவீதம் கொண்ட வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையைப் பதிவு செய்யும் அளவிற்கு ஓரளவிற்குத் தணித்தது.

**உயர் பற்றாக்குறை அரசிறைப் பற்றாக்குறை, மீண்டெழும் செலவினத்திலான வரம்பு மீறல் மற்றும் உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் மீதான அதிகரித்த செலவினத்தினதும் இணைந்த விளைவாகும்.** அரசின் அரசிறை இலக்கிடப்பட்ட மட்டத்தைவிட கணிசமானளவில் குறைந்து காணப்பட்டது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த அரசிறை 2008இன் 14.9 சதவீதத்துடனும், 2006இன் 16.3 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 2009இல் 14.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதேவேளை, மொத்தச் செலவினமும், தேறிய கடன் வழங்கல்களும் 2008இன் 22.6 சதவீதத்துடனும் 2006இன் 24.3 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் மொ.உ.உற்பத்தியின் 24.9 சதவீதத்திற்கு அதிகரித்தன. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினம் 2008இன் 16.9 சதவீதத்திலிருந்து 18.2 சதவீதத்திற்கு கணிசமானளவில் அதிகரித்தது. அரச முதலீடு முன்னைய ஆண்டின் 6.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ஊக்கமளிக்கும் மட்டமான மொ.உ.உற்பத்தியின் 6.8 சதவீதத்திற்கு அதிகரித்தது.

வரைபடம் 1.6 அரசிறை, செலவினம் மற்றும் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை (மொ.உ.உ.இன் சதவீதமாக)




வரைபடம் 1.7 அரச படுகடன் (மொ.உ.உ.இன் சதவீதமாக)





**பற்றாக்குறையை நிதியிடுவதில் அரசு 2009இன் முற்பகுதியில் உள்நாட்டு மூலங்களிலிருந்தும் இவ்வாண்டின் பிற்பகுதியில் வெளிநாட்டு மூலங்களிலிருந்தும் நிதியைப் பெற்றது.** அதிகரித்த கடன்பாட்டுத் தேவைப்பாடு மற்றும் பன்னாட்டு மூலதனச் சந்தைகளில் திட்டமிடப்பட்ட வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகளைத் திரட்டுவதிலான இடர்பாடு, அரசு இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் உள்நாட்டு கடன்பாடுகளில் பெருமளவு தங்கியிருப்பதற்கு வழியமைத்தது. எனினும், அரச ரூபாப் பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகளிலான கணிசமான அதிகரிப்பு மற்றும் இவ்வாண்டின் இரண்டாம் அரைப்பகுதியில் நாட்டிற்கான பன்னாட்டு முறி வழங்கல் விற்பனைகளிலிருந்தான பெறுகை இலங்கை மத்திய வங்கியிடமுள்ள திறைசேரி உண்டியல்களின் பெரும் தொகையை ஓய்வுபெறச் செய்வதற்கு அரசை இயலச் செய்தது. இதன் விளைவாக, வங்கித்தொழில் துறையிலிருந்தான மொத்தக் கடன்பாடுகள் 2009 யூலை இறுதியிலான ரூ.189.6 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2009 இறுதியில் ரூ.49 பில்லியனுக்கு குறைவடைந்தன. 2009இல் மொத்தக் தேறிய உள்நாட்டு நிதியிடல் மொ.உ.உற்பத்தியின் 5 சதவீதமாக விளங்குகையில் வெளிநாட்டுக் கடன்கள் (மொ.உ.உற்பத்தியின் 1.8 சதவீதம்) மற்றும் அரச ரூபாப் பிணையங்களிலான வெளிநாட்டு முதலீடுகள் (மொ.உ.உற்பத்தியின் 3.0 சதவீதம்) என்பவற்றைக் கொண்டுள்ள தேறிய வெளிநாட்டு நிதியிடல் மொ.உ.உற்பத்தியின் 4.8 சதவீதமாக விளங்கியது. இதேவேளை, மொ.உ.உற்பத்திக்கான வெளிநின்ற அரச படுகடனின் விகிதம் 2009இல் 86.2 சதவீதத்திற்குச் சிறிதளவால் அதிகரித்து உயர் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையையும் பெயரளவிலான மொ.உ.உற்பத்தியில் குறைந்த வளர்ச்சியையும் பிரதிபலித்தது.

## நாணயத்துறை அபிவிருத்திகள்


**இலங்கை மத்திய வங்கி உள்நாட்டு பொருளாதாரச் செயற்பாட்டுக்கு உதவுவதற்கு 2009இல் அதன் நாணயக் கொள்கை நிலையைத் தளர்த்தியது.** குறிப்பாக கடந்த இரு ஆண்டுகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட கடுமையான நாணயக் கொள்கை வழிமுறைகள் காரணமாக 2009 பணவீக்கத்திலான விரைந்த மெதுவடைவு மற்றும் உலகப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி இலங்கை மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கையைத் தளர்த்துவதற்கான வசதியை வழங்கியது. 2007 நவெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்ட பங்கேற்கும் நிறுவனங்களுக்கு நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் மீது பிரயோகிக்கத்தக்க தண்ட வட்டி வீதம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு 2009 மே அளவில் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்துடன் இசைந்து காணப்பட்டது. அதேவேளை, மத்திய வங்கியின் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியும் நீக்கப்பட்டமையால் வட்டிவீத அமைப்பு மீள ஏற்படுத்தப்பட்டது. இவ்வாண்டில் மத்திய வங்கியின் கொள்கை வீதங்களும் படிப்படியாக குறைக்கப்பட்டன் இவ் வீதம் 300 அடிப்படைப் புள்ளிகளால் 7.50 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டதுடன் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் 225 அடிப்படைப் புள்ளிகளால் 9.75 சதவீதத்திற்கு பல வழிகளில் குறைக்கப்பட்டது. இத்துடன், ஊர்திகளின் கேள்வியைக் கட்டுப்படுத்துவதற்கு விதிக்கப்பட்ட குறைந்தபட்ச வைப்புத் தேவைப்பாடு கொடுகடன் நிபந்தனைகளைத் தணிப்பதற்காக இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் நீக்கப்பட்டது.

**இலங்கை மத்திய வங்கி சந்தையில் ரூபாத் திரவத்தன்மையை கண்காணிப்பதற்கு நேரம் பிந்தாததும் பொருத்தமானதுமான வழிமுறைகளை மேற்கொண்டது.** இவ்வாண்டின் முதற் காலாண்டில் தொடர்ச்சியான மூலதன வெளிப்பாய்ச்சல்கள் சந்தைக்கு வெளிநாட்டு நாணயத்தை வழங்குவதற்கு இலங்கை மத்திய வங்கியைத் தேவைப்படுத்தி சந்தையிலிருந்து ரூபாத் திரவத்தன்மையில் பற்றாக்குறையை விளைவித்தது. 2008இன் இறுதிக் காலாண்டில் 225 அடிப்படைப் புள்ளிகளால் வர்த்தக வங்கிகளின் அனைத்து ரூபா, வைப்புக்கள் மீது விதிக்கப்பட்ட நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டிலான குறைப்பைத் தொடர்ந்து சந்தைக்கு ரூ.9 பில்லியனை விடுவிப்பதன் மூலம் இலங்கை

வரைபடம் 1.8 ஒதுக்குப்பணத்தினதும், விரிந்த பணத்தினதும் வளர்ச்சி




வரைபடம் 1.9 மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதம்




மத்திய வங்கி நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டை மேலும் 75 புள்ளிகளால் 2009 பெப்புருவரியில் 7 சதவீதத்திற்குக் குறைத்தது. இத்துடன், இலங்கை மத்திய வங்கி முதனிலைச் சந்தையிலிருந்து திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்திருக்கையில் ரூபாத் திரவத்தன்மையை அதிகரிப்பதற்கு நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களிலும் ஈடுபட்டது. இலங்கை மத்திய வங்கி சந்தைப் பங்கேற்பாளர்கள் நேர்மாற்று மீள்கொள்வனவு துணைநில் வசதியைப் பெறுவதிலான கட்டுப்பாட்டையும் 2009இல் நீக்கியது.


**எனினும், 2009 யூனிலிருந்து காணப்பட்ட திரவத்தன்மையிலான திருப்பம் மிகைத் திரவத்தன்மையை முகாமை செய்வதில் சவாலை ஏற்படுத்துகிறது.** போர் முடிவடைந்தமை மற்றும் ப.நா.நிதியத்தின் துணைநில் ஒழுங்குமுறை வசதியின் ஒப்புதலுடன் ஏற்பட்ட புதுப்பிக்கப்பட்ட முதலீட்டாளர் நம்பகத்தன்மை 2009 மேயிலிருந்து அரச பிணையங்களிலான வெளிநாட்டு முதலீடுகளை கணிசமானளவில் அதிகரிப்பதற்கு வழியமைத்தது. இவ் உட்பாய்ச்சல்களிலான பெறுகைகள் வெளிநாட்டு செலாவணிச் சந்தையை உறுதிப்படுத்துவதற்கும், அலுவல்சார் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கும் இலங்கை மத்திய வங்கியால் கொள்வனவு செய்யப்பட்டன. சந்தையில் ரூபாத் திரவத்தன்மையில் விளைவிக்கப்பட்ட எழுச்சி திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் ஊடாக ஈர்க்கப்பட்டது. இத் தொழிற்பாடுகள் அரச பிணையங்களின் மத்திய வங்கியின் உடமைகளில் கணிசமான வீழ்ச்சிக்கு வழியமைத்து திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துவதற்கு மாற்றுக் கருவிகளின் பயன்பாட்டைத் தேவைப்படுத்தியது. இதன்படி, மத்திய வங்கிப் பிணையங்கள் 2009 ஒத்தோபரிலிருந்து ஓரிரவு அடிப்படை மற்றும் தவணை அடிப்படைகளிலான திரவத்தன்மையை ஈர்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன. இத்துடன், திரவத்தன்மையை ஈர்ப்பதற்கான மேலதிக கருவியாக இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு செலாவணி பரிமாற்றல் கொடுக்கல்வாங்கல்களை ஆரம்பித்தது.

**நாணயக் கூட்டுக்களுக்கான இலக்குகள் 2009இற்கான நாணய நிகழ்ச்சித்திட்டத்தில் ஆரம்பத்தில் நிர்ணயிக்கப்பட்டு "வழிகாட்டல்: 2009இற்கும் அதற்கு அப்பாலுமான நாணய மற்றும் நிதியியற்துறைக் கொள்கைகள்" (வழிகாட்டல்)இல் அறிவிக்கப்பட்டு பின்பு கீழ் நோக்கித் திருத்தியமைக்கப்பட்டது.** நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டிலான குறைப்பு, பணவீக்கத்திலான

விரைந்த வீழ்ச்சி மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்திலான மெதுவடைவு என்பன இக் கீழ் நோக்கிய மீளாய்வுக்கு ஆதரவளித்த பிரதான காரணிகளாகும். இதன்படி, ஒதுக்குப் பணத்திலான வளர்ச்சிக்கான இலக்கு 5 சதவீதத்திலிருந்து 2.8 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டிருக்கையில் விரிந்த பணத்தின் இலக்கு 14 சதவீதத்திலிருந்து 13 சதவீதத்திற்கு கீழ் நோக்கித் திருத்தப்பட்டது. 2008இன் இறுதிக் காலாண்டிலும் 2009இன் முதலாம் காலாண்டிலும் நியதி ஒதுக்குத் தேவைப்பாடுகளைக் குறைத்ததன் காரணமாக 2009இன் முதல் மூன்று காலாண்டுகளில் ஒதுக்குப் பணத்திலான வளர்ச்சி சுருக்கமடைந்த போதிலும் இலங்கை மத்திய வங்கியிலிருந்து அரசுக்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் 2008இன் முதலாம் காலாண்டில் ஒதுக்குப்பணம் மீதான நியதி ஒதுக்குத் தேவைப்பாட்டிலான மாற்றங்களின் விளைவு ஒடுங்கிச் சென்றமை காரணமாக இது இறுதிக் காலாண்டில் அதிகரிக்கத் தொடங்கியது. இதன்படி, ஒதுக்குப் பணத்திலான ஆண்டுச் சராசரி வளர்ச்சி 0.7 சதவீதத்தால் சுருக்கமடைந்ததுடன் இது 2009இற்கான மீளாய்வு செய்யப்பட்ட நாணய நிகழ்ச்சித்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கினுள் காணப்பட்டது. இவ்வாண்டின் முதலரைப்பகுதியில் மிதமடைந்த விரிந்த பணத்திலான வளர்ச்சி 2009இற்கான திருத்தியமைக்கப்பட்ட நாணய நிகழ்ச்சித்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கிற்கும் சிறிதளவு கூடுதலாக காணப்பட்ட ஆண்டுச் சராசரி விரிந்த பணம் இதன் பின்பு விரைவடைந்த 13.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

**இவ்வாண்டில் வங்கித்தொழில் முறைமையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் வீழ்சியடைந்தமையால் நாணயக் கூட்டுக்களிலான விரிவாக்கத்தின் மூலமாக தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களிலான அதிகரிப்பு விளங்கியது.** அரச பிணையங்களிலான வெளிநாட்டு முதலீட்டின் மீளப்பெறலால் ஏற்படும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை மீதான அழுத்தத்தைத் தணிப்பதற்கு இலங்கை மத்திய வங்கி தலையிட்டமையால் 2009இன் முதலாம் காலாண்டில் இலங்கை மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது. எனினும், தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களிலான வீழ்ச்சி, இலங்கை மத்திய வங்கியிலிருந்து அரசுக்கான உயர்ந்தளவான கடனின் விளைவாக பகுதியளவில் எதிரீடு செய்யப்பட்டது. எனினும் இந் நிலை தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் கணிசமானளவில் அதிகரித்ததன் மூலம் 2009 ஏப்பிறலிலிருந்து நேர்மாறாகிய வேளையில் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடைந்தன. போர் முடிவடைந்ததை உடனடுத்து குறிப்பிடத்தக்க வெளிநாட்டு உட்பாய்ச்சல்களிலிருந்து இலங்கை மத்திய வங்கியின் ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கு அதனால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு செலாவணிக் கொள்வனவுகள் மற்றும் ப.நா.நிதியத்தின் துணைநில் ஒழுங்குமுறை வசதியின் ஒப்புதல் இலங்கை மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களிலான மேம்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்தன. இதேவேளை, சில அரச கூட்டுத்தாபனங்களால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணய கடன்பாடுகளின் மீள்கொடுப்பனவுகள், நாட்டுக்கான பன்னாட்டு முறி வழங்கலின் பெறுகைகளைப் பயன்படுத்தி அரசின் வெளிநின்ற வெளிநாட்டு நாணயப் பொறுப்புக்கள் சிலவற்றின் தீர்ப்பனவு காரணமாக வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்

வரைபடம் 1.10 சந்தை வட்டி வீதங்களின் நகர்வுகள்




அதிகரித்தன. வங்கித்தொழில் துறையின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களிலான வீழ்ச்சி பல காரணங்களால் ஏற்பட்டது. அரச பிணையங்களிலான வெளிநாட்டு முதலீடுகளிலிருந்தான பெறுகைகளுடன் இலங்கை மத்திய வங்கி வசமுள்ள அரச பிணையங்களின் பெருமளவு இருப்பை ஓய்வு பெறச் செய்தமை, வெளிநாட்டு செலாவணிச் சந்தையை உறுதிப்படுத்துவதற்கும் மத்திய வங்கியின் பிணையங்களை வழங்குவதற்கும் இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட தீங்கற்ற தலையீடு, இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களை வழங்குதல் என்பன இலங்கை மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களிலான வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக விளங்கின. உள்நாட்டுப் பொருளாதாரச் செயற்பாட்டிலான வீழ்ச்சி உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் தற்காலிக விளைவு, 2008 வரை பின்பற்றப்பட்ட இறுக்கமான நாணயக் கொள்கை நிலையின் பகுதிக் காரணத்தால் ஏற்பட்டிருக்கையில் வங்கிகளின் பழைமை வாய்ந்த கடன்வழங்கல் நடைமுறைகள் வர்த்தக வங்கிகளால் மேற்கொள்ளப்படும் தனியார் துறைக்கான கொடுகடனில் வீழ்ச்சிக்கு வழியமைத்தன. எனினும், உள்நாட்டுக் கொடுகடனின் ஏனைய கூறுகளான அரசு மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் அதிகரித்தன.

**கால அமைப்பிலேயான வட்டி வீதங்கள் கொள்கை வீதங்களிலான மாற்றங்கள் மற்றும் சந்தைத் திரவத்தன்மையிலான மேம்பாடுகளுடன் இணைந்து செல்லும் வகையில் கீழ் நோக்கி நகர்த்தப்பட்டது.** நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பண வீதம் கொள்கை வட்டி வீத அமைப்பினுள் கொண்டு வரப்பட்டதுடன் இது இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைத் தொழிற்பாடுளின் பயனுறுதியை மேம்படுத்தியது. வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கும் வீதங்கள் குறைந்த வேகத்தில் வீழ்ச்சியடைந்த போதிலும் ஏனைய சந்தை வட்டி வீதங்களும் இம் மாற்றங்களுடன் இணைந்து செல்லும் வகையில் வீழ்ச்சியடைந்தன. அனைத்து முதிர்ச்சிகளிடையே அரச பிணையங்கள் மீதான விளைவு வீதங்கள் இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வீதங்களிலான மாற்றங்கள் மற்றும் முதலீட்டுச் சூழ்நிலையிலான மேம்பாடுகளுடன் கூடிய விரைவில் பதிலிறுத்தன. இவ்வாண்டில் கீழ் நோக்கி நகர்ந்தும் நீண்ட முதிர்ச்சிகளுக்கு வெளிநோக்கி நீடிக்கப்பட்ட இரண்டாந்தரச் சந்தையில் அரச பிணையங்களுக்கான விளைவு வளையியிலும் இது பிரதிபலிக்கப்பட்டது.

**இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலையின் பயனுறுதியான தொடர்பூட்டல், சந்தை எதிர்பார்ப்புகளை கொள்கை வகுப்போரின் எதிர்பார்ப்புகளுடன் ஒழுங்குபடுத்துவதில் கூடிய அளவிற்கு வெற்றிகரமாக அமைந்தது.** இலங்கை மத்திய வங்கி அதன் வழிகாட்டலான: 2010 இற்கும் அதற்கப்பாலானதற்குமான நாணய மற்றும் நிதியியற் துறைக் கொள்கைகளை ஆண்டின் ஆரம்பத்தில் தொடர்ந்து வெளியிட்டதுடன் அதன் கொள்கை நடவடிக்கைகளின் பயனுறுதியை அதிகரிக்கும் பொருட்டு அதன் மாதாந்த நாணயக் கொள்கை பத்திரிகை வெளியீடுகளில் இந் நடவடிக்கைளின் கீழேயுள்ள அடிப்படைக் கோட்பாட்டை விளக்கி அதன் கொள்கைத் தீர்மானங்களை அறிவிக்கிறது. பல்வேறான ஆர்வலர்களுடன் ஈடுபடுவதற்கான மத்திய வங்கியின் கடப்பாட்டின் ஒரு பகுதியாக அதன் நாணயக் கொள்கைக் கலந்தாலோசனைகளின் உள்ளீடாக தனியார்துறை மற்றும் கல்விசார் துறையிலிருந்து பிரதிநிதிகளைக் கொண்டிருக்கும் நாணயக் கொள்கை ஆலோசனைச் சபையின் கருத்துக்களை மத்திய வங்கி தொடர்ந்து பெற்றது.

## நிதியியல் முறைமை உறுதிப்பாடு

**2009இல் நிதியியல்துறை தொடர்ந்து எழுச்சி பெற்று காணப்பட்டதுடன் சவால்மிக்க சந்தை நிபந்தனைக்கு மத்தியிலும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு பேணப்பட்டது.** உலகளாவிய நிதியியல் நெருக்கடியின் கசிந்த விளைவுகள் மற்றும் நிதியியல் துறை நிறுவனங்களின் வியாபாரத் தொழிற்பாடுகளில் பாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்த உள்நாட்டுப் பொருளாதாரத்தின் கேள்வியின் ஏற்பட்ட வீழ்ச்சி என்பவற்றால் விளைவிக்கப்பட்ட அழுத்தங்களை நிதியியற்துறை நிறுவனங்கள் எதிர்கொண்டன. உலகளாவிய நிதியியல் குழப்பநிலை மோசமடைந்து உலகப் பொருளாதாரம் சுருங்கியமையால் அரச பிணையங்களில் வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல் காணப்பட்டு பணச் சந்தைகளில் திரவத்தன்மைப் பற்றாக்குறையை உருவாக்கியது. எனினும், இந் நிலைமை பணச் சந்தை திரவத்தன்மையாக வந்தமை மற்றும் 2009 மேயில் போர் முடிவடைந்தன் பின்பு பங்குச் சந்தை மீளெழுச்சி அடைந்ததன் மூலம் திரும்பியது. செலிங்கோ குழுமத்திலுள்ள வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளுடன் தொடர்பு வைத்திருந்த பல நிறுவனங்களால் முகம் கொடுக்கப்பட்ட முதலீட்டாளர் நம்பகத்தன்மை மற்றும் திரவத்தன்மைத் தடைகள் நிதி மற்றும் குத்தகைக்கு விடும் துறைகளில் மோசமான விளைவைக் கொண்டிருந்தது.

**எனினும், இலங்கை மத்திய வங்கியாலும் அரசாலும் மேற்கொள்ளப்பட்ட விரைவானதும் தீர்க்கமான வழிமுறைகள் பொதுமக்கள் நம்பகத்தன்மையையும் நிதியியல் துறையில் தொடர்ச்சியான உறுதிப்பாட்டையும் உறுதிப்படுத்துவதில் பங்களிப்புச் செய்தது.** செலிங்கோ குழுமத்தின் ஒரு பகுதியான முறைமையியலில் முக்கியத்துவம் வாய்ந்த உரிமம் பெற்ற வர்த்தக வங்கியான செலான் வங்கியால் எதிர்கொள்ளப்பட்ட திரவத்தன்மைப் பிரச்சனைகளை இலங்கை மத்திய வங்கி வெற்றிகரமாக தீர்த்து வைத்தது. செலான் வங்கி புதிய பங்குகளை வழங்கியதன் மூலம் மீள மூலதனமாக்கப்பட்டு தற்போது வழமையான வியாபாரத் தொழிற்பாடுகளை மேற்கொள்கின்றது. செலிங்கோ குழுமத்திலுள்ள இடர்பாட்டிலுள்ள பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடல் கம்பனிகளால் எதிர்கொள்ளப்பட்ட திரவத்தன்மைத் தடைகளை தீர்த்து வைக்கும் பொருட்டு முகாமை செய்யும் முகவர்களை நியமித்ததுடன் மீட்சிச் செயல்முறைக்கு ஆலோசனை வழங்குவதற்கும் வழிகாட்டுவதற்கும் நிபுணர்கள் குழுவின் பணிகளைப் பெற்றது. மேலும், இலங்கை மத்திய வங்கி நிதி திட்டமிடல் அமைச்சுடன் இணைந்து திரவத்தன்மைப் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் பிரச்சனைக்குரிய பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளுக்கு உதவுவதற்கு சிறப்புத் தூண்டல் பொதியொன்றை அறிமுகப்படுத்தியது. இத்துடன், இலங்கை மத்திய வங்கி குத்தகை வாடகைப் பெறுகைகளின் பிணையப்படுத்தல் உள்ளிட்ட பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட வங்கிக் கடன் வசதிகளுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இவ் வழிமுறைகள் வியாபாரத் தொழிற்பாடுகளை ஆரம்பிப்பதை வெற்றிகரமாக வசதிப்படுத்தியதுடன் இத் துறைக்கு உறுதிப்பாட்டைக் கொண்டு வந்தது.

**இலங்கை மத்திய வங்கி நிதியியல் முறைமையின் ஆற்றல் மற்றும் மீளெழுச்சியை மேம்படுத்துவதற்கு 2009இல் நிதியியல் துறையின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பை மேலும் பலப்படுத்துவதற்கு பல முன்னெடுப்புக்களை எடுத்தது.** உத்தேசிக்கப்பட்ட நிதி வியாபார ஒழுங்குவிதிச் சட்டம் நிதி வியாபாரம் மற்றும் வைப்புக்களை ஏற்பதில் ஈடுபடும் நிறுவனங்களில் ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் மேற்பார்வை தொடர்பாக தற்போதைய சட்டத்திலுள்ள பல குறைபாடுகளைத் தீர்த்து வைக்கும். தற்போதைய வங்கித் தொழிற் சட்டமும் வங்கித்தொழில் குழுமங்களின் திரண்ட மேற்பார்வையை இயலச்செய்வதற்கும், வங்கிகளின் இணைப்புகள் மற்றும் கொள்வனவுகளை வசதிப்படுத்துவதற்கும், ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை பலப்படுத்துவதற்கும் திருத்தப்படவிருக்கிறது. இத்துடன், காப்புறுதிக் கைத்தொழிலின் மேற்பார்வையை விரிவாக்குவதற்கும் பலப்படுத்துவதற்கும் காப்புறுதிக் கைத்தொழிலின் ஒழுங்கமைப்புச் சட்டத்திற்கு திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. முதனிலை வணிகர்கள் அவர்களின் வியாபாரத்தைப் பன்முகப்படுத்துவதற்கும், ஆரம்பத்தில் அதன் சொந்தக் குழுமக் கம்பனிகளில் பங்குகளிலும், தொகுதிக் கடனிலும் முதலிடுவதற்கும் கட்டணத்தை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளை உள்ளடக்குவதற்கும் இதன் பின்பு பட்டியலிடப்பட்ட பங்குகள், தொகுதிக் கடன்கள், முறிகள் மற்றும் வர்த்தகப்பத்திரத்தில் முதலிடுவதை அனுமதிப்பதற்கு பல ஒழுங்குவிதிகள் வழங்கப்பட்டன. நுண்பாக நிதி நிறுவனங்களின் பணியை பலப்படுத்துவதற்கும், மீள ஒழுங்குபடுத்துவதற்கும் அவை பொருளாதாரத்துக்கு சிறந்தளவில் பணிபுரிவதை இயலச் செய்வதற்கும் நுண்பாக நிதி நிறுவனங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கும் மேற்பார்வை செய்வதற்குமான சட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

**ஒட்டுமொத்தத்தில், நிதியியல் நிறுவனங்கள் உள்நாட்டுக் கேள்வியிலான மெதுவடைவால் எதிர்கொள்ளப்பட்ட சவால்களுக்கு மத்தியிலும் சிறப்பாகச் செயலாற்றின.** பொருளாதாரச் செயற்பாட்டிலான மெதுவடைவு காரணமாக

கொடுகடனுக்கான கேள்வியில் வீழ்ச்சி மற்றும் செயலாற்றக் கடன்களிலான அதிகரிப்பு காரணமாக கடன் வழங்கும் போது வங்கிகளால் எடுக்கப்பட்ட எச்சரிக்கையுடனான அணுகுமுறைக்கு மத்தியிலும் வங்கித்தொழில் முறைமையின் இலாபகரத்தன்மை பேணப்பட்டது. பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளின் செயலாற்றம் செலிங்கோ குழுமத்துடன் இணைந்த நிதி மற்றும் குத்தகைக் கம்பனிகளால் எதிர்கொள்ளப்பட்ட முதலீட்டு நம்பகத்தன்மையின் இழப்பு மற்றும் திரவத்தன்மைத் தடைகள் காரணமாக பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளால் எதிர்கொள்ளப்பட்ட கடுமையான திரவத்தன்மைப் பிரச்சனைகளால் மிக மோசமாகப் பாதிப்படைந்தது. திரவத்தன்மைப் பிரச்சனைகளை அனுபவிக்கும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்கு விடும் கம்பனிகளுக்கு உதவுவதற்கு அரசின் உதவியுடன் இலங்கை மத்திய வங்கியால் முன் வைக்கப்பட்ட சிறப்புத் தூண்டல் பொதி மற்றும் உத்தரவாதத் திட்டம் பொதுமக்கள் நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்புவதற்கும் இத் துறையில் வியாபாரத் தொழிற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கும் கருவியாக விளங்கின.

**இலங்கை மத்திய வங்கி நிறுவன ரீதியான உட்கட்டமைப்பின் விரிவாக்கத்தையும் நிதி பெறுவதை அதிகரிப்பதற்கான இயலளவைக் கட்டியெழுப்புவதையும் வசதிப்படுத்தியது.** குறிப்பிடத்தக்க அபிவிருத்தி யாதெனில் மேல் மாகாணத்திற்கு வெளியே போர் முடிவுற்றமை மற்றும் புதுப்பிக்கப்பட்ட முதலீட்டாளர் நம்பகத்தன்மையின் காரணமாக குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல கிளைகள் திறக்கப்பட்டமையாகும். உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளால் திறக்கப்பட்ட 49 புதிய வங்கிக் கிளைகளுள் 17 கிளைகள் கிழக்கு மாகாணத்தில் திறக்கப்பட்டிருக்கையில் வடக்கு மாகாணத்தில் 10 கிளைகள் திறக்கப்பட்டன. இலங்கை மத்திய வங்கி வடக்கு மாகாணத்தில் வாழ்வாதார அபிவிருத்தியை அதிகரிப்பதற்கும் பொருளாதாரச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்கும் சிறப்புக் கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருக்கையில் வேளாண்மை, கால்நடை, நுண்பாக மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சித் துறைகளுக்கு கொடுகடன் வழங்கலை ஒருங்கிணைத்து வசதிப்படுத்துவதனூடாக பிராந்திய அபிவிருத்தியை நோக்காக கொண்ட தொழிற்பாட்டிலிருக்கும் பல கடன் திட்டங்களை தொடர்ந்து மேற்கொண்டது.

**கொடுப்பனவு முறையில் ஏற்படும் இடர்நேர்வுகளைக் குறைப்பதற்குத் தேவையான வழிமுறைகளைப் பின்பற்றுவதனூடாக இலங்கை மத்திய வங்கி மேற்பார்வைக் கட்டமைப்பைத் தொடர்ந்து பலப்படுத்தியதன் மூலம் கொடுப்பனவு முறைமையின் உறுதிப்பாடு, பாதுகாப்பு மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத்துகிறது.** இலங்கை மத்திய வங்கி 2009ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க கொடுப்பனவு அட்டைகளின் பணிவழங்குவோர் ஒழுங்குவிதிகளை 2009 யூலை 31 இலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கியது. இவ் ஒழுங்குவிதியின் நோக்கம் கொடுப்பனவு அட்டைகளின் அனைத்துப்பணி வழங்குவோரும் பன்னாட்டு நியமங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதை உறுதிப்படுத்துவதன் மூலம் கொடுப்பனவு அட்டைக் கைத்தொழிலின் பாதுகாப்பை அதிகரித்து இதன் மூலம் கடன் அட்டை மோசடியின் இடர்நேர்வுகளைக் குறைத்து அட்டையை அடிப்படையாகக் கொண்ட இலத்திரனியல் கொடுப்பனவுகளில் பொதுமக்கள் நம்பகத்தன்மையை அதிகரிப்பதாகும். கொடுப்பனவு அட்டைகளின் பணி வழங்குவோர் அனைவரும் கடன் அட்டைகள், பற்று அட்டைகள், விதிப்பனவு அட்டைகள், இலத்திரனியல் குறியீடு அல்லது கணக்குடன் தொடர்புபட்ட எந்தவொரு வழிமுறையையும் கொண்டுள்ள சாதனங்கள் என்பன தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியிலிருந்து உரிமத்தைப் பெற வேண்டும்.

## 1.3 உலகளாவிய பொருளாதார சூழலும் தோற்றப்பாடும்[1]

**2009இல் உலகிலுள்ள அநேக பொருளாதாரங்கள் உலகளாவிய நிதியியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் தொடர்ந்து பாதிப்படைந்தன.** 2009இல் மோசமான பொருளாதார வீழ்ச்சிக்கு பதிலிறுத்தும் வகையிலும் கேள்வியை அதிகரித்து நிதியியல் அழுத்தங்களை எதிர்கொள்வதற்கும் முன்னேற்றமடைந்த அது போல் அபிவிருத்தியடைந்து வரும் பல பொருளாதாரங்கள் தளர்ந்த நாணயக் கொள்கை, வரலாற்று ரீதியான குறைந்த வட்டி வீதங்கள், மத்திய வங்கியின் ஐந்தொகைகளின் முன்னெப்போதுமில்லாத விரிவாக்கம் மற்றும் விரிவடைந்த இறைக் கொள்கை போன்ற பரவலாக்கப்பட்ட கொள்கைத் தூண்டலைப் பின்பற்றின. கொள்கை நடவடிக்கைகள் பரவலாக்கப்பட்டதற்கு மத்தியிலும் 2009இன் பெரும்பகுதியில் நிதியியல் அழுத்தங்கள் தொடர்ந்தும் மோசமாக விளங்கி உண்மைப் பொருளாதாரத்தைப் பாதித்தது. பன்னாட்டு நாணய நிதியத்தின் எறிவுகளின்படி உலகப் பொருளாதாரம் 2008இன் 3.0 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2009இல் 0.8 சதவீதத்தால் சுருக்கமடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இப் பொருளாதார வீழ்ச்சி 3.2 சதவீதத்தால் சுருக்கமடைந்ததாக மதிப்பிடப்பட்ட முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களால் வழிநடத்தப்பட்டது. மிகப் பெரிய பொருளாதாரச் சுருக்கங்கள் யப்பான், ஐக்கிய இராச்சியம் மற்றும் யூரோ பிரதேசங்களில் அவதானிக்கப்பட்டன. முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களின் வீழ்ச்சி ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் மற்றும் பணிகளில் தங்கியிருக்கும் தோற்றம் பெற்று வரும் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களின் வளர்ச்சியைப் பெரிதும் பாதித்தது. தோற்றம் பெற்று வரும் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் 2009இல் 2.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்ட போதிலும் வளர்ச்சியானது முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களிலான பொருளாதாரச் சுருக்கத்தை எதிரீடு செய்யப் போதுமானதல்ல. இதேவேளை, குறைந்த கேள்வி, மோசமான கம்பனி அரசிறைகள்,பாரிய அளவுக்கதிகமான இயலளவு மற்றும் இறுக்கமான கொடுகடன் நிபந்தனைகளுடன் 2009ஆம் ஆண்டு தொழிலின்மை வீதங்கள் உலகம் முழுவதும் எச்சரிக்கையான மட்டங்களுக்கு அதிகரித்திருப்பதைக் கண்டது. இதில் முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் கிட்டத்தட்ட 10 சதவீதத்தைக் கொண்டிருந்தன.

1. இப் பகுதியின் ஆய்வானது ப.நா.நிதியத்தின் ஒத்தோபர் 2009 மற்றும சனவரி 2010 (திருத்திய) உலகப் பொருளாதார எதிர்பார்க்கைகள் மற்றும் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் வெளியீடுகளைக் அடிப்படையாக் கொண்டது.

**அட்டவணை 1.4**

**உலகப் பொருளாதார அபிவிருத்திகளும் தோற்றப்பாடுகளும் (அ)**

| விடயம் | உண்மை | | எறிவுகள் | |
|---|---|---|---|---|
| | 2007 | 2008 | 2009 | 2010 |
| **உலக வெளியீடு** | **5.2** | **3.0** | **-0.8** | **3.9** |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 2.7 | 0.5 | -3.2 | 2.1 |
| ஐக்கிய அமெரிக்கா | 2.1 | 0.4 | -2.5 | 2.7 |
| யூரோ பகுதி | 2.7 | 0.6 | -3.9 | 1.0 |
| ஐக்கிய இராச்சியம் | 2.6 | 0.5 | -4.8 | 1.3 |
| யப்பான் 2.3 | -1.2 | -5.3 | 1.7 | |
| தோற்றம் பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள் | 8.3 | 6.1 | 2.1 | 6.0 |
| அபிவிருத்தி அடைந்துவரும் ஆசியா | 10.6 | 7.9 | 6.5 | 8.4 |
| சீனா | 13.0 | 9.6 | 8.7 | 10.0 |
| இந்தியா | 9.4 | 7.3 | 5.6 | 7.7 |
| **உலக வர்த்தக அளவு (பொருட்கள் மற்றும் பணிகள்)** | **7.3** | **2.8** | **-12.3** | **5.8** |
| இறக்குமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 4.7 | 0.5 | -12.2 | 5.5 |
| தோற்றம் பெற்றுவரும் அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 13.8 | 8.9 | -13.5 | 6.5 |
| ஏற்றுமதிகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் | 6.3 | 1.8 | -12.1 | 5.9 |
| தோற்றம் பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் | 9.8 | 4.4 | -11.7 | 5.4 |
| **விலை அசைவுகள்** | | | | |
| நுகர்வோர் விலைகள் | | | | |
| முன்னேற்றங்கண்ட பொருளாதாரம் | 2.2 | 3.4 | 0.1 | 1.3 |
| தோற்றம் பெற்றுவரும், அபிவிருத்தி அடைந்துவரும் பொருளாதாரங்கள் | 6.4 | 9.2 | 5.2 | 6.2 |
| பண்டங்களின் விலைகள் (ஐ.அ.டொ) | | | | |
| எண்ணெய் | 10.7 | 36.4 | -36.1 | 22.6 |
| எரிபொருள் அல்லாதவை | 14.1 | 7.5 | -18.9 | 5.8 |
| **ஐ.அ.டொலர் வைப்புக்கள் மீதான ஆறுமாத இலண்டன் வங்கிகளுக்கு இடையிலான வழங்கல் வீதம் (சதவீதம்)** | **5.3** | **3.0** | **1.1** | **0.7** |

(அ) ஆண்டுச் சதவீத மாற்றம் வேறு விதத்தில் குறிப்பிட்டாலன்றி

மூலம்: உலகப் பொருளாதாரத் தோற்றப்பாடு (சன.2010 மற்றும் ஒத் 2009),ப.நா.நிதியம்

**2010இல் உலக வளர்ச்சி தோற்றம் பெற்று வரும் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களிலான வளர்ச்சியால் பெருமளவில் உந்தப்பட்டு 3.9 சதவீதமளவில் இருக்குமென பன்னாட்டு நாணய நிதியம் அதன் ஆகப் பிந்திய எதிர்வுகூறல்களில் எறிவு செய்துள்ளது.** செலவிடல் அதிகரிப்பதற்கு வழங்கப்பட்ட பல தரப்பட்ட பொருளாதாரத் தூண்டல் காரணமாக நுகர்வோர் கேள்வி படிப்படியாக அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, பன்னாட்டு வர்த்தகம் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் பொருட்கள் மற்றும் பணிகள் இரண்டிலுமான உலக வர்த்தக அளவு 2010இல் 5.8 சதவீதத்தால் அதிகரிக்குமென பன்னாட்டு நாணய நிதியம் எறிவு செய்துள்ளது. மேலும் அபிவிருத்தியடைந்து வரும் மற்றும் தோற்றம் பெற்று வரும் பொருளாதாரங்களினுள் மூலதன உட்பாய்ச்சல்கள் வருமிடத்து அத்தகைய பொருளாதாரங்களுக்கான இறக்குமதிகளும் கணிசமானளவில் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் 2010இல் 2.1 சதவீதத்திலும் 2011இல் மேலும் 2.5 சதவீதத்திலும் வளர்ச்சியடையுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. இவ் வளர்ச்சி தயாரிப்புத் துறையிலான மீளெழுச்சியால் வழிநடத்தப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன் இது, சில்லறை விலை படிப்படியாக உறுதிப்படுத்தி, நுகர்வோர் நம்பகத்தன்மையை மீள ஏற்படுத்தி வீடமைப்புச் சந்தைகளை மேம்படுத்துகிறது. சேர்மனி, பிரான்ஸ் போன்ற ஐரோப்பியப் பிராந்தியங்களிலுள்ள நாடுகள், ஐக்கிய அமெரிக்க நாடுகள், யப்பான் மற்றும் அவுத்திரேலியா பொருளாதார மீட்சியின் அறிகுறிகளைக் காட்டுகையில் ஐக்கிய இராச்சியம் மீட்சிச் செயல்முறையில் எஞ்சிய அபிவிருத்தியடைந்த நாடுகளைவிட பின்தங்கிக் காணப்படுகிறது. முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களிலான மீட்சி வரலாற்று நியமங்களுடன் ஒப்பிடுகையில் இன்றும் நலிவாகவே காணப்படுகிறது. இங்கு எறிவு செய்யப்பட்ட உண்மை வெளியீடு 2011 பிற்பகுதி வரை நெருக்கடிக்கு முன்னரான மட்டங்களைவிட குறைந்தளவிலேயே தொடர்ந்திருக்குமென எறிவு செய்யப்பட்டுள்ளது. தோற்றம் பெற்று வரும் பொருளாதாரங்களிலான வளர்ச்சி குறுகியதிலிருந்து நடுத்தர காலத்தில் உலக பொருளாதார மீட்சியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும். தோற்றம் பெற்று வரும் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் 2010இல் 6 சதவீதமளவில் வளர்ச்சியடையுமெனவும் 2011இல் 6.3 சதவீதத்திற்கு விரைவடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை, ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் யூரோ பிரதேசத்திலான தொழில்நிலை 2010இல் முறையே 10 சதவீதத்திற்கும் 12 சதவீதத்திற்கும் அதிகரிக்குமென எறிவு செய்யப்பட்டுள்ளது. இது வரை, ஆசியப் பிராந்தியத்திலான பொருளாதார மீட்சி விரைவானதாகவும் பலமானதாகவும் இருக்கிறது. ஆசியப் பிராந்தியத்தில் பரந்தளவிலான பொதுமக்களின் தலையீடு மற்றும் விரைந்த பொருளாதார மீட்சி கேள்வியை அதிகரித்து நிதியியல் சந்தைகளில் நிச்சயமற்றதன்மை மற்றும் முறைமை ரீதியிலான இடர்நேர்வைக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**2009இல் பொருட்களின் விலையிலான வீழ்ச்சி மற்றும் உலக கேள்வியில் முன்னெப்போதுமில்லாத மெதுவடைவு 2009இல் முன்னேற்றமடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்கள் இரண்டிலுமான முதன்மைப் பணவீக்கத்தில் வியக்கத்தக்க வீழ்ச்சிக்கு வழியமைத்தது.** முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களிலான பணவீக்கம் 2008இன் 3.4 சதவீதத்திலிருந்து 2009இல் 0.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் தோற்றம் பெற்று வரும் மற்றும் அபிவிருத்தியடைந்த வரும் பொருளாதாரங்களிலான பணவீக்க வீதம் 2008இன் 9.2 சதவீதத்திலிருந்து 2009இல் 5.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. முதன்மைப் பணவீக்கத்திலான வீழ்ச்சிகளுக்கு எதிர்த்து நிற்காது முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களிலான மையப் பணவீக்கமும் சார்பு ரீதியில் தொடர்ந்து உறுதியாக விளங்கியது. எனினும், யப்பான் மையப் பணவீக்கத்தில் பூச்சியத்திற்குக் குறைவான வீழ்ச்சியை அனுபவித்தது. பொருளாதார மீட்சி மற்றும் உலகக் கேள்வியிலான படிப்படியான அதிகரிப்பு 2010இல் பொருட்களின் விலைகளில் மேல் நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், தாங்கிருப்புகளின் கூடிய மட்டம் மற்றும் அளவுக்கதிகமான இயலளவு விலைகளிலான அதிகரிப்பைத் தணிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்க்கப்பட்ட உயர் வலு விலைகள் காரணமாக முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களிலான முதன்மைப் பணவீக்கம் 2009இன் 0.1 சதவீதத்திலிருந்து 2010இல் 1.3 சதவீதத்திற்கு விரைவடையுமென பன்னாட்டு நாணய நிதியம் எறிவு செய்துள்ளது. இதேவேளை, தோற்றம் பெற்றுவரும் மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் சில பொருளாதாரங்கள் அதிகரித்த மூலதன உட்பாய்ச்சல்களிலிருந்து எழும் கேள்வியால் மேல் நோக்கிய அழுத்தங்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதால் இவற்றிலான பணவீக்கம் 2010இல் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**நிதியியல் நிலைமைகள் நெருக்கடிக்கு முன்பிருந்ததை விட கூடியளவு இடர்பாடுள்ளதாக தொடர்ந்து விளங்கிய போதிலும் நிதியியல் நிறுவனங்கள் பலப்படுத்தப்பட்டதன் காரணமாக உலக நிதியியற் சந்தைகள் எதிர்பார்த்ததை விட விரைவாக மீட்சியடைந்தது.** பணச் சந்தைகள் உறுதியாக்கப்பட்டதுடன் வங்கி கடன் வழங்கும் நியமங்களின் இறுக்கமாக்கலும் மிதமடைந்தது. இத்துடன், முக்கிய சந்தைகளிலுள்ள அநேகமான வங்கிகள் தற்போது மத்திய வங்கியின் அவசரகால வசதிகள் மற்றும் அரச உத்தரவாதங்களில் குறைந்தளவிலேயே தங்கியிருக்கின்றன. இருப்பினும், மூலதனத்தை மீளக்கட்டியெழுப்புவதான தேவை, தனியார் பிணையமயப்படுத்தலிலான குறைபாடு மற்றும் குறிப்பாக வர்த்தக உண்மைச் சொத்துத் தொடர்பாக மேலும் படுகடன் பதிவழித்தல் செய்யும் சாத்தியம் என்பவற்றைக் கவனத்திற் கொள்கையில் வங்கிக் கடன் வழங்கல் தொடர்ந்து மந்தமாகவே காணப்படும். அநேகமான உயர் விளைவுச் சந்தைகள் மீளத் திறக்கப்படுவதற்கு மத்தியில் பங்குச் செந்தைகள் மீளெழுச்சியடைந்ததுடன் கம்பனி முறி வழங்கல் சாதனைமிக்க மட்டங்களை அடைந்தது. எனினும், கம்பனி முறி வழங்கலிலான எழுச்சி தனியார் துறைக்கான வங்கியின் கொடுகடன் வளர்ச்சியிலான குறைப்பை எதிரீடு செய்யவில்லை. மூலதனச் சந்தைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட நுழைவை மட்டும் கொண்டுள்ள நுகர்வோர் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் போன்ற துறைகள் கொடுகடன் தடைகளுக்கு தொடர்ந்து முகம் கொடுக்க வேண்டியிருக்கும். இது வரை, இத் துறைகளுக்கு கொடுகடனை ஏற்பாடு செய்வதற்கு பகிரங்கக் கடன் வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களும் உத்தரவாதங்களும் முக்கியமானவையாகும். இதேவேளை, அநேக அரசாங்கங்களினால் பின்பற்றப்படுகின்ற விரிவாக்க இறைக்கொள்கைகளும் அதன் விளைவாக ஏற்படும் பாரிய இறைப் பற்றாக்குறைகளும் நாட்டுக்கான குறிப்பாக, சில சிறிய நாடுகளுக்கான படுகடனை அழுத்தத்திற்குட்படுத்துகின்றன. தோற்றம் பெற்று வரும் பல பொருளாதாரங்களிலான செழிப்பான வளர்ச்சிக்கு சார்பு ரீதியில் விரைவாகத் திரும்பியமையின் மத்தியில் இச் சந்தைகளுக்கான சொத்துப்பட்டியல் உட்பாய்ச்சல்கள் அதிகரிக்கத் தொடங்கின.

**முன்னேற்றமடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் பல பொருளாதாரங்களில் நாணயக் கொள்கைத் தளர்வுக்குப் பதிலிறுத்தும் வகையில் குறுகிய தவணை வட்டிவீதங்கள் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தன.** முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களால் மேற்கொள்ளப்பட்ட பாரிய கொள்கை வீதக் குறைப்புக்கள் முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் அநேகமானவற்றில் கொள்கை வட்டி வீதங்கள் பூச்சியத்தை அண்மித்திருக்கச் செய்தன. 2009இல், ஏற்கனவே கிட்டத்திட்ட பூச்சியத்தை கொள்கை வீதங்களாகக் கொண்ட ஐக்கிய அமெரிக்கா நீங்கலாக முன்னுனேற்றமடைந்த பொருளாதாரங்களிடையேயான வட்டிவீதக் குறைப்புக்கள் சராசரியாக 1.5 சதவீதமாக விளங்கின. முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில் மேலும் வட்டிவீதக் குறைப்புக்களை மேற்கொள்வதற்கான வசதி ஏற்கனவே முடிந்துவிட்டமையால் வரும் ஆண்டில் சந்தைகள் குறிப்பிடத்தக்க வட்டிவீதக் குறைப்புக்களை எதிர்பார்க்கவில்லை. ஐக்கிய அமெரிக்க பெடறல் றிசேர்வ், பாங்க் ஒவ் கனடா மற்றும் சுவீடிஸ் றிக்ஸ் பாங்க் வட்டிக் குறைப்புக்களை குறுகிய தவணை வீதங்களிலிருந்து நீண்டகால முதிர்ச்சிகளுக்கு ஊடுகடத்தும் முயற்சியாக மீட்சியின் தெளிவான அறிகுறிகள் தென்படும்வரை குறைந்த கொள்கை வீதங்களைப் பேணுவதற்கு வெளிப்படையாக கடப்பட்டுள்ளன. இதற்கு முரணாக, வட்டிவீதக் குறைப்புக்கள் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களில் பொதுவாகக் குறைவாகவே காணப்படுகின்றன. இது பெரும்பாலும் நிலவிய உயர் பணவீக்கம் மற்றும் மூலதன வெளிப்பாய்ச்சல்களுக்கு பதிலிறுத்தும் வகையில் செலாவணிவீதங்களில் பெறுமானக் குறைப்பை ஏற்படுத்துவதற்கான அழுத்தத்தினதும் இணைந்த விளைவாகும். எனினும், தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்கள் எதிர்பார்த்ததைவிட சிறிதளவில் முகாமை செய்யப்பட்டதுடன், தோற்றம் பெற்று வரும் சில பொருளாதாரங்கள் பண விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு வட்டி வீதங்களை அதிகரிக்கத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**முன்னேற்றமடைந்த அநேகமான பொருளாதாரங்கள் மற்றும் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்களிலுள்ள மத்திய வங்கிகள் 2009இல் நிதியியல் நிலைமைகளை மேலும் தளர்த்துவதற்கு பல வகையான மரபுவழியல்லாத வழிமுறைகளை எடுத்தன (சிறப்புக் குறிப்பு 1 இனைப் பார்க்கவும்).** பெரும்பாலும் வெவ்வேறான நிதியியல் முறைமை அமைப்புக்களை பிரதிபலிக்கும் பல்வேறான அணுகுமுறைகள் காணப்படுகின்றன. அனைத்து மத்திய வங்கிகளும் ஒவ்வொரு நிதியியல் முறைமையிலும் அவற்றின் முக்கியத்துவத்தை கவனத்தில் கொண்டு வங்கிகளுக்கான நீடித்த திரவத்தன்மைக்கு உதவும் வழிமுறைகளை நடைமுறைக்கிட்டன. அநேகமான மத்திய வங்கிகள் ஐ.அ.டொலர்களில் திரவத் தன்மையை வழங்கியதுடன் பெடறல் றிசேவ் உடன் பரிமாற்றல் முறைகளை ஏற்பாடு செய்தது. ஏனையவற்றினுள்ளே பெடறல் றிசேவ் மற்றும் பாங்க் ஒவ் இங்கிலன்ட் என்பன நீண்ட தவணை விளைவுகளைக் குறைக்கும் பொருட்டு அரச முறிகளின் உடனடிக் கொள்வனவுகள் மூலம் தலையிட்டன. ஐக்கிய அமெரிக்க பொருளாதாரத்துக்கான பிணையங்கள் சந்தைகளின் மிக உயர்வான முக்கியத்தைக் கவனத்திற் கொண்டு அரச உத்தரவாதமுள்ள தொழில் முயற்சிக்கான படுகடன், ஈட்டில் உத்தரவாதமளிக்கப்பட்ட பிணையங்கள் மற்றும் வர்த்தகப் பத்திரங்களுக்கான சந்தைகளில் பெடறல் றிசேர்வ் தீவிரமாக தலையிட்டதுடன் சொத்தைப் பிணையாகக் கொண்ட பிணையங்களில் முதலீட்டாளர்களுக்கு நிதியிடலையும் ஓரளவு பாதுகாப்பையும் வழங்கியது. கொள்கை வீதக் குறைப்புக்கள் மற்றும் இறைத் தூண்டல் வழிமுறைகளுடன் சேர்ந்து இத் தொழிற்பாடுகள் நிதியியற் சந்தையில் நம்பகத்தன்மையையும் திரவத்தன்மை நிலைமைகளையும் மேம்படுத்த உதவியது.

**கொள்கை வழிமுறைகள் இறுக்கமாக்கப்படுவதன் மூலம் உலகக் கேள்வி சுருக்கமடைவதால் நாணய மற்றும் இறைக் கொள்கைகளுக்கு வசதியளிப்பதிலிருந்து முன்கூட்டிய மீளப் பெறுகைகள் முக்கிய கரிசனையாக இருக்கிறது.** நிதியியற்துறை செழிப்பை மீள ஏற்படுத்துவது முக்கிய தேவையாக தொடர்ந்து விளங்குகையில் மீட்சி உறுதியாகக் கால்பதிக்கும்வரை ஆதரவளிக்கும் பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளைப் பேணவேண்டும். நாணயக் கொள்கை உபாயங்களுக்கு வசதியளிப்பது இவ் வெளியேறல் உபாயங்களின் தாக்கத்தை மிதப்படுத்துவதற்குத் தேவைப்படுகிறது.

## சிறப்புக்குறிப்பு 1

## உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்கு மத்திய வங்கியின் பதிலிறுப்பு

முன்னேற்றங் கண்ட பொருளாதாரங்கள் மற்றும் வளர்ந்து வரும் பொருளாதாரங்கள் இரண்டிலுமுள்ள மத்திய வங்கிகள் உலகளாவிய நிதியியல் நெருக்கடியினை எதிர்கொள்வதற்காக முன்னெப்பொழுதுமில்லாத விதத்தில் கொள்கைப் பதிலிறுப்புக்களில் முனைந்தன. இக் கொள்கைப் பதிலிறுப்புக்களில் சில, உலகளாவிய நிதியியல் முறைமை முழுமையாகவே முறிவடைந்து போவதனைத் தடுப்பதற்கான முறையில், சில மத்திய வங்கிகளின் மரபுவழி தொழிற்பாட்டு கட்டமைப்பிற்குள் நின்றும் மற்றையவை மரபுவழி மத்திய வங்கித்தொழில் முறைக்கு மாறான விதத்தில் நின்றும் மேற்குறிப்பிட்ட முறிவைத் தடுப்பதற்கான கருவிகளாக தொழிற்படுத்தப்பட்டன. நிதியியல் நெருக்கடிக்கான மத்திய வங்கிகளின் பொதுவான கொள்கைப் பதிலிறுப்புக்களை நெருக்கடிகள் வளர்ந்த வேறுபட்ட கட்டங்களின் அடிப்படையில் பல்வேறு நிலைகளுக்குள் பரந்த ரீதியில் வகைப்படுத்தப்பட்டன. இதற்கமைய, நெருக்கடியின் ஆரம்பநிலையின் போது நடைமுறைப்படுத்தப்பட்ட முதலாவது கொள்கைகள் அடங்கிய தொகுதி, திரவத்தன்மையினை வழங்குவதனூடாக குறுங்கால நாணயச் சந்தைகளில் காணப்பட்ட அழுத்தங்களுக்கு நிவாரணம் அளிப்பதனை இலக்காகக் கொண்டிருந்தது. இரண்டாவது கட்டத்தின் போது, குறுங்காலச் சந்தையில் காணப்பட்ட அழுத்தங்கள் பரந்த நிதியியல் சந்தைகளுக்கு கசிந்து பரவும் போது, மத்திய வங்கிகள் பிணையங்கள் மற்றும் இணைத்தரப்புக்கள் இரண்டினையும் விரிவாக்குவதனூடாக பரந்த நிதியியல் சந்தைகளில் காணப்பட்ட நிதியியல் அழுத்தங்களைத் தளர்த்துவதன் மூலம் சந்தைப் பங்கேற்பாளர்களுக்கு விடுவிக்கப்பட்ட நிதியிடல் தொடர்பான முதிர்ச்சிக் காலத்தினையும் அதிகரிக்கிறது. அதன் பின்னர், நிதியியல் சந்தையில் அழுத்தங்கள் தொடர்ச்சியாகக் காணப்பட்டு உண்மைப் பொருளாதாரத்தில் நம்பிக்கைகள் சிதைந்த பொழுது மத்திய வங்கிகள் பயத்தையும் இடர்நேர்வு தொடர்பான உணர்வுகளையும் தணிக்கும் விதத்தில் நீண்டகால நிதியிடலை வழங்குவதற்கான கொள்கை நடவடிக்கைகளை இணைப்பதுடன் தொடர்பூட்டல் வழிமுறைகளையும் அதிகரிக்கின்றன.

2007 ஓகத்தில் நிதியியல் நெருக்கடிகள் தோற்றம் பெற்ற ஆரம்ப கட்டத்தில் மத்திய வங்கியின் தலையீடு, ஆலோசனை முன்னேற்றங் கண்ட பொருளாதாரங்களில் வங்கிகளுக்கிடையிலான கடன் வழங்கலை வறிதாக்குவதற்கான பதிலிறுப்பாகவே அமைந்திருந்தது. பரந்தளவான சிக்கலான பிணையங்களின் மதிப்பீடுகள் தொடர்பான நிச்சயமற்ற தன்மையுடன் பிணைந்த திரவத்தன்மை மற்றும் கொடுகடன் இடர்நேர்வுகளின் காரணமாக வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தையின் கடன் வழங்கல்கள் கட்டுப்படுத்தப்பட்டன. இத்தகைய பின்னணியில், மத்திய வங்கிகள் வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தைகளுக்கு திரவத்தன்மையினைச் செலுத்த ஆரம்பித்தன. முதலாவதாக, மத்திய வங்கிகள், கொள்கை வட்டி வீதங்களைக் குறைப்பது போன்ற மிகப் பாரம்பரியமான நாணயக் கொள்கை வழிமுறைகளை நாடின. எனினும், வங்கிகளுக்கிடையிலான கடன் வழங்கல் சந்தைகளின் நிலைமைகளை மேம்படுத்துவதற்கு பாரம்பரியமான நாணயக் கொள்கை வழிமுறைகள் மட்டும் காத்திரமானவையல்ல என்பது புலனாயிற்று. ஏனெனில் கொள்கை வீதங்களில் செய்யப்பட்ட மாற்றங்கள் வங்கிகளுக்கிடையிலான பணச் சந்தைகளில் சிறிதளவான தாக்கத்தினை மட்டுமே கொண்டிருந்தன.

எனவே, வங்கிகளுக்கிடையிலான சந்தையில் காணப்பட்ட திரவ நெருக்கடிகளைக் கட்டுப்படுத்துவதற்காக, மத்திய வங்கிகள் கூடியளவிற்கு மரபு வழியற்ற வழிமுறைகளில் கவனம் செலுத்தின. திரவத்தன்மையினை வழங்குவதற்கான அவர்களது வழமையான தொழிற்பாடுகளுக்குப் புறம்பாக, வழமையான திரவத்தன்மை வழங்கல்களிலும் பார்க்க மிகக் கூடியளவில் திரவத்தன்மையினை வழங்குவதற்காக மத்திய வங்கிகள் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்தின. நெருக்கடியின் ஆரம்ப நிலையின் போது மத்திய வங்கிகளும், அவசரகால திரவத்தன்மை உதவிகளை நாடின.

உலகளாவிய நெருக்கடிகள் அதன் இரண்டாவது ஆண்டிற்குள் நுழைந்தமையினால், நிதியியல் முறைமையினை உறுதிப்படுத்தும் நோக்குடன் மத்திய வங்கிகள் முன்னெப்பொழுதுமில்லாத பல்வேறு கொள்கை நடடிவடிக்கைகளை மேற்கொண்டன. குறிப்பிடத்தக்க கொள்கை நடவடிக்கை யாதெனில், காப்புறுதிக் கம்பனி, ஏஜஜி மற்றும் சிற்றிகுறூப் வங்கித்தொழில் பாரிய குழுமங்கள் என்பனவற்றிற்கான அமெரிக்க பெடரல் வங்கியின் உதவி போன்று நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு முறையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளுக்கும் ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்கும் அவசரகால திரவத்தன்மை உதவிகளை வழங்குவதற்கும் எடுத்த தீர்மானமேயாகும்.

முக்கியமாக மத்திய வங்கியின் இணைக்கப்பட்ட கொள்கை நடவடிக்கை, 2008ஆம் ஆண்டின் உலகளாவிய நிதியியல் நெருக்கடிக்காக மத்திய வங்கிகளின் பதிலிறுப்பில் இன்னொரு குறிப்பிடத்தக்க பண்பாக இருந்தது. இக் கூட்டு நடவடிக்கைகளில் முதலாவது விடயம் பெடரல் வங்கி, ஐரோப்பிய மத்திய வங்கி, இங்கிலாந்து வங்கி, யப்பானிய வங்கி, கனடா வங்கி, சுவிற்ஸ்லாந்து தேசிய வங்கி மற்றும் சுவீடன் றிஸ்ற் வங்கி என்பன பெரும் எண்ணிக்கையான நிதியியல் நிறுவனங்களுக்கு திரவத்தன்மையினை நேரடியாக விடுவிப்பது தொடர்பாகவும் பரந்தளவிலான பிணையங்களை அவற்றிற்கெதிராக நிர்ணயிப்பது தொடர்பாகவும் வழிமுறைகளை அறிவித்த வேளையான 2007 இறுதியில் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து இன்னொரு இணைக்கப்பட்ட கொள்கை நடவடிக்கைச் சுற்று, ஆறு முக்கிய மத்திய வங்கிகளான பெடரல் வங்கி, ஐரோப்பிய மத்திய வங்கி, இங்கிலாந்து வங்கி, கனடா வங்கி, சுவிற்சிலாந்து தேசிய வங்கி மற்றும் சுவீடன் றிஸ்க் வங்கி என்பன ஒரே நேரத்தில் அவற்றின் கொள்கை வட்டி வீதங்களில் குறைப்பை அறிவித்த 2008 ஒத்தோபர் 8ஆம் நாளன்று இடம் பெற்றது.

கொள்கைப் பதிலிறுப்புக்களின் மூன்றாவது வகை, வங்கித்தொழில் அல்லாத துறையின் கொடுகடன் நிலைமையினை இலகுபடுத்துவதற்காக மத்திய வங்கிகளினால் நிறைவேற்றப்பட்டது. இவ் வழிமுறைகளின் கீழ், திரவத்தன்மையை மேம்படுத்துவதற்காக வங்கியல்லாதவற்றிற்கு நெறிப்படுத்தப்பட்டது. வர்த்தகப்பத்திரங்கள் சொத்துக்களினாலும் உத்தரவாதப்படுத்தப்பட்ட பிணையங்கள் மற்றும் கம்பனி முறிகள் போன்ற குறித்துரைக்கப்பட்ட சந்தைகளும் இறுக்கமான கொடுகடன் நிலைமைகளை ஒழிப்பதற்கும் மிகையான இடர்நேர்வு உணர்வுகளை நீக்குவதற்குமாக இலக்கிடப்பட்டன. மத்திய வங்கியும் இணைத்தரப்பினரை பரவலாக்கியமை, முதிர்ச்சிக் காலத்தினை நீடித்தமை திரவத்தன்மையை வழங்குவதற்கான பிணையங்களாக பிணையங்களின் தகைமை அளவினை விரிவாக்குதல் என்பனவற்றின் மூலம் வங்கிகளுக்கிடையிலான

திரவத்தன்மையினை பெருக்குவதற்கு ஏற்றவிதத்தில் முன்னைய வழிமுறைகளை விரிவாக்கியிருக்கிறது.

வளர்ந்து வரும் பொருளாதாரங்களிலுள்ள மத்திய வங்கிகளும் கூட, வெளிநாட்டுச் செலாவணி மற்றும் உள்நாட்டு நிதியியல் சந்தைகளில் காணப்படும் அழுத்தங்களை ஒழிப்பதற்கு பாரம்பரியமானது, பாரம்பரியமற்றதுமான ஒரு கலப்பு நாணயக் கொள்கை வழிமுறைகளிலேயே தங்கியிருக்கின்றது. வளர்ந்து வரும் நாடுகளில் அநேகமானவற்றின் வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கு நிறுவனங்கள் நிதியியல் நெருக்கடிகளினால் மோசமாகப் பாதிக்கப்பட்டன. இதற்குப் பதிலளிக்கும் விதத்தில் வளர்ந்து வரும் பொருளாதாரங்களிலுள்ள மத்திய வங்கிகள், டொலர் திரவத்தன்மை ஒதுக்கத்திற்காக மற்றைய மத்திய வங்கிகளுடன் பரிமாற்றல் ஒழுங்குகளில் ஈடுபடுவதன் மூலம் தமது வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை வலுப்படுத்திக் கொள்ளும் முக்கிய வழிமுறைகளை மேற்கொண்டன. மேலும், வளர்ந்து வரும் பொருளாதாரங்கள் சிஎஉ இன் சிறப்பு ஒதுக்கங்களின் மூலமும் கடன் வசதிகளுக்கான ஏற்பாடுகளின் மூலம் அவற்றின் ஒதுக்கங்களை வலுப்படுத்திக் கொள்ள ப.நா. நிதியம் உதவியது. பல மத்திய வங்கிகள் ஒதுக்குத் தேவைப்பாட்டு விகிதத்தில் குறைப்பு உள்ளிட்ட உள்நாட்டு ஒதுக்குத் தேவைப்பாட்டினைத் தளர்த்திய வேளையில் பல மத்திய வங்கிகள் உள்நாட்டு திரவப் பற்றாக்குறைகளை ஒழிப்பதற்காக, ஏற்கனவேயுள்ள நியம திரவத்தன்மையை வழங்குகின்ற வசதிகளின் நியமங்களைத் தளர்த்தின.

உலகம் முழுவதிலுமுள்ள மத்திய வங்கிகள், அவை தொடர்பான பொருளாதாரங்களில் காணப்படும் நிதியியல் நெருக்கடிகளின் தாக்கத்தினை எதிர்க்கும் நடவடிக்கையாக பரந்தளவிலான கொள்கை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தின. தோற்றம் பெற்று வரும் சந்தைகளினாலும் கூட உலகளாவிய நிதியியல் நெருக்கடிகளிலிருந்தான பாதகமான விளைவுகளிலிருந்து தப்பிக் கொள்ள முடியவில்லை. செலாவணி வீதங்கள் அழுத்தங்களுக்குட்பட்டதுடன் வெளிநாட்டு நாணயங்கள் மீளப் பெறப்பட்டு வந்தமையின் காரணமாக ஒதுக்குகள் குறைவடைந்தன. அதேநேரம், ஏற்றுமதிகளும் பணவனுப்பல்களும் வீழ்ச்சியடைந்ததுடன் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன்களுக்கான அவற்றின் பாதிக்கப்படும் தன்மை காரணமாக அழுத்தங்களுக்குள்ளாகினர். வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகளுக்கான வெளிநாட்டு நாணய ஒதுக்கம் உள்நாட்டு நாணய திரவத்தன்மையிலும் சமகால வீழ்ச்சியொன்றிற்கு வழிவகுத்தது. வளர்ந்து வரும் பொருளாதாரங்களின் பதிலிறுப்பு, குறிப்பாக, சிறிய திறந்த பொருளாதாரங்கள் வெளிநாட்டு அதிர்வுகளுக்கு கூடியளவில் தாம் பாதிக்கப்பட்டு விடுவோம் என்று நினைப்பதனால் அவர்களது பதிலிறுப்பு முக்கியமானதாக காணப்படுகின்றது. எனவே, நிதியியல் நெருக்கடிகளிலிருந்தும் குறிப்பாக சிறிய திறந்த பொருளாதாரங்களுக்கு ஏற்பட்ட நெருக்கடிக்கான மத்திய வங்கிகளின் பதிலிறுப்புக்களிலிருந்தும் அநேக பாடங்கள் கற்றுக்கொள்ளப்பட்டன.

- உலகளாவிய பிரச்சனைகளுக்கு உலகளாவிய தீர்வுகளே தேவை. நிதியியல் நெருக்கடிகளின் முழுத்தன்மையினதும் காரணமாக உலகம் முழுவதிலுமுள்ள மத்திய வங்கிகளுக்கும் அரசாங்கங்களுக்குமிடையில் ஒருங்கிணைக்கப்பட்ட கொள்கை நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. அண்மைய நெருக்கடிகளைப் பொறுத்தவரையில், உலகளாவிய பதிலிறுப்பு, நிச்சமற்றதன்மை மிக உயர்வான நேரத்தில் நிதியியல் சந்தைகளின் நம்பிக்கையை அதிகரித்தது.
- நெருக்கடிச் சூழலில், கொள்கை நடவடிக்கைகள் விரைவாகவும் உறுதியானதாகவும் மேற்கொள்ளப்படல் வேண்டும். அண்மைய நெருக்கடிகளைப் பொறுத்தவரையில், நிதியியல் முறைமையில் குறிப்பாக முழுப் பொருளாதாரத்திலும் காணப்பட்ட நெருக்கடிகளின் தாக்கத்தினைத் தணிப்பதற்கான கொள்கையை நடைமுறைக்கிடுவதில் காணப்பட்ட தாமதம் செலவுமிக்கது என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. மறுபுறத்தில் நெருக்கடியினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வளர்ந்து வரும் சந்தைகள் மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு நிதியிடலை வழங்குவதற்கு ப.நா. நிதியத்தினால் நேரகாலத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை இன நெருக்கடிகளைத் தாங்கிக் கொள்ள இந் நாடுகளை இயலச் செய்ததுடன் அவர்களது பொருளாதாரங்களை நேர்மாறாக்கி விரைந்து கொண்டு செல்லவும் உதவியது.
- கொள்கைகள் நீண்டகால நோக்கினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். அதன் மூலமே உருவாகி வரும் நெருக்கடிகளை தடுத்துக் கொள்ளலாம். வேறு விதத்தில் குறிப்பிடுவதாயின் நீண்டகால தொலைநோக்கு இல்லாதிருப்பது கொள்கை வகுப்போர், நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு குறுங்கால தூண்டல் வழிமுறைகளை நாடுவதற்கு இட்டுச் செல்லும்.
- கொள்கை நடவடிக்கைகள் தொடர்பான எதிர்கால ஊகங்களும் தெளிவும் இல்லாதிருப்பது சந்தையில் நிச்சமற்ற தன்மையின் அளவினை அதிகரித்து வருமாகையால் நெருக்கடியில் விழக்கூடிய தன்மையைக் குறைப்பதற்கு மத்திய வங்கிகளும் அரசாங்கங்களும் சந்தைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதில் பொறுப்புக்களை ஏற்கும் நிலையில் இருத்தல் வேண்டும்.
- பேரண்டப் பொருளாதாரத்தில் தங்கியுள்ள நாடுகளின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மை, நெருக்கடி இடம்பெறுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே அவற்றை அதற்கு தயாராக்கிவிடும். எடுத்துக்காட்டாக, வெளிநாட்டு ஒதுக்குகளைக் கட்டியெழுப்புவதற்கு சில நாடுகள் எடுத்த வழிமுறைகள் நெருக்கடி காலத்தில் வெளிநாட்டு நாணயத்திற்கான கேள்வியை ஈடுசெய்வதற்கு அந்நாடுகளை இயலச் செய்தன.
- நெருக்கடிகள், இடர்நேர்வுகளை எதிர்பார்த்திருக்க வேண்டிய தேவையினை சிறந்த நேரத்தில் பதிலிறுத்துவதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டிய தன்மையினையும் எடுத்துக்காட்டுகிறது. இதன் மூலம் அந்நாடுகள் நெருக்கடியான நேரத்தில் உறுதியாக தொழிற்படுவதற்கு ஆயத்தமான நிலையிலும் இருக்கின்றன. சிறந்த நேரத்தில் வங்கிகளுக்காக சுழற்சி மூலதன தாங்கிருப்பு பாதுகாப்புக்களை கட்டியெழுப்பியுள்ள நாடுகள், வங்கிகளின் கடன் தீராற்றல் இடர்நேர்வுகள் எதனையும் ஏற்படுத்தாமல் நெருக்கடி நேரத்தில் இம் மூலதன தாங்கிருப்புக்களை பயன்படுத்திக் கொள்ளமுடியும்.
- நிதியியல் சந்தையில் தொடர்ச்சியாக உருவாகின்ற நெருக்கடிகளைக் குறைப்பதற்கு ஆற்றல்மிக்க நிதியியல் முறைமைகளைக் கொண்டிருப்பது இன்றியமையாததாகும். இதன் விளைவாக உலகம் முழுவதிலுமுள்ள மத்திய வங்கிகள் நிதியியல் துறையின் ஒழுங்குவிதிகளையும் மேற்பார்வையினையும் வலுப்படுத்துவதற்கும் "நேரகாலத்துடன் எச்சரிக்குமுறை" இன் அறிகுறிகளை அடையாளம் காண்பதிலும் கவனம் செலுத்துகின்றன. அண்மைக் காலத்தில் இடம்பெற்ற நிதியியல் நெருக்கடி ஒழுங்குவிதிகள் பேரண்ட முன்மதியுடைய கவனத்தைச் செலுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தினை எடுத்து காட்டுவதுடன் இதன் மூலம் முழு நிதியியல் முறைமையும் தனிப்பட்ட நிறுவனங்களின் உறுதிப்பாடு தொடர்பாக கூடியளவு கரிசனையைக் கொண்டுள்ள நுண்பாக, முன்மதியுடைய ஒழுங்குவிதிகளில் குவிந்த கவனம் செலுத்தப்படுகின்றது.

பல பொருளாதாரங்கள் பல்வேறான வெளியேறல் உபாயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்கனவே ஆரம்பித்ததுடன் உண்மையில், நிதியியல் நிலைமைகளிலான முன்னேற்றங்களைப் பின் தொடர்ந்து சில தலையீடுகள் ஏற்கனவே இயற்கையாக தளர்வுறுத்தப்படுகிறது. 2008இல் நிதியியல் நிறுவனங்களின் தரம் குறைந்த சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்திய சொத்துக்களை மீண்டும் வாங்கும் திட்டத்தினை மாற்றிக் கொள்வதற்கான வழிமுறைகளை பெடரல் றிசேர்வ் ஏற்கனவே எடுத்திருக்கிறது. இத்துடன், வங்கிகள் ஐக்கிய அமெரிக்க அரசிடமிருந்து பெற்ற அவசரகால கொடுகடன் வசதிகளை திருப்பிச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. நெருக்கடியின் தீவிரமான கட்டத்தில் பெடரல் றிசேர்வுடன் ஒப்பந்தம் செய்த அவசரகால பரிமாற்றல் வசதிகளை அனேகமான மத்திய வங்கிகள் தளர்த்தின. யப்பான் மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகள் கம்பனி முறிக் கொள்வனவுத் திட்டங்களை நிறுத்திக் கொண்டன. அவுத்திரேலியா அளவுக்கதிகமான சந்தைத் திரவத் தன்மையைப் பேணும் பொருட்டு அதன் கொள்கை வீதங்களை ஏற்கனவே அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. குறைக்கப்பட்ட வட்டிவீதத்தில் வெளிநாட்டுக் கடன்பாடுகளை வேண்டிக்கொள்ளும் உள்நாட்டு நிறுவனங்களுக்கு உதவும் பொருட்டு உள்நோக்கிய பணவனுப்பல்களை மேம்படுத்துவதற்கு தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரங்கள் செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளைத் தளர்த்தியுள்ளன. 2010 முன்னோக்கிச் செல்கையில் மத்திய வங்கிகளின் கொள்கைகள் கூடியளவில் திரவத்தன்மை முகாமைத்துவத்தில் கவனம் செலுத்துவதன் மூலம் சந்தைகள் மீண்டும் ஒருமுறை பொருளாதார விரிவாக்கத்திற்கு வழியமைக்கும் இன்னுமொரு திடீர் சொத்து அதிகரிப்புக்கு ஏற்ற இறக்கத்தை ஏற்படுத்தாததை உறுதிப்படுத்துகிறது.

## 1.4 நடுத்தர கால பேரண்டப் பொருளாதார தோற்றப்பாடு, சவால்கள் மற்றும் கொள்கைகள்

**இலங்கைப் பொருளாதாரம் போர் முடிவடைந்தமையால் ஏற்பட்ட சாதகமான தோற்றப்பாட்டால் பெருமளவில் வசதிப்படுத்தப்பட்டு நடுத்தர காலத்தில் நெருக்கடிக்கு முன்னரான மட்டத்திற்கு மேலாக உறுதியாக மீட்சியடைந்து வளர்ச்சி அடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.** மேம்பாடடைந்த பேரண்டப் பொருளாதாரச் சூழல், அதிகரித்த முதலீட்டாளர் நம்பகத் தன்மை, போர் முடிவுக்கு வந்ததன் மூலம் உருவாக்கப்பட்ட புதிய முதலீட்டு வாய்ப்புக்கள் பொருத்தமான சீர் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு கொள்கை வகுப்போரால் காட்டப்பட்ட கடப்பாட்டு, பல பாரிய உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களின் விரைந்த நடைமுறைப்படுத்தல் மற்றும் புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேங்களில் மேற்கொள்ளப்படும் புனருத்தாபன மற்றும் மீள்நிர்மாணச் செயற்பாடுகள், மற்றும் உலகப் பொருளாதாரத்தின் எதிர்பார்க்கப்பட்ட மீட்சி அத்தகைய உயர் வளர்ச்சிப் பாதைக்குத் தேவையான தூண்டலை வழங்கும்.

**7-8 சதவிதம் கொண்ட உயர் வளர்ச்சி நடுத்தர தவணையில் எதிர்பார்க்கப்படுகிறது.** வெளிநாட்டு மூலவளங்களின் உட்பாய்ச்சல்கள் குறிப்பிடத்தக்கதாக இருந்தபோதிலும் அத்தகைய வளர்ச்சி இலக்கை அடைவதற்குத் தேவையான முதலீட்டின் மொ.உ.உற்பத்தியின் 30 சதவிதம் பெரும்பாலும் உள்நாட்டுச் சேமிப்புக்களிலிருந்து கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. நடுத்தர தரத்தில் முதலீடுகளை அதிகரிப்பதற்கு உள்நாட்டுச் சேமிப்புக்களிலான அதிகரிப்பு அரசு மற்றும் தனியார்துறை இரண்டிலிருந்தும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைக் கணக்கில் மிகையை உருவாக்குவதையும் தனியார் சேமிப்புக்களை ஊக்குப்படுத்துவதற்கு குறைந்த பணவீக்கத்துடனான பொருத்தமான பேரண்டப் பொருளாதாரச் சூழலைப் பேணுவதையும் தேவைப்படுத்துகிறது. எனவே 2010இலும் அதற்கப்பாலுக்குமான இறைக் கொள்கை அரசின் அரசிறையை அதிகரிப்பதனூடாகவும் மீண்டெழும் செலவினத்தைச் சிக்கனப்படுத்துவதனூடாகவும் இறைத் திரட்சிச் செயல்முறையை பலப்படுத்தவதற்கான மேலும் நெறிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. கேள்வி அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் அதேவேளையில் சந்தைகளின் சுமூகமான தொழிற்பாட்டை வசதிப்படுத்துவதற்குத் தேவையான போதுமான அளவில் திரவத்தன்மையை வழங்குவதற்கு பொருத்தமான மட்டத்தில் நாணய விரிவாக்கம் பேணப்படும். நடுத்தர காலத்திலான பணவீக்கம் தனி இலக்க மட்டத்தில் பேணப்படுமென எதிர்பார்கப்படுகிறது. வெளிநாட்டுத்துறை ஐந்து மாத இறக்குமதிக்குச் சமனான ஒதுக்குகளைப் பேணி நடுத்தர காலத்தில் மேலும் மேம்பாடடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்துடன் மின்வலு மற்றும் வலுத்துறைச் சீர்திருத்தங்கள், முதலீட்டுச் சூழ்நிலையை மேலும் மேம்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகளை அறிமுகப்படுத்தல், போருக்குப் பின்னான வாய்ப்புக்களைப் பயனுறும் விதத்தில் பயன்படுத்துதல், தற்போது நடைபெற்று வரும் மற்றும் திட்டமிடப்பட்ட உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களை உரிய நேரத்தில் பூர்த்தி செய்வதில் ஏற்படும் உட்கட்டமைப்புத் தடைகளைத் தீர்த்தல், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை மேலும் பலப்படுத்துதல் உள்ளிட்ட இணங்காணப்பட்ட அமைப்பு ரீதியிலானதும் நிறுவன ரீதியிலுமான சீர்தீருத்தங்களின் நம்பத்தகுந்த நடைமுறைப்படுத்தல் எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்பார்க்கப்பட்ட சாதகமான உலகப் பொருளாதார நிலைமைககள், முன்னேற்றமடைந்த பாதுகாப்பு நிலைமை மற்றும் முன்பு போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்தான பங்களிப்பு ஏற்றுமதி வர்த்தகத்தையும், சுற்றுலாவையும் அதுபோல் வெளிநாட்டு முதலீடுகளையும் அதிகரிக்கச் செய்வதற்கு உதவும். நடுத்தர காலத்தில் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடையுமென எதிர்பார்ப்பட்டபோதிலும் தொழிலாளர் பணவனுப்பல்கள் உட்பாய்ச்சல்களில் எதிர்பார்க்கப்படும் உயர் அதிகரிப்பு வெளிநாட்டு நடைமுறைக் கணக்கிலான பற்றாக் குறையைக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், அரச மற்றும் தனியார் துறைக்கான வெளிநாட்டு உட்பாய்ச்சல்களின் எதிர்பார்க்கப்பட்ட உயர்மட்டத்துடன் மூலதனம் மற்றும் நிதியியல் கணக்கில் உருவாக்கப்பட்ட மிகை நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையை இருமடங்கிற்கும் கூடுதலாக எதிரீடு செய்யுமென எதிர்பார்க்கப்படுவதுடன் இதன்மூலம் நடுத்தர காலத்தில் சென்மதி நிலுவை மிகையை விளைவிக்கிறது. எனினும், உலக பொருளாதாரத்தின் எதிர்பார்க்கப்பட்டதை குறைந்த வேகத்திலான மீட்சி, அவசியமாகத் தேவைப்படும் மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதிலான தாமதங்கள், குறிப்பாக எண்ணெய் உட்பட பொருட்களின் விலைகளிலான

**அட்டவணை 1.5**

**நடுத்தரகாலப் பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பு (அ)**

| குறிகாட்டி | அலகு | 2008(ஆ) | 2009(இ) | எறிவுகள் 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறை** | | | | | | | |
| சந்தை விலைகளில் மொ.உ.உ | ரூ.பில்லியன் | 4,411 | 4,825 | 5,445 | 6,202 | 7,064 | 8,009 |
| உண்மை மொ.உ.உ வளர்ச்சி | % | 6.0 | 3.5 | 6.5 | 7.5 | 8.0 | 8.0 |
| பணவீக்கம் - மொ.உ.உ சுருக்கி | % | 16.3 | 5.7 | 6.0 | 6.0 | 5.5 | 5.0 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ% | 27.6 | 24.5 | 27.8 | 29.5 | 32.0 | 33.0 |
| உள்நாட்டு சேமிப்பு | மொ.உ.உ% | 13.9 | 18.0 | 18.6 | 20.4 | 23.0 | 24.2 |
| தேசிய சேமிப்பு | மொ.உ.உ% | 17.8 | 23.9 | 24.2 | 26.3 | 29.2 | 30.4 |
| **வெளிநாட்டுத் துறை** | | | | | | | |
| வர்த்தக இடைவெளி | ஐ.அடொ.மில் | -5,981 | -3,122 | -4,874 | -5,588 | -6,307 | -7,042 |
| ஏற்றுமதிகள் | ஐ.அடொ.மில் | 8,111 | 7,085 | 8,094 | 9,067 | 10,197 | 11,528 |
| இறக்குமதிகள் | ஐ.அடொ.மில் | 14,091 | 10,207 | 12,968 | 14,655 | 16,504 | 18,571 |
| பணிகள் (தேறிய) | ஐ.அடொ.மில் | 401 | 391 | 517 | 695 | 837 | 996 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | ஐ.அடொ.மில் | -3,886 | -214 | -1,642 | -1,638 | -1,642 | -1,766 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | மொ.உ.உ% | -9.5 | -0.5 | -3.5 | -3.1 | -2.7 | -2.6 |
| திரண்ட நிலுவை (ஈ) | ஐ.அடொ.மில் | -1,385 | 2,725 | 700 | 967 | 902 | 970 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் (மாதத்திற்கான இறக்குமதி) (ஈ) (உ) (ஊ) | மாதங்கள் | 1.4 | 6.0 | 5.3 | 5.5 | 5.5 | 5.0 |
| படுகடன் பணிவிகிதம் (எ) | % | 15.1 | 19.0 | 14.5 | 15.3 | 19.8 | 18.5 |
| **இறைத்துறை** | | | | | | | |
| அரசிறை மற்றும் கொடைகள் | மொ.உ.உ% | 15.6 | 15.1 | 15.4 | 16.6 | 17.5 | 17.6 |
| செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் | மொ.உ.உ% | 22.6 | 24.9 | 23.0 | 23.1 | 22.5 | 22.4 |
| நடைமுறைக் கணக்கு நிலுவை | மொ.உ.உ% | -2.0 | -3.6 | -1.9 | 0.4 | 1.0 | 1.2 |
| திரண்ட வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை | மொ.உ.உ% | -7.0 | -9.8 | -7.5 | -6.5 | -5.0 | -4.8 |
| உள்நாட்டு நிதியிடல் | மொ.உ.உ% | 7.1 | 5.0 | 5.1 | 3.5 | 3.4 | 3.5 |
| **நிதியியல்துறை (ஏ)** | | | | | | | |
| ஒதுக்குப் பண வளர்ச்சி | % | 1.5 | 13.1 | 13.5 | 14.0 | 13.9 | 13.4 |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) | % | 8.5 | 18.6 | 13.5 | 14.1 | 14.0 | 13.5 |
| குறுகிய பண வளர்ச்சி ($M_1$) | % | 4.0 | 21.4 | 7.5 | 8.1 | 8.0 | 8.0 |
| தனியார்துறைக் கொடுகடனின் வளர்ச்சி | % | 7.0 | -5.7 | 13.2 | 15.1 | 17.3 | 17.2 |
| அரச துறைக் கொடுகடனின் வளர்ச்சி | % | 48.8 | 13.1 | 7.4 | 5.1 | 0.6 | -1.5 |

(அ) 2010 மார்ச்சு மாத நடுப்பகுதியில் கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாக் கொண்டது.
(ஆ) திருத்தியமைக்கப்பட்டவை
(இ) தற்காலிகமானவை
(ஈ) வெளிநாட்டுச் சொத்துப் பாகுபாட்டு மாற்றத்தால் 2008 இற்கான பெறுமதிகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன
(உ) ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பெறுகைகள் நீங்கலாக
(ஊ) 2009 இல் ப.நா.நிதியத்திடம் இருந்து எதிர்பார்க்கப்படும் துணை நில் ஒழுங்கு வசதிகளின் பெறுகைகள் 2010 இலிருந்து வெளிநாட்டு அலுவல்சார் ஒழுங்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
(எ) பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகளிலான வருவாயின் சதவீதமாக மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள்
(ஏ) ஆண்டு இறுதிப் பெறுமதிகளின் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி

மூலங்கள்: நிதி, திட்டமிடல் அமைச்சு
இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

அதிகரிக்கப்படாத அதிகரிப்பு, வானிலை தொடர்பான அதிர்வுகள் என்பன நடுத்தரகால இலக்குகளை அடைவதை மோசமாகப் பாதிக்கும்.

**உலக நிதியியல் சந்தையின் மீட்சியுடன் இணைந்து உள்நாட்டுப் போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட சாதகமான முதலீட்டாளர் மனப்பாங்கு 2010இலும் அதற்கப்பாலும் வெளிநாட்டு நேரடி முதலீடு உள்ளிட்ட அரசு மற்றும் தனியார்துறைக்கான கூடியளவு வெளிநாட்டு நிதியியற் பாய்ச்சல்களை கிடைக்கச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.** மேலும் உலகளாவிய திரவத்தன்மைத் தடைகள் தணிவடைவதன் மூலம் அரசு மற்றும் தனியார்துறை இரண்டும் பன்னாட்டு மூலதனச் சந்தையில் போட்டி வீதங்களில் நிதியங்களைத் திரட்டக் கூடியதாகவிருக்கும். 2008இன் இறுதியிலான ஐ.அ.டொலர் 5.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2009 இறுதியில் இலங்கையின் அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து கிடைக்க இருக்கும் ஐ.அ.டொலர் 6.4 பில்லியன் கொண்ட நிதியியற் கடப்பாட்டை அரசு கொண்டுள்ளது. இக் கடப்பாடுகளுக்கான செயற்றிட்ட நடைமுறைப்படுத்தல் காலம் 2 - 5 ஆண்டுகள் வீச்சில் காணப்பட்டதுடன் இதில் அநேகமானவை நாட்டின் உற்பத்தி இயலளவை மேலும் விரிவடையச் செய்யும் உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களுக்கானவையாகும். இத்துடன், குறிப்பாக சுற்றுலா, வேளாண்மை, கட்டவாக்கம், மற்றும் தயாரிப்புத்துறைகளில் உயர் அளவிலான வெளிநாட்டு நேரடி முதலீடுகள் எதிர்பார்க்கப்படுகிறது.

**வடக்கு மற்றும் கிழக்கை நாட்டின் எஞ்சிய பகுதியுடன் ஒருங்கிணைத்தமையால் உருவாக்கப்பட்ட புதிய வாய்ப்புக்களின் நன்மைகளை உயர்ந்தளவிற்குக் கொண்டுவருவதற்கு பயனுறுதிமிக்க திட்டமிடல் மற்றும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துதற்கான பலமான கடப்பாடு அத்தியாவசியமானதாகும்.** "கிழக்கின் உதயம்" மற்றும் "வடக்கின் வசந்தம்" என்பவற்றின் கீழ் இனங்காணப்பட்ட பல்வேறு புனருத்தாபனம், மீள் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் உரிய நேரத்திலான நடைமுறைப்படுத்தல் போரால் பாதிப்படைந்த பிரதேசங்களிலும் அதுபோல் நாட்டின் எஞ்சிய பகுதிகளிலும் பொருளாதாரச் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கான வழியை அமைக்கும். உட்கட்டமைப்பு,

வேளாண்மை, சுற்றுலா, போக்குவரத்து, கலம், கல்வி, கைத்தொழில், வர்த்தகம். மீன்பிடி மற்றும் பணிகள் துறையில் புதிய முதலீட்டு வாய்ப்புக்கள் கிடைக்கத்தக்கதாகவுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கிற்கான முதலீட்டுச் சபையால் ஏற்கனவே பல எண்ணிக்கையான செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. நீண்ட காலத்தில் ஆகக் கூடிய நன்மைகளை அடைவதற்கு இரண்டு மாகாணங்களுக்கான அபிவிருத்தி செயற்பாடுகளை தொடர்ந்து விரைவுபடுத்துவதற்கான தேவையை கடப்பாடு காட்டியது.

**உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட் வேளாண்மைப் பொருட்களின் விலைகளிலான தளம்பல், பணவீக்கத்தின் உயர் தளம்பலிற்கு இட்டுச்சென்றது.** நீண்ட காலத்தில் பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் முக்கிய காரணியாக பொருத்தமான நாணய மற்றும் இறைக் கொள்கைக;டாக மொத்தக் கேள்வியை முகாமை செய்வதாகும். எனினும், களஞ்சிய வசதிகள் இல்லாமை, போக்குவரத்திலான பற்றாக்குறைகள் போன்ற வழங்கற் பக்கத்துத் தடைகள், குறிப்பிட்ட துறைகளிலான தொழிலாளர் பற்றாக்குறை மற்றும் பருவகாலப் பிரச்சனைகளை பொருட்களின் விலைகளிலான குறுகியகால தளம்பலைக் குறைப்பதற்காகத் தீர்க்கவேண்டும். நீர்ப்பாசனம், பின்தங்கிய பிரதேசங்களிலான போக்குவரத்து, விரிவாக்கப் பணிகள், உயர்விளைவைக் கொண்ட பயிர்வகைகளின் கிடைப்பனவு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்ற வசதிகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் கொள்கைகள் உற்பத்திச் திறனை மேம்படுத்துவதுடன் உற்பத்திச் செலவையும் குறைக்கும். அதேவேளை, பருவகாலங்களிடையே பாரிய விலைத் தளம்பல்களைத் தீர்ப்பதற்கு தாங்கிருப்புக்களைப் பேணுவதற்கு தேசிய மற்றும் பிராந்திய மட்டங்களிலான முக்கிய உணவுப் பொருட்களின் களஞ்சிய வசதிகளை அதிகரிப்பதற்கு வழிமுறைகள் தேவைப்படுகிறது. இத்துடன், முன்னோக்கிய விற்பனைகள் ஒப்பந்தங்கள் மற்றும் பொருட்கள் பரிமாற்றல்களை மேம்படுத்தல் விலைத் தளம்பலைத் தீர்ப்பதற்கும் வேளாண்மையாளர்களின் வருமானத்தை உறுதிப்படுத்துவதற்கும் உதவியாக இருக்கும்.

**உலக நிதியியல் நெருக்கடியின் அதுபோல் உள்நாட்டு நிதியியல் நிறுவனங்களுடன் தொடர்பான சில நிறுவனங்கள் செயலிழந்தமையால் ஏற்பட்ட பிரச்சனைகள் காரணமாக உள்நாட்டில் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சனைகள் நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பை பலப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது.** உறுதியான நிதியியல் முறைமை நிதியியல் துறையின் வாடிக்கையாளர் பாதுகாப்பையும், அபிவிருத்தியையும் உறுதிப்படுத்துவது மட்டுமன்றி பேரண்டக் கொள்கை வழிமுறைகளின் பயனுறுதிமிக்க ஊடுகடத்தலுக்கும் உதவுகிறது. சட்டக் கட்டமைப்பை பலப்படுத்துவதனூடாக நிதியியல் முறைமையின் ஆற்றலையும் பாதுகாப்பையும் மேம்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளுக்கு மேலதிகமாக ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வைக் கட்டமைப்பை மேலும் முன்னேற்ற வேண்டும். நிதியியல் முறைமையில் பொதுமக்கள் நம்பகத்தன்மையை பலப்படுத்தும் மேலதிக வழிமுறையாக வைப்புக் காப்புறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அண்மைய பன்னாட்டு நிதியியல் குழப்பநிலை வைப்பாளர் இழப்பீட்டுத் திட்டத்திற்கான பயனுறுதிமிக்க பொறிமுறைக்கான தேவையை வெளிப்படுத்தியது. எனவே, கட்டாய வைப்புக் காப்புறுதித்திட்டத்தை நிறுவுதல் நிதியியல் முறைமையில் பொதுமக்கள் நம்பகத் தன்மையை மேம்படுத்துவதற்கும் பேணுவதற்கும் உதவும். வைப்புக் காப்புறுதி, நிதியியல் பாதுகாப்பு வலையின் முக்கிய கூறாகவும், விருப்பப்படி மேற்கொள்ளும் தீர்மானங்களுக்கான நோக்கெல்லையை மட்டுப்படுத்துகிறது. செயலிழந்த வங்கியைத் தீர்த்துவைக்கும் செலவைக் கட்டுப்படுத்த உதவுகிறது. வங்கி செயலிழப்புடன் ஈடுபடுவதற்கான பயனுறுதிமிக்க பொறிமுறையை வழங்குகிறது. வெளிப்படையான வைப்புக் காப்புறுதித் திட்டம் நிதியியல் பாதுகாப்பு வலையின் ஏனைய கூறுகளான முன்மதியுடனான ஒழுங்குவிதி மற்றும் இறுதிக் கடன் ஈவோன் வசதியையும் பூர்த்தி செய்கிறது. மேலும், குறிப்பாக உயர் இடையீட்டுச் செலவைக் குறைப்பதற்கும் நிதியியல் முறைமையின் மீளெழுச்சியை மேம்படுத்துவதற்கும் நிதியியல் முறைமையில் மேலதிக சீர்திருத்தங்களும் தேவைப்படுகிறது.

**கேள்வி முகாமைத்துவக் கொள்கைகளை வசதிப்படுத்தவதற்கும் உயர் மற்றும் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய பொருளாதார வசதிக்கு உதவுவதற்கும் இறைத் திரட்சி செயல்முறையை மேலும் பலப்படுத்த வேண்டும்.** அரசின் அரசிறையின் சார்பு ரீதியிலான குறைந்த மட்டம் நாட்டில் வரி முறைமையைப் பலப்படுத்துவதற்கான தேவையை வலியுறுத்துகிறது. இதன் அடிப்படையில் பொருத்தமான வீதங்களுடனும் விரிவடைந்த தளத்துடன் வரி முறைமையை அனைத்து மட்டங்களிலும் எளிமையாக்கல், வரிச் சலுகைகளையும் விலக்களிப்புக்களையும் குறைத்தலும் ஒழுங்குமுறைப்படுத்தலும், முறைமையை எளிமையாக்குவதன் மூலம் இறக்குமதித் தீர்வையிலான சிக்கலான தன்மையைக் குறைத்தல், வரிச் சேகரிப்பை மேம்படுத்துவதற்காக புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் அதே வேளையில் வரி நிருவாகத்தை மேம்படுத்தல் பயனுள்ளதாக அமையும். வினைத்திறன் மிக்க வரி அமைப்பு தனியார்துறை பொருளாதாரச் செயற்பாட்டையும் மூலதன உருவாக்கத்தையும் ஊக்கப்படுத்தும். குறுகிய காலத்தில் மீண்டெழும் செலவினத்தைக் குறைப்பதற்கான வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் செலவினச் சிக்கனத்திலிருந்தான சாத்தியமான இலாபங்களை நடுத்தர காலத்தில் மட்டுமே எதிர்பார்க்கலாம். மீண்டெழும் செலவினத்தின் தொடர்ச்சியான உயர் வளர்ச்சி நீடித்து நிலைத்திருக்க முடியாததால் அத்தகைய செலவின மூலங்களின் அடிப்படைக் காரணங்களைத் தீர்ப்பதன் மூலம் மாற்றல், உதவு தொகைகள், ஓய்வூதியங்கள் மற்றும் வட்டிக்கொடுப்பனவுகளை ஒழுங்குமுறைப்பதுதுவதற்கான பயனுறுதிமிக்க வழிமுறைகளை அறிமுகப்படுத்த வேண்டும். அதே வேளையில், சமூகத்தின் பாதிப்புக்குள்ளாகக் கூடிய பிரிவினர்களுக்கு உரிய பாதுகாப்பு வலைகள் மூலம் பாதுகாப்பளிக்க வேண்டும்.

**ஒட்டுமொத்த பொருளாதார வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கும் நீண்டகால பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் ஏற்கனவே இனங்காணப்பட்ட அமைப்பு ரீதியிலானதும் நிறுவன ரீதியிலானதுமான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.** இது தொடர்பாக, ஆற்றல்மிக்க ஒழுங்குமுறைப்படுத்தல் முறைகளுடன்

வினைத்திறனையும் உற்பத்தித்திறனையும் மேம்படுத்துவதற்கு அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள், நலம் மற்றும் கல்வி துறைகளை ஒழுங்குமுறைப்படுத்தல் முறைமைகள் ஆகிய துறைகளிலான பொருத்தமான மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். அநேகமான அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் அரசுக்குச் சொந்தமான தனி உடமைகளாக இருந்த போதிலும் மின்வலு, பெற்றோலியம், நீர் வழங்கல், பயணிகள் போக்குவரத்து போன்ற முக்கிய உட்கட்டமைப்புப் பணிகளை வழங்கும் அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் உச்ச மட்டத்திற்குக் கீழேயே தொழிற்படுகின்றன. இந் நிறுவனங்களில் அநேகமானவற்றால் வழங்கப்படும் பணிகள் விருப்பத்திற்குரிய மட்டத்தின் கீழ் காணப்பட்டு வர்த்தக ரீதியாக செயற்படக்கூடிய நிறுவனங்களாக அமைவதை விட பொதுமக்கள் நிதியங்களில் பெருமளவில் தங்கியுள்ளனவாகக் காணப்படுகின்றன. எனவே, வரவு செலவுத்திட்டத்தில் அவை தங்கியிருப்பதைக் குறைப்பதற்கு வினைத்திறனை மேம்படுத்தும் அதேவேளையில் இந் நிறுவனங்கள் செலவை மீட்கும் அடிப்படையிலாவது தொழிற்படுவது முக்கியமாகும். அரசின் கொள்கை நிகழ்ச்சி நிரலில் கூறப்பட்டவாறு அடுத்த ஆறு ஆண்டுகளில் வேலைத்தல வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறனை 50 சதவீதத்தால் அதிகரிப்பதற்கான முன்மொழிவையும் நம்பகத்தகுந்த முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

**வலுத்துறையின் நிதியியற் தொழிற்பாடுகளிலான பற்றாக்குறை நாட்டின் நிதியியல் முகாமைத்துவத்தில் மோசமான சவால்களைத் தொடர்ந்து ஏற்படுத்தின.** கடந்த ஆண்டுகளாக, இலங்கை மின் சபையின் நிதியியல் நிலைமை குறிப்பிடத்தக்களவில் மோசமாகத் தொடர்ந்து விளங்கி இறை மற்றும் நாணய முகாமைத்துவம் மீது அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. எனவே, இலங்கை மின்வலுச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பலமான சீர்திருத்த நிகழ்ச்சி நீண்ட காலத்தில் இலங்கை மின் சபையை நிதியியல் ரீதியில் ஆற்றல் நிறைந்த நிறுவனமாக ஏற்படுத்தும் வகையில் நடைமுறைப்படுத்தப்படுவதன் மூலம் அரச வரவு செலவுத் திட்டத்திலும், பற்றாக்குறைகளை எதிர்கொள்வதற்கு வங்கிக் கொடுகடனிலும் அது தங்கியிருப்பதைக் குறைக்கிறது. நீர் மின்வலு மற்றும் வெப்ப மின்வலுவின் உருவாக்கம், ஊடுகடத்தல் மற்றும் பகிர்ந்தளிப்பு போன்ற தொழிற்பாடுகளின் முக்கிய துறைகளுக்கு தனிச் சிறப்பான இலாப நிலையங்களை அறிமுகப்படுத்தல் மீளமைப்புச் செயல்முறையில் கவனத்தில் கொள்ளப்படலாம். தேவை ஏற்படுமிடத்து இது இலாபகரமான நிலையங்கள் வெளிப்படையான தன்மை மற்றும் அவற்றின் தொழிற்பாடுகளின் பொறுப்புக்கூறும் தன்மையை மேம்படுத்தும் பொருட்டு கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலும் பட்டியலிடப்படலாம். வலுத்துறையின் நிலைத்து நீடித்திருக்கும் தன்மை நடுத்தர காலத்தில் குறைந்த செலவுடைய வலு உருவாக்கத்திற்கு நகர்வதில் பெருமளவு தங்கியுள்ளது. தற்போது நடைபெற்றுவரும், திட்டமிடப்பட்ட குறைந்த செலவுடைய வலுப்பொறிகள் எதிர்வரும் ஆண்டுகளில் தேசிய மின் தொகுதிக்கு வலுவைச் சேர்த்து பாதகமான வானிலைகள் மற்றும் எண்ணெய் விலை அதிர்வுகளால் வலுத்துறை இடருக்குள்ளாவதைக் குறைக்கும். எனவே, திட்டமிடப்பட்ட குறைந்த செலவுடைய வலுச் செயற்றிட்டங்களை நேரத்துடன் பூர்த்தி செய்வது தவிர்க்க முடியாததாகும். ஏனெனில், இவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் எந்தவொரு தாமதமும் மின்வலு உருவாக்கத்துக்கான பெற்றோலிய இறக்குமதிகள் மீதான உயர் செலவுக்கும் அதுபோல் உயர்மின் தீர்வையின் பேணலுக்கும் இட்டுச் செல்லும். வலுத்துறையின் விலையிடல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் பண்புகளும் இலங்கை பொது வசதிகள் ஆணைக்குழுவின் கீழ் பலப்படுத்தப்படவேண்டும்.

**இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியற் தொழிற்பாடுகள் 2009இல் ஓரளவு முன்னேற்றங்களைக் காட்டியபோதிலும் நீண்ட காலத்தில் நிதியியல் ரீதியில் ஆற்றல் மிக்கதாக இருப்பது இடர்நேர்வுக்குள்ளாகக் கூடியதாக காணப்படுகிறது.** இலங்கை மின் சபைக்கு உயர் உதவியளிக்கப்பட்ட விலையில் உலை எண்ணெயை வழங்கல், செலவைப் பிரதிபலிக்கும் வகையில் சில்லறை விலைகளைத் திருத்தாமை, இலங்கை மின்சபை உள்ளிட்ட பல நிறுவனங்களால் வெளிநின்ற கொடுகடனின் கணிசமான அளவு தீர்க்கப்படாமை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதியியல் நிலைமையில் பாரிய சுமையை ஏற்படுத்தியது. எனவே, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை நீண்ட காலத்தில் நிதியியல் ரீதியில் ஆற்றல்மிக்க நிறுவனமாக ஏற்படுத்துவதற்கு பொருத்தமான மாற்றங்களை அறிமுகப்படுத்த வேண்டும். இவை தூய்மி, வேளாண்மை இரசாயனங்களை வழங்கல் மற்றும் வான்போக்குவரத்து எரிபொருளை வழங்கல் போன்ற இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு செயற்பாடுகளை உள்ளடக்கி உள்நாட்டுச் சந்தையில் பெற்றோலியப் பொருட்களை விலையிடுவதற்கான உண்மை ரீதியானதும் நெகிழ்ச்சித் தன்மையானதுமான பொறிமுறையை அறிமுகப்படுத்தல் மற்றும் இலாப நிலைய கோட்பாட்டை நடைமுறைப்படுத்துவதை உள்ளடக்குகிறது. அதேவேளையில், நடைபெற்றுவரும் எண்ணெய் அகழ்வுச் செயற்பாடுகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும் வேளையில் மன்னார் படுகையில் உள்ள சில துண்டுகளிலும் அதுபோல் சிறந்த வாய்ப்புக்களைக் கொண்டுள்ள காவேரிப் படுகைகளிலுள்ள சில துண்டுகளிலும் எண்ணெய் அகழ்வுக்கான அடுத்த சுற்றுக்கான உரிமம் வழங்கலை ஆரம்பிப்பது முக்கியமானதாகும்.

**புதிய முனைகளில் அறிவை ஆராய்வதற்கும் பொருளாதாரத்தின் இயக்கவாற்றல் தேவைகளை தற்போதைய "வழங்கலால் தூண்டப்பட்ட" பொருளாதார கல்வி முறையிலிருந்து "கேள்வியால் தூண்டப்பட்ட" கல்வி முறைமைக்கு மாற்றி தொழிற்சந்தைத் தேவைப்பாடுகளை எதிர்கொள்வதற்கு உயர் கல்வி முறைமையின் மீள் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்படுகிறது.** அரச பொதுக் கல்வியை மேம்படுத்துவதில் முன்னேற்பாடான நடவடிக்கைகளை ஏற்கனவே எடுத்துள்ள போதிலும் மத்தி மற்றும் புற பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கிடையேயான ஏற்றத்தாழ்வைத் தீர்ப்பதற்கான முன்னெடுப்புக்களை மேலும் பலப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் அதே வேளையில் மூன்றாம் நிலைக் கல்வியை அடைவதிலும் அதன் தொடர்பை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இறைத் தடைகளைக் கவனத்திற் கொள்கையில் அரச பல்கலைக்கழகங்களில் பல்கலைக்கழக கல்வியை அடைவதை விரிவாக்குவதற்கான வாய்ப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் கேள்வியைவிட குறைவாகக் காணப்படுகிறது. எனவே, பல எண்ணிக்கையான மாணவர்கள் ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் அவுத்திரேலியாவிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக தெற்கு ஆசியப் பிராந்தியத்திலுள்ள

பல்கலைக்கழுங்கங்கள் உள்ளிட்ட வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் அனுமதியைத் தேடுகின்றனர். அவ்வாறான கல்விக் கணக்கில் வெளிநாட்டுச் செலாவணியின் வெளிப்பாய்ச்சல் கணிசமானளவில் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, நாட்டில் உயர் கல்விக்கு கணிசமானளவில் அதிகரித்துச் செல்லும் கேள்வியைச் சமாளிப்பதற்கு பொருத்தமான ஒழுங்கு விதிகளுடனும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகளுடனும் உயர் கல்வித்துறையில் பங்கேற்பதற்கு அரசுசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களை அனுமதிப்பது அத்தியாவசியமாக வந்துள்ளது.

**மூலதனம் மற்றும் தொழில் முயற்சியை ஈர்க்கும் மாற்று முறையாக அரச - தனியார் பங்குடைமைகள் இனங்காணப்பட்டுள்ளன.** அரச தனியார் பங்குடமைகளை ஊக்குவித்தல், குறிப்பாக இறைப் பற்றாக்குறையை விரிவுபடுத்துவதும் வெளிநின்ற அரச படுகடனில் அதிகரிப்பை ஏற்படுத்தும் வரவு செலவுத் திட்டத்தினூடாக நிதியிடும் தொடர்ச்சியான தற்போதைய முறைக்கெதிராக பல்வேறான உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதை வலியுறுத்தியது. அரச தனியார் பங்குடைமையின் முக்கியத்துவத்தை இனங்கண்டதிற்கு மத்தியிலும், விழிப்புணர்வு இல்லாமை மற்றும் அத்தகைய செயற்றிட்டங்களில் தனியார்துறை முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்கு தயாரிக்கப்பட்ட திட்டம் இல்லாமை உள்ளிட்ட பல காரணங்களால் இத்துறையில் கடந்த ஆண்டுகளில் இலங்கை ஏற்படுத்திய முன்னேற்றம் போதுமானவையற்றனவாகத் தோன்றுகிறது. எனவே, அரச தனியார் பங்குடைமையின் கீழ் தனியார்துறை பங்கேற்கக் கூடிய சிறப்புச் செயற்றிட்டங்களை இனங்காண்பது அத்தியாவசியமாக இருக்கையில் இது அரசதனியார் பங்குடமையில் தீவிரமாக ஈடுபடுவதற்கு தனியார்துறைக்கான பொருத்தமான சூழலை உருவாக்குகிறது.

**நடுத்தர காலத்தில் இலங்கையின் ஏற்றுமதி உபாயம், பொருட்கள் அது போல் சந்தைகளை பன்முகப்படுத்தலில் கவனம் செலுத்த வேண்டும்.** பொருட்களைப் பன்முகப்படுத்தல் பணிகளை நோக்காகக் கொண்ட ஏற்றுமதிகளிலும் நடுத்தர காலத்தில் ஏற்றுமதிகளில் நீடித்து, நிலைத்திருக்கக் கூடிய வளர்ச்சியை அடைவதில் குறிப்பாக வர்த்தக அடையாளமிடல், பெறுமதி கூட்டல் மற்றும் பொருளின் பன்முகப்படுத்தலூடாக ஏற்றுமதிப் பொருட்களிலும் கூடிய பெறுமதி கூட்டலை நோக்கி நகர வேண்டும். தகவல் தொடர்பூட்டல் தொழில்நுட்பம் தொடர்பான பணிகள் அதாவது வெளி மூலங்களிலிருந்து வியாபார செயல்முறையைப் பெறுதல் மற்றும் வெளி மூலங்களிலிருந்து அறிவுச் செயல் முறையைப் பெறுதல் போன்ற அறிவை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிகளின் மேம்பாடு பணிகளின் ஏற்றுமதியிலிருந்தான வருவாயை அதிகரிப்பதும் அத்தியாவசியமாகும். பன்முகப்படுத்தப் பட்ட சந்தைகளில் தெற்காசிய பிராந்தியத்தில் கிடைக்கத்தக்க வாய்ப்புக்களில் போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். இது ஏற்கனவே இப் பிராந்தியத்திலுள்ள நாடுகளுக்கான இலங்கை ஏற்றுமதிகளின் அதிகரித்த பங்கில் பிரதிபலித்துள்ளது. இந்திய - இலங்கை இருபுடை வர்த்தக ஒப்பந்தத்திற்குப் பின்பு இந்தியா இலங்கைக்கான ஆறாவது பெரிய ஏற்றுமதி முடிவிடமாக வந்துள்ளது. ஏனைய பிராந்திய நாடுகளும் முக்கிய வர்த்தகப் பங்காளார்களாக வந்துள்ளதுடன் இலங்கை ஏற்கனவே பாக்கித்தானுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது. ஆழமான பிராந்தியபொருளாதார ஒருங்கிணைப்பூடாக உரிய முறையில் ஆராய்ந்து பார்த்தால் இப் பிராந்தியத்தில் சார்பு ரீதியில் பாரிய நுகர்வோர் தளம் வெளிநாட்டு வர்த்தகத்தைத் தூண்டுவதற்கான முக்கிய ஊக்குவிப்பை வழங்கும். இதேவேளை, துறைமுகப் பணிகளின் உயர் போட்டித் தன்மையைக் கவனத்திற் கொண்டும் நாட்டிலுள்ள முக்கிய துறைமுகச் செயற்றிட்டங்கள் பலவற்றின் அபிவிருத்தியைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டும் புதிய வியாபார உருமாதிரியினுள் துறைமுகத் துணைத் தொழிற்பாடுகளை உபாயரீதியில் அபிவிருத்தி செய்வது மிக முக்கியமானதாகும். இது தொடர்பாக, சவுத் ஏசியா கேற்வே ரேமினல்களின் செயலாற்றத்தில் பிரதிபலிக்கப்பட்டவாறு அரச தனியார் பங்குடமை ஏற்கனவே வெற்றி பெற்றுள்ளமை மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இம் மூலதனத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கு பொது மக்களையும் வரவேற்பதன் மூலம் அத்தகைய நிறுவனங்களின் சொத்துரிமை மேலும் பரந்தளவில் காணப்படுமாயின் இது சமூகத்திற்கு கூடிய பெறுமதியை உருவாக்கும். இது அத்தகைய தொழில் முயற்சிகளின் ஆளுகையையும் பொறுப்புக்கூறும் தன்மையையும் அதிகரிக்கும்.

**பொருளாதார வளர்ச்சிக்கான நிதியியில் துறையின் முழுமையான உள்ளார்ந்த வளத்தை தெளிவாக அறிந்து கொள்வதற்கும் நிதியியல் துறையின் மீளெழுச்சியை மேம்படுத்துவதற்கும் நிதியியல் துறையின் மீளெழுச்சியை மேம்படுத்துவதற்கும் நிதியியல் முறைமையிலுள்ள நிறுவன ரீதியிலான மற்றும் சந்தை உட்கட்டமைப்பை விரிவாக்குவதற்கும் பலப்படுத்துவதற்கும் மத்திய வங்கியால் பல மேலதிக வழிமுறைகள் எடுக்கப்பட வேண்டும்.** நிதியிடலைத் தூண்டுதல் மற்றும் பன்னாட்டு வர்த்தகத்தையும் முதலீட்டையும் வசதிப்படுத்தல் என்பவற்றின் மூலம் உலகப் பொருளாதாரத்துடன் இலங்கைப் பொருளாதாரத்தை ஒருங்கிணைக்கும் பொருட்டு ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியை (எக்ஸிம் பாங்க்) நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. இவ்வங்கி பொருட்கள், பணிகள் மற்றும் மூலதனத்தில் நாட்டின் பன்னாட்டு வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கு ஏற்றுமதியாளர்களுக்கும் இறக்குமதியாளர்களுக்கும் நிதியியல் உதவியை வழங்குவதில் ஈடுபடும். சந்தை அபிவிருத்தி தொடர்பாக பொருட்களின் எதிர்கால விற்பனைச் சாதனங்கள் மற்றும் களஞ்சியப்படுத்தல் பிணையங்கள் முகாமைத்துவம் என்பற்றைக் கொண்டுள்ள பல சொத்து வகுப்பு வர்த்தகப் பொறிமுறையொன்று நிறுவப்பட வேண்டும். இலங்கை உள்ளிட்ட பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கம்பனிப்படுகடன் சந்தை போதியளவு விருத்தி செய்யப்படாமையால் கம்பனி நிதியிடலின் முக்கிய மூலமாக வங்கித் தொழில் துறை விளங்குகின்றது. இதன்படி, கம்பனி முறிச் சந்தையில் மேலும் வளர்ச்சியை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்டு பல புதிய முன்னெடுப்புக்களை மேற்கொள்ளுவதன்மூலம் இது பொருளாதாரத்தின் நிதியியல் தேவைகளில் மிகக்கூடிய பங்கை வகிப்பதற்கு இயலச் செய்யும்.

**உள்நாட்டு நிதியியில் முறைமையை உறுதியாக்குவதற்கும் உலக நிதியியல் முறைமையுடன் இலங்கைப் பொருளாதாரத்தின் கூடிய ஒருங்கிணைப்பை ஊக்குவிப்பதற்கும் வழிகாட்டலில் அறிவிக்கப்பட்டவாறு மூலதனக் கணக்கு கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான செலாவணிக் கட்டுப்பாடு வரையறைகளை மேலும் தாராளமயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.**

நிதியியல் துறையை தாராளமயப்படுத்தும்போது பொருளாதாரத்துக்கு ஏற்பட்ட நன்மையை அனுபவிக்கும் வேளையில் நிதியியல் முறைமையின் ஒட்டு மொத்த உறுதிப்பாடு பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கி எப்போதும் படிப்படியானதும், கட்டம் கட்டமானதுமான அணுகுமுறையைப் பின்பற்றியது. இதன்படி, வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலான அபிவிருத்திகளை கவனத்திற் கொண்டு இலங்கையர்களுக்காக வெளிநாட்டில் உள்ள வங்கிகளில் கணக்கைத் திறப்பது மற்றும் பேணுவது மீதான செலாவணிக் கட்டுப்பாடுகள் 2010 மார்ச்சில் நீக்கப்பட்டதுடன் வெளிநாட்டவர்கள் வேறுபட்ட சொத்துக்களில் முதலிடுவதற்கு கூடியளவு நெகிழ்ச்சித் தன்மைக்கு இணங்கப்பட்டது. வெளிநாட்டவர்கள் நிதியியற் சொத்துக்களில் முதலிடுவதற்கு கூடிய நெகிழ்ச்சித் தன்மையை வழங்கும் அதேவேளை தனியார்துறை தனிநபர்களுக்கான மாற்று முதலீட்டு மற்றும் கடன்பெறல் வாய்ப்புக்களை வழங்கும் வழிகாட்டலில் பல மேலதிக வழிமுறைகளும் அறிவிக்கப்பட்டன. இப் புதிய வழிமுறைகள் முதலீட்டாளர் நம்பகத் தன்மையை மேலும் மேம்படுத்துவதற்கும் வெளிநாட்டு செலாவணிச் சந்தையை உறுதிப்படுத்துவதற்கும் பங்களிப்புச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**பல்வேறு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அதிர்வுகளுக்கு ஏற்றுமதித்துறையின் மீளெழுச்சியை மேலும் பலப்படுத்த வேண்டும்.** இலங்கையின் ஏற்றுமதித்துறை, அண்மைக் காலத்தில் பல்புடை நூலிழை ஒழுங்கு முறைமை நீக்கப்பட்டமை, எண்ணெய் அதிர்வுகள் உள்ளிட்ட பொருட்களின் விலை அதிர்வுகள், போர் இடர்நேர்வு கட்டுப்பணம் விதிக்கப்பட்டமை, தொழிலாளர் பிரச்சனைகள் போன்ற பல்வேறான அதிர்வுகளை எதிர்கொண்டு அவற்றை வெற்றிகரமாகத் தோற்கடித்தது. 2010 ஓகத்து வரை ஜீஎஸ்பி திட்டத்தின் கீழ் ஐரோப்பிய சந்தைக்கான முன்னுரிமை வாய்ந்த நுழைவை இலங்கை தொடர்ந்து பெறும் என ஐரோப்பிய ஒன்றியம் எடுத்துக்காட்டியுள்ளது. இலங்கை அரசு ஐரோப்பிய ஒன்றியத்தால் எழுப்பப்பட்ட சில கரிசனைகள் மீது அதனுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதுடன் சில முக்கிய விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்பு அடையப்படுமிடத்து ஐரோப்பிய ஒன்றியம் ஜீஎஸ்பி வசதியை 2011 இறுதிவரை நீடிப்பதற்கான அதன் விருப்பத்தைத் தெரிவித்துள்ளது. ஜீஎஸ்பி வசதியால் கிடைக்கத்தக்கதாவுள்ள நன்மைகள், குறிப்பாக இடர்பாடுள்ள காலங்களில் ஐரோப்பிய சந்தையில் ஏனைய நாடுகளின் உற்பத்தியாளர்களுடன் இலங்கை உற்பத்தியாளர்கள் போட்டிபோடுவதற்கு உதவியது. எனினும், நாட்டின் வெளிநாட்டு வர்த்தகத்தின் எதிர்காலம் முன்னுரிமையான தீர்வைச் சலுகைகளிலன்றி அதன் பொருட்கள் மற்றும் பணிகளின் ஒப்பீட்டு நன்மையில் தங்கியிருக்கும் என்பதுடன் இக் காரணியை தெளிவாக இனங்காண வேண்டும். எனவே, ஏனைய நாடுகளிலிருந்தான அதே மாதிரியான பொருட்களின் உற்பத்தியாளர்களுடன் திறமையாக போட்டியிடும் பொருட்டு உள்நாட்டுக் கைத்தொழில்கள் உயர்மட்டப் பெறுமதி கூட்டலை இலக்காகக் கொண்டிருப்பதுடன் அவற்றின் உற்பத்தித்திறனை உயர்த்துவதற்கு தொழில்நுட்பத்தை மேம்படுத்த வேண்டும். இலங்கை ஏற்றுமதியாளர்கள் முன்னைய இடர்பாட்டுக் காலங்களுக்கு மத்தியில் அவர்களின் மீளெழுச்சியை மெய்ப்பித்ததுடன் அதன் போட்டித் தன்மை வாய்ந்த நன்மையை மேம்படுத்தும் புதிய வழிதுறைகள் மற்றும் வழிமுறைகளை தொடர்ந்து கண்டுபிடிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (சிறப்புக்குறிப்பு 7ஐ பார்க்கவும்)

**சமாதானம் ஏற்பட்டமை நாட்டின் சுற்றுலாவிற்கு சாதகமான தோற்றப்பாட்டைக் கொண்டு வந்ததுடன் பொருளாதாரத்திற்கு பெரும் எண்ணிக்கையான நன்மைகளை வழங்கவிருக்கிறது.** சமாதானத்தின் விளைவு அதிகரித்த சுற்றுலா வருகைகளிலும் சுற்றுலாத்துறையின் மீளெழுச்சியிலும் நன்கு புலப்படுகிறது. 2010இல் சுற்றுலா வருகைகளின் எண்ணிக்கை கணிசமானளவில் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் இவ் வளர்ச்சி உத்வேகம் எதிர்வரும் ஆண்டுகளில் தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. வருகையின் அதிகரித்த எண்ணிக்கையின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு பிரதான சுற்றுலா முடிவிடங்களிலுள்ள வசதிகளை விரிவுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். பயனுறுதிமிக்க சந்தைப்படுத்தல் உபாயத்துடன் சுற்றுலா வருகைகள் எதிர்வரும் சில ஆண்டுகளினுள் 1 மில்லியன் அளவை விஞ்சுமென எதிர்பார்க்கப்படுகிறது. சுற்றுலாவுக்கான இலங்கையின் வாய்ப்புக்கள் பாதகமான பயண ஆலோசனைகள், போதுமற்ற திட்டமிடல், போதியளவு உட்கட்டமைப்பு இல்லாமை, மோசமான சாதனங்கள் மற்றும் பயனுறுதியற்ற சந்தைப்படுத்தல் உத்திகள் காரணமாக கடந்த ஆண்டுகளில் ஊக்கமிழந்தது. எனவே, நாட்டின் சுற்றுலாக் கைத்தொழிலின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கு நீண்டகால சுற்றுலா அபிவிருத்தித் திட்டத்தைத் தயாரிப்பது முக்கியமானதாகும். குறுகிய காலப்பகுதியினுள் அதன் பல்வேறு காட்சிகளையுடைய கவர்ச்சியிடங்களை அடையக்கூடியதாகவும் வேறுபட்ட ஆர்வத்தைக் கொண்டுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கு விருப்பமானவற்றை வழங்கும் முடிவிடமாக இலங்கை இருப்பதை மூலதனமாக மாற்ற வேண்டும். உள்நாட்டு வான் போக்குவரத்தின் ஊக்குவிப்பும் சுற்றுலாக் கைத்தொழிலுக்கு உதவும். இலங்கைக்கே தனித்துவமான தாவரங்கள், விலங்குகளின் வாழ்க்கைச் சூழலை ஆய்வு செய்தல், பொழுது போக்கு, துணிகரச் செயல், மரபுரீதியான மருந்து, மதச் செயற்பாடுகள், மற்றும் கலாச்சாரம் மற்றும் பரம்பரைச் சொத்து ஆகியதுறைகளில் சுற்றுலாவை மேம்படுத்தலாம். இத்துறைகளிலான முதலீடுகள் சுற்றுலா விடுதிகள், சாப்பாட்டுக் கடைகள் மற்றும் உணவகங்கள், போக்குவரத்து வசதிகள், மருத்துவம், விளையாட்டு, மாநாடு, பொருட் கொள்வனவு, பொழுதுபோக்கு மற்றும் களியாட்ட வசதிகள் மற்றும் விருந்தோம்பல் கைத்தொழில் தொடர்பான துணைப்பணிகள் ஆகியவற்றில் காணப்படலாம்.

**சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறைக்கு சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும்.** உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கேள்வியை வழங்கி பாரிய கைத்தொழில்களுக்கு வழங்கலை மேற்கொள்வதன் மூலம் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் துறை பொருளாதாரத்துக்குக் கணிசமானளவில் பங்களிப்புச் செய்வதன் மூலம் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி பிராந்திய ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்கு உதவுகிறது. உலகளாவிய பொருளாதார மந்தநிலை மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளிலான குறைந்த உள்நாட்டுக் கேள்வியின் மோசமான தாக்கத்தைக் கவனத்திற் கொண்டு சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு உதவுவதற்கு மீள் நிதியிடல் திட்டங்கள் உள்ளடங்கலாக பல வழிமுறைகள்

அறிமுகப்படுத்தப்பட்டன. நேரடி உதவிக்கான தடைகளைக் கவனத்திற் கொள்கையில் அரசிலிருந்து எதிர்பார்க்கப்படும் நேரடி உதவியும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் நிதியிடல் தடைகளை குறைக்கும் பொருட்டு சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான கொடுகடன் உத்தரவாதத் திட்டமொன்றை நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்கீழ், இத் தொழில் முயற்சிகள் போட்டி வட்டி வீதங்களில் வங்கி நிதிக்கான கூடிய நுழைவைக் கொண்டிருப்பதுடன் அவற்றின் உற்பத்தி இயலளவையும் விரிவடையச் செய்யும். மேலும், முன்னுரிமை அடிப்படையில் பாதிப்புக்குள்ளான தொழில் முயற்சிகளுக்கு உதவுவதற்கு நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறை தேவைப்படுகிறது. இம் முயற்சிகளுடன் இணைந்து செல்லும் விதத்தில் தோற்றம் பெற்றுவரும் சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கு சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் அவற்றின் தொழிற்பாடுகளை மீள ஒழுங்குபடுத்துவதும் அவற்றின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதும் அத்தியாவசியமானதாகும்.

**சமாதானம் ஏற்பட்டமை, பொருத்தமான பேரண்டப் பொருளாதாரச் சூழல் என்பவற்றால் உருவாக்கப்பட்ட நம்பிக்கை உலகப் பொருளாதார மீட்சியால் பூர்த்தி செய்யப்பட்டு பொருளாதாரத்தை விரைந்த வீதத்தில் வளர்ச்சியடையச் செய்கிறது.** வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணிகள் துறைகள் ஆகிய பொருளாதாரத்தின் அனைத்து முக்கிய துறைகளிலும் உயர் வீதத்தில் வளர்ச்சியடைவதற்கான பாரிய உள்ளார்ந்த வளம் காணப்படுகிறது. துறைமுகங்கள், விமான நிலையங்கள், வீதிகள், புகைவண்டி, நீர்ப்பாசனம், நீர் வழங்கல் ஆகிய துறைகளில் உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல் பொருளாதாரத்தின் உற்பத்தித்திறன் இயலளவை கணிசமானளவில் அதிகரித்து உயர் பொருளாதார வளர்ச்சியை வசதிப்படுத்துகின்றது. விரைந்த பொருளாதார வளர்ச்சி அதன் சொந்த சூழல் சிக்கல்கள் சிலவற்றைக் கொண்டிருக்கலாம். உயர் பொருளாதார வளர்ச்சி மற்றும் சூழல் பாதுகாப்பு மற்றைய ஒவ்வொன்றையும் வலுப்படுத்தவேண்டும். எனவே, சூழல் பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்புக்கு அபிவிருத்திச் செயல்முறையில் உரிய அங்கீகாரம் வழங்கப்படவேண்டும்.

## சிறப்புக்குறிப்பு 2

## போருக்குப் பின்னரான அபிவிருத்தி நடவடிக்கைகளும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் முதலீட்டுக்கான ஏது நிலைகளும்

தீவிரவாதத்தின் பிடியிலிருந்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மீட்கப்பட்டமையானது, அந்தப் பகுதிகளுக்கு மட்டுமல்லாது முழு நாட்டுக்குமே பொருளாதாரச் செழிப்பை ஏற்படுத்தக்கூடிய பரந்தளவிலான சந்தர்ப்பத்தை வழங்கியுள்ளது. கடந்த மூன்று தசாப்த போரால் ஏற்பட்ட அடிப்படைக் கட்டுமானங்களினது அழிவு, உற்பத்தி இயலுமையின் குறைப்பாவனை, முதலீட்டாளர்களின் நம்பிக்கையீனம் மற்றும் மனித அவலங்களால் இரண்டு மாகாணங்களின் அபிவிருத்தியும் பாதிப்படைந்தது. நாட்டின் ஏனைய பகுதிகளுடனான இந்த இரு மாகாணங்களின் மீள் இணைப்பானது, ஏறக்குறைய இந்தத் தீவின் மூன்றில் இரண்டு பங்கு கரையோரப்பகுதி மற்றும் கடல் வளங்களையும் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கு பயிர்ச்செய்கை நிலத்தையும் வினைத்திறனான பாவனைக்கு வழங்கும். அண்மைக் காலம் வரை இராணுவ மையங்களாக விளங்கிய இப் பிரதேசத்திற்கான கட்டுப்பாடற்ற அடையும் தன்மை அப்பகுதிகளில் வேளாண்மை மற்றும் மீன்பிடிச் செயற்பாடுகள் மற்றும் தொடர்பான தொழிற்சாலைகளின் அபிவிருத்திக்கான பலமான உள்ளார்ந்த வளத்தை வழங்கியது. இந்த இரண்டு மாகாணங்களும் மீளவும் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து, அரசாங்கம் இரண்டு மாகாணங்களுக்குமான சிறப்பு நடவடிக்கைகளாக, "நெகனகிற நவோதய" (கிழக்கின் உதயம்) நிகழ்ச்சித்திட்டத்தினைக் கிழக்கு மாகாணத்திலும், வடக்கின் வசந்தம் (உத்துறு வசந்தய) நிகழ்ச்சித்திட்டத்தினை வடக்கு மாகாணத்திலும் இப் பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கும் அபிவிருத்தியை விரைவுபடுத்தும் பொருட்டு கைவிடப்பட்ட தொழிற்சாலைகளைப் புதுப்பிப்பதையும் புதிய கைத்தொழில்களின் அபிவிருத்தியையும் வசதிப்படுத்தியது. இரு நிகழ்ச்சித்திட்டங்களும் இரு கூறுகளைக் கொண்டுள்ளன; மக்கள் தமது வாழ்வாதாரத்தைப் பெற்றுக் கொள்வதை இயலச் செய்வதற்கான மீள்குடியேற்றம் மற்றும் புனருத்தாபனக்கூறு, மற்றும் நீண்டகால அபிவிருத்தியை அதிகரிப்பதற்கும், இரு மாகாணங்களிடையேயும் அது போல் நாட்டின் எஞ்சிய பகுதியுடனும் இணைப்பை வசதிப்படுத்துவதற்கான கூறு.

### நெகனகிற நவோதய (கிழக்கின் உதயம்)[1]

கிழக்கு மாகாணத்தில், நீண்ட காலப் பாதிப்பிற்குள்ளான இம் மாகாணத்தின் பொருளாதாரம் மற்றும் சமூக கட்டமைப்பினை முன்னேற்றும் முகமாக நெகனகிற நவோதய அபிவிருத்தித் திட்டம் 2007இல் ஆரம்பிக்கப்பட்டது. பன்னாட்டு நியமங்களுடன் இசைந்திருக்கும் வகையில், கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளக ரீதியில் இடம்பெயர்ந்த அனைத்து நபர்களும் 2009 இறுதியளவில் மீளக் குடியமர்த்தப்பட்டனர். 2005இல் ஆரம்பமான வடகிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாண நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான நிர்மாணப் பணி பல எண்ணிக்கையான நன்மைபெறும் குடும்பங்களுக்கு வீடமைப்பை வழங்குவது விரைவுபடுத்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் உடனடிக் கரிசனைக்குள்ளாகும் பகுதிகளாக, விவசாயம், நீர்ப்பாசனம், வாழ்வாதார உதவிகள், மீன்பிடி மற்றும் விலங்கு வேளாண்மை அபிவிருத்தி, வீதிகள், சக்தி மற்றும் வலு, கல்வி, அரச நிர்வாகம், சுகாதாரம் மற்றும் சுகாதாரம் என்பன அமைகின்றன. இதற்கு மேலதிகமாக, நாட்டின் ஏனைய பகுதிகளுடன் தொடர்புகளை அதிகரித்தல் மற்றும் தனியார் துறை முதலீடுகளைத் தூண்டுதல் ஆகியவற்றினை நோக்கமாகக் கொண்டு மாபெரும் உட்கட்டுமான செயற்றிட்டங்கள் "ரண்தோர" இற்கு அமைவாக, தேசிய உட்கட்டுமான அபிவிருத்தித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாகாணத்திலுள்ள

[1] மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து ஆண்டறிக்கை - 2007, சிறப்புக் கட்டுரை 2, பக்கம் 16-18 இனைப் பார்க்கவும்.

நகரங்கள் மற்றும் பட்டினங்களை நாட்டின் ஏனைய பிராந்தியங்களுடன் இணைக்கும் நோக்கில் ஏற்கனவே 3000 கிலோ மீற்றர்களுக்கும் மேலதிகமான வீதிகளும் 30 பாலங்களும் அமைக்கப்பட்டு கூடிய வினைத்திறன்மிக்க வசதிகளை வழங்கி மக்கள் நடமாட்டத்தை இயலச் செய்து தனியார்துறை முதலீடுகளை ஊக்குவிக்கின்றது. வலுத் துறையிலான முதலீடு கூடிய எண்ணிக்கையான குடும்ப அலகுகள் மின்வலுவைப் பெறுவதற்கு இயலச் செய்தது. இப் பகுதியின் நீர்வழங்கல் மற்றும் நீர்ப்பாசன முறைமைகளில் ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்தியானது, நீர் சுத்திகரிப்பு பொறிகளின் இயலுமை அதிகரிப்பு, மாகாணத்தின் பிரதான நகரங்களுக்கான நீர்வழங்கலின் விரிவாக்கம் மற்றும் விவசாய உற்பத்தித்திறன் அதிகரிப்பு என்பவற்றிற்குப் பங்களித்துள்ளது. விவசாயத் துறைக்கு வழங்கப்பட்ட நிதி மற்றும் நிதியல்லாத வளங்களின் விளைவாக, தயாரிப்புக்களின் தரம் அதிகரித்த வேளையில் நெல் மற்றும் ஏனைய களப் பயிர்கள் பயிரிடப்படும் நிலத்தின் அளவும் அதிகரித்துள்ளது. துறைமுக அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் ஒலுவில் துறைமுகக் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புதிய காவல் நிலையங்கள், நீதிமன்றங்கள், பாடசாலைக் கட்டடங்கள், விளையாட்டு மைதானங்கள், சுகாதார சிகிச்சை நிலையங்கள், மருந்தகங்கள், சுற்றுலா விடுதிகள் மற்றும் அலுவலகக் கட்டடங்கள் என்பனவற்றின் கட்டுமானங்களினை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வடக்கின் வசந்தம் (உத்துறு வசந்தய)

2009 மேயில் போர் முடிவடைந்ததுடன், மீள்குடியேற்றம், புனரமைப்பு மற்றும் மீள்கட்டுமான நடவடிக்கைகள் மற்றும் வடமாகாணத்தில் பாதுகாப்பினை வலுப்படுத்தல் போன்றவற்றிற்கான நடுத்தரகால உபாயக் கட்டமைப்பை உருவாக்குவதற்காக சனாதிபதி செயலணிக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்த செயலணிக் குழு 2009இன் நடுப்பகுதியில் "வடக்கின் வசந்தம்" நிகழ்ச்சித்திட்டத்தினை துரிதமாக அறிமுகப்படுத்தியது. இது மீள்குடியேற்றம் மற்றும் புனரமைப்புச் செயற்பாட்டிற்கான 180 நாள் துரிதகதி நிகழ்ச்சித்திட்டத்தினை உள்ளடக்கியுள்ளதுடன், இம் மாகாணத்தின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக தற்போதுள்ள இரண்டு வருட நிகழ்ச்சித்திட்டத்தினையும் கொண்டமைந்தது. 2010 - 2012 காலப்பகுதிக்கான திட்டமிடப்பட்ட முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கான மொத்த முதலீடாக ரூ.295 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சிறு அட்டவணை 2.1**

**2010 - 2012 இற்கான வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்திற்கான மொத்த முதலீடு**

| துறை | தொகை (ரூ. மில்.) |
|---|---|
| சமூகப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி | 15,091 |
| பொருளாதார உட்கட்டுமானத்தினை முன்னேற்றுதல் | 176,247 |
| சமூக உட்கட்டமைப்பினை வலுப்படுத்தலும், சமூக சேவைகளை விரிவாக்குதலும் | 29,313 |
| வினைத்திறனான துறைகளுக்குப் புத்தாக்கமளித்தல் | 28,477 |
| மக்கள் குடியிருப்பு | 45,739 |
| மொத்தம் | **294,867** |

*மூலம் : தேசிய திட்டமிடல் திணைக்களம்*

வட மாகாணத்திலே, மொத்தமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களில் 182,025 நபர்கள் 2010 மாச்சு நடுப்பகுதியளவில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளார்கள். இப் பகுதிகளில், உட்கட்டுமான செயற்றிட்டங்களான மின்சாரம், நீர் வழங்கல், சுகாதாரம், போக்குவரத்து, நீர்ப்பாசனம், விலங்கு வேளாண்மை அபிவிருத்தி, நன்னீர் மீன்பிடிப்பு, நலம், கல்வி, விளையாட்டு மற்றும் கலாச்சார அலுவல்கள் ஆகியவை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஏ-9 பெருந்தெரு, வவுனியா - ஹொறவபொத்தானை, மதவாச்சி - மன்னார், மன்னார் - பூநகரி, மன்னார் - கேரதீவு - நாவற்குழி மற்றும் பரந்தன் - முல்லைத்தீவு வீதிகள், வடபகுதி புகையிரதப் பாதை, மன்னார் பாலம், கொக்காவில் பரிமாற்றுக் கோபுரம் ஆகியவற்றின் மீள்கட்டுமானம் மற்றும் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி செயற்றிட்டம் போன்ற விசேட செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், மக்கள் புதிய தொழில்கள் ஆரம்பிப்பதற்கு உதவுவதற்காக வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் பல தொழிற்பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சமய மற்றும் கலாச்சார அபிவிருத்தியை ஊக்குவிக்கும் முகமாக கோவில்கள், பாடசாலைகளின் புனர்நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டன.

போருக்குப் பின்னரான காலப்பகுதியில் முதலீட்டிற்கான ஏது நிலைகள்

போரின் பின்னான காலப்பகுதியில் நடைபெற்று வரும் உட்கட்டுமான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் உட்கட்டுமானம், விவசாயம், உல்லாசப் பயணத்துறை, போக்குவரத்து, நலத்துறை, கல்வி, கைத்தொழில், வர்த்தகம் மற்றும் பணிகள் துறை உள்ளடங்கலான பல பகுதிகளில் முதலீட்டிற்கான வாய்ப்புக்களைத் தருகின்றன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுக்கான தயாரிப்பு (புடவை, ஆடைகள், தளபாடங்கள் மற்றும் கெட்டியான ஓடுகள்) மற்றும் வேளாண்மை (அரிசி, சோளம், பழுங்கள் மற்றும் மரக்கறி மற்றும் ஆழ்கடல் மீன்பிடி) போன்ற துறைகளில் பல்வேறு செயற்றிட்டங்கள் ஏற்கனவே இலங்கை முதலீட்டுச் சபையினால் (இமுச) அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இந்த இரு மாகாணங்களிலும் காணப்படுகின்ற நீளமான, கண்ணைக் கவரும், மாசற்ற கடற்கரைகள், சூழலியல் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் பல முக்கியத்துவம் வாய்ந்த கலாச்சார மற்றும் வரலாற்று மையங்கள் என்பன செழிப்பான உல்லாசத் துறைக்கு வலுச் சேர்க்கும். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளிடம் திருகோணமலை, யாழ்ப்பாணம், நிலாவெளி, அறுகம்குடா மற்றும் பாசிக்குடா ஆகிய பிரதேசங்கள் பிரபலமாகி வருகின்றமையினால் இவ்விடங்களில் விடுமுறை இல்லங்கள், விருந்தினர் இல்லங்கள், உல்லாசப் பயண விடுதிகள் மற்றும்

உணவகங்களை ஸ்தாபிப்பதற்கான பாரிய முதலீட்டிற்கான மற்றும் இருக்கின்ற வளங்களை மீளமைப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. உல்லாசப் பயணத்துறையின் துணைப் பணிகளான பயண மற்றும் சுற்றுலா முகவர்கள், சுற்றுலா தகவல் மையங்கள் மற்றும் மனித வள அபிவிருத்தி உள்ளடங்கலான ஏனைய வள வழங்கல்கள் ஆகியவற்றிற்கான முதலீட்டு வாய்ப்புக்களும் அதிகரித்துள்ளது.

பாரிய அளவிலான வர்த்தக விவசாயம், விலங்கு வேளாண்மை அபிவிருத்தி, பயிர்ச் செய்கை நிலங்கள், நீர்ப்பாசனம் மற்றும் ஏனைய உட்கட்டுமான வசதிகளின் உதவியுடன் கூடிய பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாயத் தயாரிப்புக்கள் மற்றும் மனித வளம் ஆகியவற்றில் மிகப்பாரிய அளவில் முதலிடக் கூடிய வாய்ப்புக்கள் விவசாயத் துறையில் காணப்படுகின்றன. கரையோர மற்றும் ஆழ்கடல் மீன்பிடி உள்ளடங்கலான மீன்பிடித்துறையில் மிகப் பெரிய முதலீட்டிற்கான சாத்தியங்கள் இருக்கின்றன. இவ்விரு மாகாணங்களிலும் சராசரியாக 25 கிலோமீற்றர் அகலமான கடற்கரை நீர்ப்பரப்பு காணப்படுவதுடன், பெறுமதிமிக்க மீன் மற்றும் இறால் வகைகளை அடர்த்தியாகக் கொண்ட பாக்கு நீரிணை, பேதுரு கண்ட மேடை, மன்னார் குடாவின் பரவைக் கடல் மீன் திட்டுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 1,180 கிலோமீற்றர் நீளமான கடல்வளமும் இருக்கின்றது.

தற்போதைய கைத்தொழில்களான உப்பு, சீமெந்து, இரசாயனப் பொருட்கள், சீனி மற்றும் கடதாசி ஆலை என்பவற்றுடன் புதிய கைத்தொழில்களான ஆடை, மென்பொருள் உற்பத்திகள், விவசாய உணவுத் தயாரிப்புகள், பாற்பண்ணை உற்பத்திகள், பொதி செய்யப்பட்ட மீன், வலு, எரிவாயு போன்ற உற்பத்திக்கான முதலீட்டு வாய்ப்புக்களும் உருவாகியுள்ளன. இவ்விரு மாகாணங்களில் காணப்படும் வீடுகளிற்கான தேவைக்கு, தொடங்கப்பட்டுள்ள வீட்டு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் பாரிய பங்களிப்பை வழங்கும். வட மாகாணத்தில் மட்டும், ஏறக்குறைய 235,000 வீடுகள் முழுமையாக அல்லது பகுதியளவில் சேதமடைந்துள்ளதுடன் இவை மீள கட்டியெழுப்பப்பட வேண்டும். மேலும், போக்குவரத்து, கல்வி மற்றும் நலத் துறை நிறுவனங்கள் அது போல் தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்பம் மற்றும் வெளிமூலங்களிலிருந்து பணிகளைப் பெற்றுக் கொள்ள என்பனவற்றிலான முதலீடும் தேவைப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, வளமுள்ள காவேரிப் படுகை தற்போது எண்ணெய் அகழ்விற்காகத் திறக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சிக்கான புதிய மூலங்களை அனுமதிக்கும் சாத்தியமான முதலீட்டு உள்ளார்ந்த வளத்தை இனங்கண்ட பின்பு, அரசு ஏற்கனவே பல்வேறு வழிகளில் அவற்றினை நடைமுறைப்படுத்தி உதவுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. இதற்கமைய, அடிப்படை உட்கட்டுமானத் தேவைகளை மீளமைப்பு செய்வதற்கு மேலதிகமாக, முதலீட்டாளர்களை ஊக்கப்படுத்தக் கூடிய சட்ட, நிர்வாக மற்றும் நிறுவன ரீதியிலான கட்டமைப்பினை வலுப்படுத்தும் படிமுறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இப் பிராந்தியங்களில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக பல்வேறு வரிச் சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன (சிறப்புக் குறிப்பு 16). போருக்குப் பின்னரான முதலாவது அரங்கமாக, "சமாதான நடவடிக்கைகளுக்கான நிகழ்ச்சித்திட்ட வியாபார முதலீட்டு அரங்கு - யாழ்ப்பாணம்" 2009 யூனில் நடாத்தப்பட்டுள்ளது. தனியார் துறைக்கு உதவுவதற்காக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 137 வங்கிக் கிளைகளை நிறுவுவதற்கான ஒப்புதல் மத்திய வங்கியால் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 29 சதவீதத்தினையும், மொத்த சனத்தொகையில் 14.5 சதவீதத்தினையும் கொண்டிருப்பினும் நீண்ட கால மோதல் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான[2] பங்களிப்பு தொடர்ந்தும் 8.4 சதவீதமாக மிகக் குறைந்த மட்டத்திலும், வறுமையுடைய பின் தங்கிய பிரதேசங்களாகவே காணப்படுகின்றன. இருப்பினும், நெகனகிற நவோதய மற்றும் வடக்கின் வசந்தம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சாத்தியப்பாடான முதலீடுகளின் பெருக்கம் என்பன உற்பத்தித் திறனை அதிகரித்த உயர் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியை ஏற்படுத்துவதுடன், வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகத்தினை மேம்படுத்தல் ஆகியவற்றினையும் உருவாக்கும். இது இவ்விரு மாகாணங்கள் மற்றும் மொத்த நாட்டின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்தி வறுமை நிலையினைக் குறைவடையச் செய்யும் அதேவேளை பொருளாதாரத்துக்குப் பங்களிப்புச் செய்து பகிர்ந்தளிப்பிலான ஏற்றத்தாழ்வைக் குறைத்து நாட்டின் அபிவிருத்தியை விரைவுபடுத்தும்.

2. 2008 இன் மாகாண மொ.உ.உ வின் அடிப்படையில்